Stay Connected with:
Uthayan.com

வன்னி : ரூபா.20
யாழ். : ரூபா.25
கொழும்பு : ரூபா.30

# உதயன்

UTHAYAN - A Lively National Tamil Daily




தெளிவான வானிலை. சிறு மழைக்கான சாத்தியம் உண்டு.

30°c 28°c


பக்கம் 24 | சுடர்: 28 | கதிர்: 249 | வள்ளுவர் ஆண்டு: 2044 | ஆடி 17, வெள்ளி 02.08.2013


# இராணுவம் வேண்டாம்

## கூட்டமைப்பு, ஆளும் தரப்பு வேட்பாளர்கள் வலியுறுத்தல்

யாழ்ப்பாணம், ஒக.2

தேர்தல் நடவடிக்கைகளில் இராணுவத் தலையீடு இருக்கக் கூடாது என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும், ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியும் இணைந்து வலியுறுத்தியுள்ளன.

யாழ்.மாவட்டச் செயலகத்தில் நேற்று வியாழக்கிழமை நண்பகல் தேர்தலில் போட்

தொடர்ச்சி: பக்கம் 21



### கருணாநிதியும் கோரிக்கை

சென்னை,ஓக 02

சுதந்திரமாகத் தேர்தல் நடைபெறவேண்டும் என்றால், வடக்கு மாகாணத்தில் இராணுவம் அகற்றப்படவேண்டும் என்று தி.மு.க. தலைவர் கருணாநிதி வலியுறுத்தியுள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ள

தொடர்ச்சி: பக்கம் 21

## வடமேல், மத்திய மாகாணங்களில் 112 கட்சிகள், 46 சுயேச்சைகள்

கொழும்பு, ஒக. 2

வடக்கைத் தவிர ஏனைய இரண்டு மாகாண சபைகளில் 106 உறுப்பினர்களைத் தெரிவுசெய்வதற்காக 158 அரசியல் கட்சிகள், சுயேச்சைக் குழுக்களைச் சேர்ந்த 2 ஆயிரத்து 879 வேட்பாளர்கள் களத்தில் குதித்துள்ளனர்.

வேட்புமனுத் தாக்கல் செய்வதற்கான கால அவகாசம் நேற்று நண்பகல் 12 மணியுடன் நிறைவடைந்தது. இதையடுத்து தாக்கல் செய்யப்பட்ட வேட்பு மனுக்களின் எண்ணிக்கையை அடிப்படையாகக் கொண்டு தேர்தல் திகதி அறிவிக்கப்பட்டது.

இதற்கமைய குறித்த தினத்தன்று காலை 7 மணிமுதல் மாலை 4 மணிவரை தேர்தலை நடத்துவதற்கான சகல நடவடிக்கைகளையும் மேற்கொள்ளுமாறு மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலர் அறிவுரை வழங்கியுள்ளார்.

மூன்று மாகாணத் தேர்தல்

தொடர்ச்சி: பக்கம் 21

## மூதூர் படுகொலை குறித்து நீதி விசாரணை இல்லை

### மனித உரிமை கண்காணிப்பகம் குற்றச்சாட்டு

நியூயோர்க்,ஒக. 2

திருகோணமலை மூதூரில் கொலை செய்யப்பட்ட 17 தன்னார்வப் பணியாளர்கள் தொடர்பான விசாரணைகளில் இலங்கை அரசு முன்னேற்றகரமான நடவடிக்கைகளை எடுக்கவில்லை என்று குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

நியூயோர்க்கைத் தலைமையகமாகக் கொண்ட மனித உரிமைகள் கண்காணிப்பகம் இந்தக் குற்றச்சாட்டை முன்வைத்துள்ளது.

2006 ஆம் ஆண்டு ஓகஸ்ட்

தொடர்ச்சி: பக்கம் 21

# செப். 21 தேர்தல்

## வடக்கில் 14 கட்சிகள் 29 சுயேச்சைகள் போட்டி

யாழ்ப்பாணம், ஓகஸ்ட் 2

வடக்கு மாகாண சபை உள்ளிட்ட மூன்று மாகாண சபைகளுக்கு செப்ரெம்பர் மாதம் 21ஆம் திகதி தேர்தல் நடத்தப்படும் என்று தேர்தல்கள் ஆணையாளர் நேற்று அறிவித்தார்.

வடக்கு, வடமேல், மத்திய மாகாண சபைகளின் தேர்தலுக்கான வேட்புமனுத் தாக்கல் தினம் முடிவடைந்ததை அடுத்து தேர்தல் திகதி அறிவிக்கப்பட்டது.

மாகாண சபைகள் உருவாக்கப்பட்டு 26 வருடங்கள் ஆகிவிட்டபோதும் வடக்கு மாகாணத்துக்கு இப்போதே முதல்முறையாகத் தேர்தல் நடத்தப்படுவதாலும் அரசுக்கு தோல்வி கிடைக்கக்கூடிய ஒரே மாகாணமாக இது கருதப்படுவதாலும் வடக்கு மாகாண சபைத் தேர்தல் பெரும் எதிர்பார்ப்பை ஏற்படுத்தியிருக்கிறது.

வடமாகாணத் தேர்தலை நடத்தும்படி தேர்தல்கள் ஆணையாளருக்கு ஜூலை மாதம் 5ஆம் திகதி இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ உத்தரவிட்டிருந்தார். அதன்படி ஜூலை 25ஆம் திகதி முதல் ஓகஸ்ட் முதலாம் திகதி வரையில் வேட்பு மனுக்கள் கோரப்பட்டிருந்தன. நேற்று நண்பகல் 12 மணியுடன் வேட்புமனுத் தாக்கலுக்கான காலம் நிறைவடைந்தது.

வடக்கு மாகாண சபைத் தேர்தலில் 14 கட்சிகள், 29 சுயேச்சைக் குழுக்கள் களமிறங்கவுள்ளன.

இவற்றில் இலங்கைத் தமி

தொடர்ச்சி: பக்கம் 21


தமிழக மீனவர் கைது விடயத்தில் பாராமுகம் 06

உடனடித் தேவை சீர்திருத்தங்களே 07

விக்றோரியை வீழ்த்தியது மானிப்பாய் பரிஷ் வி.க 22

தென்னாபிரிக்காவை வீழ்த்தி இலங்கை அபார வெற்றி 23


## ஆஸ்திரேலியா செல்ல முயன்ற 116 பேர் கடலில் மடக்கிப் பிடிப்பு



கொழும்பு,ஒக. 2

சட்டவிரோதமான முறையில் கடல் வழியாக ஆஸ்திரேலியா நோக்கிச் செல்ல முயன்ற 116 பேர் இலங்கைக் கடற்படையினரால் நேற்றுமுன்தினம் இரவு கைது செய்யப்பட்டுள்ளனர்.

சென்.பிரான்ஸிஸ் சேவியர் என்ற கப்பல் மூலம் பயணித்துக் கொண்டிருந்த போது கிழக்குக் கடற்பகுதியில் வைத்துக் கடற்படையினர் மடக்கிப் பிடித்துள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்களில் 59 ஆண்கள்,26 பெண்கள் மற்றும் 31 சிறுவர்கள் அடங்குவதாகக் கடற்படையினர் தெரிவித்துள்ளனர்.

தொடர்ச்சி: பக்கம் 21

## வடக்கில் பெண் அணியும் தேர்தல் களத்தில்

யாழ்ப்பாணம், ஒக.2

வடமாகாண சபைத் தேர்தலில் யாழ். மாவட்டத்தில் பெண் ஒருவரை முதன்மை வேட்பாளராகக் கொண்ட பெண்கள் அணியொன்று சுயேச்சையாகக் களமிறங்கியுள்ளது.

வடமாகாணசபைக்கான வேட்புமனுத் தாக்கல் இறுதி நாளான நேற்று குறித்த பெண்கள் அணி சுயேச்சைக் குழுவாக களமிறங்க வேட்புமனுத் தாக்கல் செய்துள்ளது.

தம்பிப்பிள்ளை இருதயராணியை முதன்மை வேட்பாளராகக் கொண்ட சுயேச்சைக்குழு - 9 பெண்கள் அணியாக களமிறங்கியுள்ளது. இவர்களில் 16 வேட்பாளர்கள் பெண் வேட்பாளர்கள், 3 பேரே ஆண் வேட்பாளர்களாவர். இவர்களுக்கு புறாச் சின்னம் வழங்கப்பட்டுள்ளது.

(ஜ-5)

## படையினரின் மறியல் காலம் மீண்டும் நீடிப்பு

திருகோணமலை, ஒக. 2

திருகோணமலையில் 2006 ஆம் ஆண்டில் ஐந்து மாணவர்கள் சுட்டுக் கொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பில் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட பொலிஸ் விசேடஅதிரடிப்படையின் 12 அதிகாரிகளின் விளக்கமறியலும் நீடிக்கப்பட்டுள்ளது.

அவர்களை, எதிர்வரும்

தொடர்ச்சி: பக்கம் 21

# வடக்குத் தேர்தலை கண்காணிக்க மூன்று அமைப்புகள் களத்தில்

யாழ்ப்பாணம், ஒக. 2

எதிர்வரும் வட மாகாண சபைத் தேர்தலின் போது கண் காணிப்புப் பணிகளில் ஈடுபடுவதற்காக 3 சர்வ தேசக் கண்காணிப்பு நிறு வனங்கள் பிரசார காலத்திலேயே இங்கு வரவுள்ளன என யாழ்.மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலர் சுந்தரம் அருமை நாயகம் தெரிவித்தார்.

யாழ். மாவட்டத்தில் நேற்று வியாழக்கிழமை மனுத் தாக்கல் நிறைவு பெற்ற பின்னர் நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-


வட மாகாண சபைக்கான தேர்தல் எதிர்வரும் செப்ரெம்பர் 21ஆம் திகதி இடம்பெறவுள்ளது. முதல் முறையாக இடம்பெறவுள்ள வடமாகாண சபைத் தேர்தலைக் கண்காணிப்பதற்காகச் சர்வதேசக் கண்காணிப்பாளர்கள் வருகை தரவுள்ளனர்.

இவர்கள் தேர்தல் பிரசாரக் காலத்திலேயே இங்கு வந்து தமது கடமைகளை மேற்கொள்வர். வாக்களிப்பு நிறைவடைந்து முடியும் வரை அவர்கள் இங்கு கண் காணிப்பில் ஈடுபடுவர்.

'சார்க்' அமைப்பு, ஆசியத் தேர்தல் அதிகாரிகள் ஒன்றியம், பொதுநலவாய அமைப்புக்களின் ஒன்றியம் ஆகியவை கடமையில் ஈடுபடவுள்ளன - என்றார்.

(த-5)

# பால் பொருள்களின் வரியும் அதிகரிப்பு



கொழும்பு, ஓக. 02
பஸ் தவிர ஏனைய வாகனங்களின் உதிரிப்பாகங்கள் மற்றும் பால் பொருள்களுக்கான இறக்குமதி வரியும் அதிகரிக்கப்பட்டுள்ளதாக நிதியமைச்சு அறிவித்துள்ளது.
தேசிய உற்பத்தியை மேம்படுத்தும் நோக்கிலேயே இறக்குமதித் தீர்வை அதிகரிக்கப்பட்டுள்ளதாக நிதியமைச்சு அறிவித்துள்ளது.
வாகன ரயருக்கான வரி 30 வீதம் இன்றேல் கிலோவுக்கு 140 ரூபா, வாகன உதிரிபாகங்கள் 15 வீதம் முதல் 30 வீதம் வரை, பட்டர் உ்ள்ளிட்ட பால் உற்பத்திகளுக்கு 30 வீதம் இன்றேல் கிலோவுக்கு 200 ரூபா என்ற வகையில் வரி அதிகரிக்கப்பட்டுள்ளதாக நிதியமைச்சு அறிவித்துள்ளது.(த)

# காடழிப்பு வழக்கு ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், ஓக. 02
முல்லைத்தீவு மாவட்டத்தில் காடழிப்பு மேற்கொள்ளப்பட்டு வருவதற்கு எதிராக கொழும்பு மேல் நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்ட பொது நல வழக்கு எதிர்வரும் ஒக்ரோபர் 14 ஆம் திகதி வரைக்கும் ஒத்திவைக்கப்பட்டுள்ளது.
முல்லைத்தீவு மாவட்டத்தில் காடழித்து குடியேற்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதனை எதிர்த்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சேருவல பிரதேச சபை உறுப்பினர் க.சிவலோகேஸ்வரன் பொது நலவழக்கொன்றை கொழும்பு மேல் நீதிமன்றில் கடந்த மார்ச் மாதம் தாக்கல் செய்திருந்தார்.
இந்த வழக்கு மீதான விசாரணை தொடர்ந்து இடம்பெற்று வருகின்றது. ஆனாலும் முல்லைத்தீவு மாவட்டத்தில் காடழிப்பு நடவடிக்கைகள் தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டு வருவதாக வழக்காளியான க.சிவலோகேஸ்வரன் தெரிவித்தார். (ஐ-5)

# வாகனம் மோதியதில் மாடு பலி

யாழ்ப்பாணம், ஓக. 02
ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் முல்லைத்தீவு மாவட்ட மாகாணசபை வேட்பாளரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான சதாசிவம் கனகரட்ணத்தின் வாகனம் மோதி மாடு ஒன்று பலியாகியுள்ளது.
நேற்று இரவு 7.30 மணியளவில் முல்லைத்தீவு முள்ளியவளை வித்தியானந்தா கல்லூரிக்கு அருகில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.
முல்லைத்தீவை நோக்கி வேமாக வந்து கொண்டிருந்த வேட்பாளரின் ஹயஸ் வாகனம் மாடுடன் மோதியது. இதனால் மாடு 50 மீற்றர் வரை தூக்கி வீசப்பட்டுள்ளது. இதன்காரணமாகவே மாடு பலியானதாகத் தெரிவிக்கப்படுகின்றது.
இதனையடுத்து அற்தப்பகுதியில் பதற்றநிலை ஏற்பட்டுள்ளதாகவும், உயிரிழந்த பசுவை எவரும் அகற்ற முன்வரவில்லை எனவும் தெரிவிக்கப்பட்டது. (ஐ-5)

# 'சயூரா' கப்பலை தாக்கியதாக 6 புலிகளுக்கு எதிராக வழக்கு

கொழும்பு, ஓக. 02
இலங்கைக் கடற்படையின் கப்பலான எஸ்.எல்.என்.எஸ் சயூரா மீது தாக்குதல் நடத்தியதாகக் கூறப்படும் தமிழீழ விடுதலைப்புலிகளின் முன்னாள் உறுப்பினர்கள் ஆறு பேருக்கு எதிராகச் சட்டமா அதிபர் கொழும்பு மேல் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்துள்ளார்.
தமிழீழ விடுதலைப்புலிகளின் முன்னாள் உறுப்பினர்கள் ஆறு பேரும் நீர்கொழும்புக்கு அண்மையில் வைத்து எஸ்.எல்.என்.எஸ் சயூரா ரோந்து கப்பல் மீது தாக்குதல் நடத்தியதாக அவர்கள் மீது குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.
இந்த வழக்குத் தொடர்பில் 48 சாட்சியங்களும் 29 தடயப்பொருள்களும் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் என்று சட்டமா அதிபர் நீதிமன்றத்துக்கு அறிவித்துள்ளார்.

> 48 சாட்சியங்களும் 29 தடயப் பொருள்களும் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் என்று சட்டமா அதிபர் நீதிமன்றத்துக்கு அறிவித்துள்ளார்.

எஸ்.எல்.என்.எஸ் சயூரா ரோந்துக் கப்பல் மீது தமிழீழ விடுதலைப்புலிகள் பல தடவைகள் தாக்குதலை மேற்கொண்டனர். புலிகளுக்கு எதிரான போரில் இந்த கப்பல் முக்கிய பங்காற்றியமை குறிப்பிடத்தக்கது. (த)

# தேர்தல் விதிமுறை மீறல் குறித்து முறையிட்டால் தான் நடவடிக்கை

## யாழ்.தெரிவத்தாட்சி அலுவலர் கூறுகிறார்



> வேட்பு மனுத்தாக்கலின் போதான ஆரவாரம் என்பன தொடர்பில் எவ்வாறான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன என்று ஊடகவியலாளர்கள் அவரிடம் கேட்டனர். அதற்குப் பதிலளித்த தெரிவத்தாட்சி அலுவலர், இவ்வாறான சம்பவங்கள் தொடர்பில் கட்சிகளால் முறைப்பாடு எதுவும் செய்யப்படவில்லை - என்றார்.

யாழ்ப்பாணம், ஓக. 2
தேர்தல் விதிமுறை மீறல்கள் தொடர்பில் எமக்கு முறைப்பாடு செய்யப்பட்டால் மாத்திரமே நடவடிக்கை எடுக்கப்படும் என யாழ்.தெரிவத்தாட்சி அலுவலர் சுந்தரம் அருமைநாயகம் தெரிவித்தார்.
யாழ்.மாவட்ட செயலகத்தின் முன்பாக இடம்பெற்ற ஆர்ப்பாட்டங்கள் தேர்தல் விதிமுறைகள் மீறிய செயலா என்பது தொடர்பில் ஊடகவியலாளர்களுக்குப் பதிலளிக்காமல் மழுப்பினார் அவர்.
வடமாகாண சபைக்கான தேர்தலுக்காக யாழ்.மாவட்டத்தில் கட்சிகள், சுயேச் சைக்குழுக்கள் வேட்பு மனுத் தாக்கல் செய்தனர். நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரி வித்தார். அவர் அங்கு மேலும் கூறுகையில்;
யாழ்.மாவட்டத்தில் இது வரை எந்தவொரு தேர்தல் விதிமுறை மீறல் குறித்தோ அல்லது தேர்தல் வன்முறை தொடர்பிலோ முறைப்பாடு எமக்குக் கிடைக்கப் பெறவில்லை என்றார்.
கடந்த ஞாயிற்றுக்கிழமை யாழ்.மாவட்டச் செயலகத்தின் முன்பாக இடம்பெற்ற போராட்டம் நேற்று முன்தினம் இடம்பெற்ற வேட்பு மனுத்தாக்கலின் போதான ஆரவாரம் என்பன தொடர்பில் எவ்வாறான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன என்று ஊடகவியலாளர்கள் அவரிடம் கேட்டனர். அதற்குப் பதிலளித்த தெரிவத்தாட்சி அலுவலர், இவ்வாறான சம்பவங்கள் தொடர்பில் கட்சிகளால் முறைப்பாடு எதுவும் செய்யப்படவில்லை-என்றார்.
முறைப்பாடு செய்யப்பட்டால் மாத்திரமா நடவடிக்கை எடுக்கப்படும் என்று ஊடகவியலாளர்கள் பதில் கேள்வி எழுப்பினர்.
கட்சிகளால் முறைப்பாடு செய்யப்பட்டால் மாத்திரமல்ல தேர்தல் சட்டவிதிகளை யாராவது மீறுவது அவதானிக்கப்பட்டால் நிச்சயம் தேர்தல்கள் ஆணையாளர் ஊடாக நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவத்தாட்சி அலுவலர் பதிலளித்தார்
கடந்த ஞாயிற்றுக்கிழமை யாழ்.மாவட்டச் செயலகத்தின் முன்பாக இடம்பெற்ற சம்பவம் தேர்தல் விதீமுறையை மீறிய செயல் இல்லையா எனக் கேள்வி எழுப்பப்பட்டதற்கு, இதற்கும் எமக்கும் சம்பந்தம் இல்லை. இது கட்சி சம்பந்தப்பட்டது என்றார் தெரிவத்தாட்சி அலுவலர்.
முதல்முறையாக யாழ். மாவட்ட வாக்குகள் எண்ணும் பணிகள் யா்ழ்.மாவட்ட செயலகத்துக்கு வெளியே இடம்பெறவுள்ளன. யாழ். மத்திய கல்லூரியிலேயே வாக்கு எண்ணும் நடவடிக்கைகள் இடம்பெறும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.
இந்த நடவடிக்கைக்குத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எதிர்ப்பு வெளியிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (த-5)

# ஜனாதிபதி பாதுகாப்புப் பிரிவில் பணியாற்றும் 10 பேருக்கு சிறை

கொழும்பு, ஓக. 02
ஜனாதிபதி பாதுகாப்புப் பிரிவைச்சேர்ந்த 10பேரைக் குற்றவாளியாக இனங்கண்டபாணந்துறை மேல்நீதிமன்றம் அவர்களுக்குத் தலா நான்கரை வருடங்கள் சிறைத் தண்டனை விதித்து நேற்று வியாழக்கிழமை தீர்ப்பளித்துள்ளது.
முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க பதவியிலிருந்தபோது அந்தப் பிரிவில் கடமையாற்றிய 10 பேருக்கே இவ்வாறு சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.
பாடகர்களான றுகாந்த மற்றும் சந்திரலேகா ஆகியோர் மீது தாக்குதல் நடத்தினார்கள் என்ற வழக்கின் பிரதிவாதிகளான 10 பேரையும் குற்றவாளியாக இனங்கண்ட நீதிபதி குசல வீரவர்த்தன் மேற்கண்டவாறு தீர்ப்பளித்துள்ளார்.
அத்துடன், ஜனாதிபதி பாதுகாப்புப் பிரிவைச் சேர்ந்த ஆ.பீ. சோமரத்னவை இந்த வழக்கிலிருந்து விடுதலை செய்ததுடன் ஏனைய 10 பேருக்கு எதிராகச் சுமத்தப்பட்டிருந்த குற்றச்சாட்டுகளில் ஐந்து குற்றச்சாட்டுகளில் அவர்களைக் குற்றவாளிகளாக நீதிமன்றம் இனங்கண்டது.
முதலாவது குற்றச்சாட்டுக்குக் கடும் வேலைகளுடன் கூடிய 6 மாதச் சிறைத் தண்டனையும் ஏனைய நான்கு குற்றச்சாட்டுகளுக்கும் கடும் வேலைகளுடன் கூடிய ஒரு வருட சிறைத் தண்டனையும் விதித்தார். குற்றஞ்சாட்டப்பட்ட 10 பேரும் சிறைத் தண்டனையை தனித்தனியாக அனுபவிக்க வேண்டும் என்றும் நீதிபதி உத்தரவிட்டுள்ளார்.
இந்நிலையில் தீர்ப்புக்கு எதிராக தாம் மேன்முறையீடு செய்யவுள்ளதாக பிரதிவாதிகள் சார்பில் முன்னிலையான சட்டத்தரணி நீதிமன்றத்தில் தெரிவித்தார்.
ஜனாதிபதி பாதுகாப்புப் பிரிவைச் சேர்ந்த இவர்கள் 13 வருடங்களுக்கு மேலதிகமாக இந்த வழக்குடன் தொடர்புபட்டிருப்பதுடன் அவர்களுடைய வேலையும் இல்லாமல் செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.
பாடகர் றுகாந்த மற்றும் சந்திரலேகா வசித்த பொல்கஸ்வோவிட்ட கொட வீட்டுத் தொகுதியில் வைத்து 2000 ஆம் ஆண்டு ஜனவரி 26 ஆம் திகதி இரவு 8 மணியளவில் அவர்களுக்கு மரண அச்சுறுத்தல் விடுத்து அவர்களின் தலை முடியை வெட்டித் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (த)

# இரண்டு சடலங்கள் கரையொதுங்கின

யாழ்ப்பாணம், ஓக. 2
ஊர்காவற்றுறை கடற்கரைப் பகுதியில் உருக்குலைந்த நிலையில் அடையாளம் காணப்படாத இரண்டு சடலங்கள் கரையொதுங்கியுள்ளன.
இனங்காண முடியாத அளவுக்கு உருக்குலைந்த இந்த இரண்டு சடலங்களில் ஒன்று வேலணைக் கடற்கரைப் பகுதியிலும், ஒன்று அல்லைப்பிட்டி கடற்கரைப் பகுதியிலும் மீட்கப்பட்டுள்ளன்.
சம்பவ இடத்துக்கு நேரில் சென்று பார்வையிட்ட ஊர்காவற்றுறை நீதிமன்ற நீதிவான் ஆர்.எஸ். மகேந்திரராஜா இரண்டு சடலங்களையும் யாழ்.போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்குமாறு உத்தரவிட்டதை அடுத்து சடலங்கள் யாழ். போதனா வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட் டுள்ளன. (த-14-4)

# வாஸ் மீது குற்றம் சுமத்தி தப்பித்துக் கொண்டது அரசு


## ஐ.தே.க.குற்றச்சாட்டு

முன்னாள் பிரதிப் பொலிஸ்மா அதிபர் வாஸ் குணவர்த்தன மீது சகல குற்றங்களையும் சுமத்தி விட்டு, அரசு தன்னைத் தற்காத்துக் கொண்டுள்ளது என ஐக்கிய தேசியக் கட்சியின் மேல் மாகாண சபை உறுப்பினர் ஸ்ரீநாத் பெரேரா தெரிவித்தார்.
கொழும்பில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் அவர் இதனைக் கூறினார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:-
பிரதிப் பொலிஸ்மா அதிபர் ஒருவர் மட்டும் நாட்டின் அதிகாரத்தைக் கையிலெடுத்துக் கொண்டு இவ்வாறு செயற்பட முடியுமா என்ற கேள்வி எழுகிறது. அதேவேளை ஐக்கிய தேசியக் கட்சியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் நாட்டு மக்களுக்குச் சேவை செய்வதற்காக அரசுக்குத் தாவவில்லை. ஜனாதிபதியுடன் ஏற்படுத்தி கொண்ட இணக்கத்துக்கு அமையவே அவர் ஆளும் கட்சியில் இணைந்து கொண்டார். நாட்டு மக்களை முட்டாள்களாக்கி விட்டு, ஐக்கிய தேசியக் கட்சியில் ஜனநாயகம் இல்லை என்று கூறி தயாசிறி ஜயசேகர அரசுக்குச் சென்றார்.
தயாசிறிக்கு ஆதரவாக ஐக்கிய தேசியக்கட்சியின் பிரதேச சபை உறுப்பினர்கள் ஆளும் கட்சிக்குச் செல்லவில்லை. அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்ணான்டோ பல்வேறு உத்திகளை பயன்படுத்தி அவர்களை ஆளும் கட்சியில் சேர்த்து கொண்டார். அரசின் அரசியல்வாதிகள் கடுமையாகச் சட்டத்தை மீறிச் செயற்பட்டு வருகின்றனர். எதிர்வரும் மாகாண சபை தேர்தலில் அரசின் பிரபலம் குறைந்து போகும் அடையாளங்கள் தென்படுகின்றன-என்றார். (த)

வடமாகாண சபைத் தேர்தலுக்கான வேட்புமனுத் தாக்கல் நேற்று நண்பகல் 12 மணியுடன் நிறைவடைந்தது. வேட்புமனு பரிசீலனைக்குப் பின்னர், விண்ணப்பித்த கட்சிகள், சுயேச்சைக் குழுக்களுடன் தெரிவத்தாட்சி அலுவர் சுந்தரம் அருமைநாயகம் தலைமையில் கலந்துரையாடல் நடந்தது. கலந்துரையாடல் முடிவடைந்ததைத் தொடர்ந்து வேட்பாளர்கள் அடுத்தடுத்து வெளியேறிச் சென்றவேளையில்...



கூட்டமைப்புத் தலைவர் விக்னேஸ்வரன் குழுவினர்



ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி சார்பில் இ.அங்கஜன்



மக்கள் கட்சியின் தியக்குடுகம குழுவினர்



சோஷலிஷ சமத்துவக் கட்சி தலைவர் சம்பந்தன் சகாக்களுடன்



மாணிக்கசோதி அபிமானசிங்கம் தலைமையில் சுயேச்சைக்குழு



தம்பிப்பிள்ளை இருதயராணி தலைமையிலான சுயேச்சைக்குழு

(ஒ-5-21)

## தீவக வலய கஷ்ட அதிகஷ்ட பாடசாலை மாணவருக்கு காலணிகள்

யாழ்ப்பாணம், ஓக. 2

தீவகக் கல்வி வலயத்துக்கு உட்பட்ட கஷ்ட, அதிகஷ்ட பாடசாலைகளில் கல்வி கற்கும் பாடசாலை மாணவர்களுக்கு இலவச காலணிகள் வழங்கப்படவுள்ளன.

இதற்கான சுற்றறிக்கைகள் பாடசாலைகளுக்கு ஏற்கெனவே அனுப்பி வைக்கப்பட்டுள்ள நிலையில் தொடர்புடைய பாடசாலை அதிபர்கள் பாடசாலை மாணவர்களது பாத அளவுகளுடன் விண்ணப்பப்படிவங்களை இன்று வெள்ளிக்கிழமைக்கு முன்னதாக சமர்ப்பிக்குமாறு தீவக வலயக் கல்விப் பணிப்பாளர் தி.ஜோன் குயின்ரஸ் அறிவித்துள்ளார். (வ-14)

## காரணம் இன்றி பிற்போடப்பட்ட மாநகர சபை மாதாந்தக் கூட்டம்

### விந்தன் கண்டனம்

யாழ்ப்பாணம், ஓக. 2

யாழ்.மாநகரசபையின் ஜூலை மாதத்திற்கான மாதாந்தப் பொதுக்கூட்டம் தகுந்த காரணம் எதுவும் கூறப்படாது ஒத்திவைக்கப்பட்டது குறித்து யாழ்.மாநகரசபையின் எதிர்க் கட்சி உறுபினர்கள் கண்டனம் தெரிவிப்பதாக எதிர்க் கட்சி உறுப்பினர் விந்தன் கனகரட்ணம் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

கடந்த 25 ஆம் திகதி சபைக் கூட்டம் நடைபெறும் என அறிவிக்கப்பட்டதாகவும் தாங்கள் கூட்டத்துக்கு வந்து கொண்டிருந்த போது தொலைபேசியூடாக கூட்டம் ஒத்திவைக்கப் பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டது.

அன்றைய கூட்டத்தில் சபையில் எடுக்கப்பட வேண்டிய தீர்மானங்கள், பிரேரணைகள், மாநகரசபைக் கொடுப்பனவுகள் தொடர்பான விடயங்களை விவாதிக்கச் சந்தர்ப்பம் மறுக்கப்படுவதற்காகவே ஆளும் கட்சியினர் இவ்வாறு நடந்திருக்கலாம்.

அண்மையில் விஜயகாந் கைது செய்யப்பட்டமை அவர் மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் குறித்தும் ஏற்கெனவே நீண்ட காலமாக எதிரணியில் இருந்து கொண்டு ஆளும் தரப்புக்கு ஆதரவு தெரிவித்து வந்த உறுப்பினர் மு.றெமீடியஸ் பதவியில் இருந்து விலகிக் கொண்டமை, பயங்கரவாத தடைச் சட்டத்தில் கைது செய்யப்பட்டு குற்றம் நிரூபிக்கப்பட்டதால் தற்போது தண்டனை அனுபவித்துவரும் கோமகன் ஆகியோரின் நிலைப்பாட்டை அடுத்து ஆளும் கட்சியினர் நிலை தடுமாறியுள்ளனர்.

ஆளும் கட்சியில் அங்கம் வகிக்கும் முஸ்லிம் உறுப்பினர்கள் சபைக் கூட்டங் களில் ஆளும் கட்சியை பகிரங்கமாக எதிர்ப்பதும் ஆளும் கட்சிக்குள் சலனத்தை உண்டு பண்ணி யுள்ளதுமே கூட்டத்தை திடீரென காலவரையின்றி ஒத்திவைக்கக் காரணம். கூட்டத்தை ஒத்தி வைத்த செயற்பாடானது தமக்குச் சந்தேகத்தைத் தோற்றுவித்துள்ளதாகவும் முதல்வர் உடனடியாக கூட்டத்தைக் கூட்டுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் - என்றார்.(வ-7)

## புத்தூர் கடலேரிப் பகுதி இளசுகளின் 'உல்லாசபுரி'

### பற்றை மறைவுகளில் கலாசாரச் சீரழிவு

புத்தூர், ஓக. 2

புத்தூர் கிழக்கு தகரப்பிள்ளையார் ஆலயத்துக்கு அருகில் குடியிருப்புகள் இல்லாத பற்றைக்காடுகள் காதலர்களின் உல்லாச இடமாக மாறியுள்ளதால், அந்தப் பகுதியில் கலாசார சீரழிவுகள் இடம்பெற்று வருவதாக அந்தப் பகுதி மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

கடலேரிப் பகுதியை அண்மித்த இந்தப் பற்றைகள் இவர்களுக்கு வசதியாக அமைந்து விட்டன. இங்கு கூடும் ஜோடிகள் அருவருப்பான முறையில் நடந்து கொள்கின்றனர். பெற்றோருக்கு 'டிமிக்கி' கொடுத்து இங்கு வரும் இந்த இளசுகளின் செயல்களால் கலாசாரம் சீரழிந்து வருகிறது.

இந்தச் சம்பவங்களை நேரில் பார்த்த முதியவர்கள் அறிவுரைகளைக் கூறிய சமயங்களில் இளைஞர்கள் முதியவர்களைத் தாக்கவும் முற்பட்ட சம்பவங்கள் நிகழ்ந்துள் ளன.

ஆலய சூழல்கள் நிறைந்த இந்தப் பிரதேசத்தில் இத்தகைய கலாசார சீரழிவுகள் இடம்பெறுவதால் பிரதேசத்தின் நன்மதிப்பு பாதிப்படைந்துள்ளது குறித்து பிரதேசத்தவர்கள் கவலைகொண்டுள்ளனர்.

தனியார் கல்வி நிலையங்களுக்குச் செல்லும் மாணவிகளும் புத்தகம், அப்பியாசக் கொப்பிகளுடன் இங்கு 'மன்மத லீலை'யில் ஈடுபடுகின்றனர் என்று கூறப்படுகிறது. இளைஞர் யுவதிகளின் இத்தகைய கலாசாரச் சீரழிவுப் போக்கை இடைநிறுத்தி பிரதேசத்தின் மதிப்பை பாதுகாக்க நடவடிக்கை எடுக்கு மாறு சம்பந்தப்பட்டவர்களை அந்தப் பகுதி மக்கள் கோரியுள்ளனர். (ஒ-14)

## பன்முகப்படுத்தப்பட்ட நிதியில் அல்லைப்பிட்டி கிராமத்துக்கு உதவி

யாழ்ப்பாணம், ஆக.02

பன்முகப்படுத்தப்பட்ட வரவு - செலவுத் திட்டத்தில் வேலணை பிரதேச செயலகப் பிரிவில் அல்லைப்பிட்டி கிராமத்துக்கு யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களால் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

> வேலணை பிரதேச செயலகப் பிரிவில் அல்லைப்பிட்டி கிராமத்துக்கு யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களால் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

வாகீசர் சனசமூக நிலைய தளபாடங்களுக்காக 24 ஆயிரத்து 500 ரூபாவும், ஸ்ரீ முருகன் விளையாட்டுக் கழகத்துக்கு விளையாட்டு உபகரணங்களுக்கு 24 ஆயிரத்து 500 ரூபாவும், கட்டட புனரமைப்புக்கென அல்லைப்பிட்டி விவசாய சம்மேளனத்துக்கு 39 ஆயி ரத்துக்கு 200 ரூபாவும், வெண்புரவி நகர் நெய்தலம் புதிய குடியிருப்புக்கான அபிவிருத்தி வேலைகளுக்கு 73 ஆயிரத்து 500 ரூபாவும் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன. (எ-7)

## ஏழை மாணவருக்கு உதவி வழங்கல்

நல்லூர் பிரதேச செயலக கலாசாரப் பகுதியினர் இந்து ஆலயங்களூடாக ஏழை மாணவர்களுக்கு வழங்கும் மாதாந்த உதவித் தொகை இன்று வெள்ளிக்கிழமை திருநெல்வேலி பரமேஸ்வரா சந்தியில் அமைந்துள்ள வீரகத்திப் பிள்ளையார் கோயிலில் நடைபெறவுள்ளது.

நல்லூர் பிரதேச செயலர் பா.செந்தில்நந்தனன் தலைமையில் பி.ப.4 மணிக்கு நடைபெறும் நிகழ்வில் 40 மாணவருக்கு உதவிகள் வழங்கப்படவுள்ளன.

ஏழை மாணவர்களுக்கான உதவிகள் வழங்கும் நிகழ்வு ஒவ்வொரு மாதமும் இந்து ஆலயங்களின் அமைப்பு நிதியுதவிகளை வழங்கும் ஆலயங்களிலேயே நடைபெறும் என நல்லூர் பிரதேச கலாசார உத்தியோகத்தர் திருமதி ஜெனி குமாரசிங்கம் தெரிவித்தார். (வ-7)

## ஸ்கந்தாவில் முத்தமிழ் விழா

சுன்னாகம், ஓக. 2

சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரியின் முத்தமிழ் விழா இன்று பிற்பகல் 3 மணிக்கு கல்லூரியின் ஒறேற்றர் சுப்பிரமணியம் மண்டபத்தில் அதிபர் இ.ஈஸ்வரதாசன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சின் மேலதிகச் செயலாளர் ப.விக்கினேஸ்வரனும், சிறப்பு விருந்தினராக வலிகாமம் கல்வி வலயப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் எஸ்.தேவமனோகரனும் கலந்துகொள்வர். பட்டிமன்றத்தில் மகாஜனக் கல்லூரி, யூனியன் கல்லூரி, ஸ்கந்தவரோதயக் கல்லூரி மாணவர்கள் பங்குபற்றுவர்.

கண்ணகி சபதம் (வில்லிசை), நாட்டிய நாடகம் (மாதவியின் துறவு), தமிழ்த் தினப் போட்டியில் தேசிய மட்டத்தில் முதலிடம் பெற்ற 'ஒய்யாரக் கொண்டை' நாடகம் என்பன மேடையேற உள்ளன என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-14-36)

# கிளிநொச்சி விபத்தில் காயமடைந்தவர் சாவு

யாழ்ப்பாணம், ஓக.2

கிளிநொச்சி தொண்டமான் நகர்ப் பகுதியில் கடந்த 29 ஆம் திகதி இடம்பெற்ற விபத்தில் படுகாயமடைந்த குடும்பஸ்தர் ஒருவர் நேற்றுமுன்தினம் சிகிச்சை பயனின்றி உயிரிழந்தார்.

கடந்த 29 ஆம் திகதி கிளிநொச்சி தொண்டமான் நகர்ப் பகுதியில் மோட்டார் சைக்கிளை எதிரே வந்த டிப்பர் வாகனம் மோதியதில் இருவர் படுகாயமடைந்து கிளிநொச்சி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர். இதில் ஒருவர் அன்றைய தினமே சிகிச்சை பயனின்றி உயிரிழந்தார். உயிரிழந்தவர் சின்னையா- பஞ்சாட்சரம் (வயது- 63) என்பவராவார்.

மற்றையவர் கிளிநொச்சி வைத்தியசாலையில் இருந்து மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டிருந்த கந்தையா- மதியாபரணம் (வயது-48) என்பவரும் நேற்றுமுன்தினம் சிகிச்சை பயனளிக்காது உயிரிழந்தார்.

சம்பவம் தொடர்பான மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி ந.பிறேம்குமார் மேற்கொண்டதையடுத்து சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப் பட்டது.

மேலதிக விசாரணைகளை கிளிநொச்சி பொலிஸார் மேற்கொண்டதுடன் டிப்பர் வாகன சாரதியும் கைது செய்யப் பட்டுள்ளார். (ஜ-6-14-4)

## சடலம் இனங்காணப்பட்டது

யாழ்ப்பாணம், ஓக.2

புங்குடுதீவுக் கடற்கரையில் கரை ஒதுங்கிய சடலம் உறவினரால் நேற்று அடையாளம் காணப்பட்டது.

புங்குடுதீவு கடற்கரையில் உருக்குலைந்த நிலையில் ஆணின் சடலம் ஒன்று நேற்றுமுன்தினம் கரையொதுங்கியது. அந்தச் சடலத்தை மீட்ட ஊர்காவற்றுறைப் பொலிஸார் அதனை யாழ். போதனா வைத்தியசாலையில் ஒப்படைத்தனர்.

கடந்த 28 ஆம் திகதி மன்னார் கடற்பரப்பில் மீன்பிடித் தொழிலுக்குச் சென்ற அப்புகாமி- டியுறன் (வயது- 25) என்பவரது சடலம் என உறவினர்களால் யாழ். போதனா வைத்தியசாலையில் வைத்து நேற்று அடையாளம் காட்டப்பட்டது.

இதனை அடுத்து மரண விசாரணைகளின் பின் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. (ஜ-4-78)

## வீதி அகலிப்பில் நிர்மாணித்த வடிகாலுக்குள் குப்பைகள்

### கொடிகாமம் வர்த்தகர்கள் விசனம்

யாழ்ப்பாணம், ஓக. 2

கொடிகாமம் நகர்ப் பகுதி யில் வீதி அகலிப்பின் போது நிர்மாணிக்கப்பட்ட வடிகால்களுக்குள் பெருமளவு குப்பைகள் தேங்கியுள்ளதால் அவற்றைத் துப்புரவு செய்ய நடவடிக்கை மேற்கொள்ளுமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளை நகர்ப் பகுதி வர்த்தகர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

புதிதாக அமைக்கப்பட்ட வீதி உயரமாக உள்ளதாலும், வீதியில் விழும் மழை வெள்ளம் வடிகாலுக்குள் விழக்கூடிய வகையில் அமைக்கப்பட்டிருந்தாலும் வடிகாலில் விழும் நீர் பாய்ந்தோட முடியாத அளவுக்கு குப்பைகள், கல், மணல் ஆகியவை நிறைந்து காணப்படுகிறது.

இதனால் வீதியிலிருந்து தாழ்வான நிலையில் உள்ள கடைகளுக்குள் வெள்ளம் புகக்கூடிய அபாயம் உள்ளது. இதனால் வடிகாலைத் துப்புரவு செய்துவித்துத் தருமாறு கோரியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (வ-9)

# மரண அறிவித்தல்கள்

## கணபதிப்பிள்ளை கிருஷ்ணன் (முத்தண்ணை)

(இளைப்பாறிய லிகிதர், றப்பர் கட்டுப்பாட்டுத் திணைக்களம்)



கதிர்காமகோயிலடி, வதிரி கரவெட்டியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட **கணபதிப்பிள்ளை கிருஷ்ணன் (முத்தண்ணை)** 31.07.2013 புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை நாகமுத்து தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை சின்னாச்சி தம்பதியரின் மருமகனும், செல்வநாயகியின் கணவரும், கமலநாயகி, விமலநாயகி, தேவரஞ்சினி(சிரேஷ்ட விரிவுரையாளர், யாழ். பல்கலைக்கழகம்), மனோரஞ்சினி(ஆசிரியை, இராமநாதன் இந்து மகளிர் கல்லூரி), ஸ்ரீரஞ்சினி(நிகழ்ச்சித் திட்ட உதவியாளர், பருத்தித்துறை பிரதேசசெயலகம்), தவச்செல்வம் (கனடா), தவரூபன்(கனடா) ஆகியோரின் தந்தையும், காலஞ்சென்றவர்களான பொன்னம்மா, அன்னப்பிள்ளை, முருகேசு மற்றும் குஞ்சியார், திருநாவுக்கரசு(செல்லையா- கனடா), செந்தையா(இரத்தினம்), தெய்வானை(செல்லம்) ஆகியோரின் சகோதரரும், காலஞ்சென்றவர்களான கந்தையா, பொன்னையா, கந்தசாமி, இலட்சுமி, சிவகாமி, ஆனந்தராசா மற்றும் சிதம்பரப்பிள்ளை, சிவக்கொழுந்து, கிருஷ்ணராஜா(கனடா), கதிர்காமத்தம்பி ஆகியோரின் அன்பு மைத்துனரும், குலசிங்கம், பாலச்சந்திரன், சிவாஸ்க்கரன், பிரணவன், ஸ்ரீகரன், இளவரசி, கிருஷ்ணபிரபா ஆகியோரின் மாமனும், பார்த்தீபன், பிரசாந்தி, கிருஷாந்தி, அஜந்தா, ஆதர்சன், தசீகரன், கிருஷ்ணஹரின், ரிஷீகரன், மான்ஷா, வைஷ்ணவி, ஆதித்தியன், சூரியன், சுபீட்சா, லக்சயா, நிலா, மஹதி, நிதுசகன், ஹம்சத்வனி, ரகுநாதன், சிவகரன் ஆகியோரின் பேரனும், றிஷா, வர்ணன், நவீட்டா ஆகியோரின் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை(04.08.2013) ஞாயிற்றுக்கிழமை மு.ப.10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் ஆலங்கட்டை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கதிர்காமகோயிலடி, வதிரி, கரவெட்டி.

தகவல்: குடும்பத்தினர்.

## திரவியம் வரப்பிரகாசம் (பாலசிங்கம்)



ஈச்சமோட்டை சுண்டுக்குளி யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் பூந்தோட்டம் அண்ணாநகர் வவுனியாவை வசிப்பிடமாகவும் கொண்ட திரவியம் வரப்பிரகாசம் (பாலசிங்கம்) நேற்றுமுன்தினம் (31.07.2013) புதன்கிழமை வவுனியாவில் காலமானார்.

அன்னார் திரவியம்- அன்னம்மா தம்பதியரின் அன்பு மகனும், ஜெயமேரியின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான தவமணி, காலஞ்சென்றவர்களான அன்ரனிப்பிள்ளை நவரட்ணம், ராசமலர், பொன்ராசா ஆகியோரின் அன்புச் சகோ தரனும், காலஞ்சென்றவர்களான செல்வராசா, அமிர்தநாயகம் மற்றும் புஸ்பராணி(லண்டன்), திரேசம்மா, செல்வராசா(கனடா), பரமானந்தம் ஆகியோரின் அன்பு மைத்துனரும், வசந்தி, வனிதா, கமலா, ஜெனிற்றா, ராஜன் (லண்டன்), ஜெனோவா(ஜேர்மனி), சுதா, சுவர்ணா (கனடா) ஆகியோரின் பாசமிகு தகப்பனாரும், கிப்பொலின், சிறிதரன், சுகந்தன், காலஞ்சென்ற புலேந்திரன், ஜோன்ஷன்(ஜேர்மனி), வசந்தன்(ஆஸ்திரேலியா), டெல்சி, ரமேஸ்(கனடா) ஆகியோரின் பாசமிகு மாமனும், சுமித்தா, கலிஸ்ரன் (ஆஸ்திரேலியா), டொறின்(பிரான்ஸ்), செலஸ்ரின்(பிரான்ஸ்), வினோத்(ஆட்டோ சாரதி, PSC பார்க்), டிலானி, கிறிசாந்தி(பிரான்ஸ்), ஜனா(பிரான்ஸ்), சாலினி, உமரன்(ஆஸ்திரேலியா), றேனுஜா, யுலைக்ஷன் (தமிழ் மகா வித்தியாலயம் A/L மாணவன்), டனுக்ஷன், திசான்(ஆஸ்திரேலியா), ஜனுதிக்ஷன், சனோதிக்ஷன், றெவீன், றக்ஷிகா, றாகுல் (கனடா) ஆகியோரின் பேரனும், கிரோனிபாவின் (பிரான்ஸ்) பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (03.08.2013) சனிக்கிழமை பி.ப. 3.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பூந்தோட்டம் மயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும்.இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பூந்தோட்டம், அண்ணாநகர், வவுனியா.

தகவல்: குடும்பத்தினர்.

திருமதி

## தங்கரத்தினம் இராசரத்தினம்



அரசடி ஒழுங்கை, திருநெல்வேலியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தங்கரத்தினம் இராசரத்தினம் (ஓய்வு பெற்ற உப அதிபர், யா/கொக்குவில் இராமகிருஸ்ணா வித்தியாலயம்) 30.07.2013 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னத் துரை-சிவக்கொழுந்து தம்பதிய ரின் அன்பு மகளும், காலஞ்சென்ற கந்தையா- பார்வதிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும், கந்தையா இராசரத்தினத்தின் அன்பு மனைவியும், ஆனந்தநடராஜா தியாகேஸ்வரி, காலஞ்சென்றவர்களான ஆனந்தலட்சுமி, நடேசலிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரியும், சரஸ்வதி, நித்தியானந்தன், காலஞ்சென்ற குருபாலசிங்கம், சிவராசா, அரசரட்ணம், காலஞ்சென்ற பராசக்தி ஆகியோரின் மைத்துனியும், சிவபாக்கியம், காலஞ்சென்ற சுந்தரம் ஆகியோரின் சகலியும், சுஜித்தா (கனடா), கிருத்திகா, சஞ்சுதன் (கனடா), தற்பராதேவி (பிரான்ஸ்), ஸ்ரீதரன் (டென்மார்க்), ஜெகதீஸ்வரன் (லண்டன்), ரவிச்சந்திரன் (லண்டன்), உதயகுமாரான் (பிரான்ஸ்), சிவகுமாரன் (பிரான்ஸ்), சுரபாஸ்கரன் ஆகியோரின் சிறிய தாயும், மயூறினி, சுதாகர் (கனடா), இந்திரபகவான் (கனடா), றதீஸ் கண்ணா, செல்வரத்தினம், (கனடா), சச்சிதானந்தம் (ஜேர்மனி), இந்திராணி (டென்மார்க்), விஜியா (பிரான்ஸ்), அருளானந்தம் (கனடா), குணசீலன் (கனடா), ரவிச்சந்திரன் (பிரான்ஸ்), உமா (டென்மார்க்), ஜெகதீஸ்வரி (லண்டன்), லலிதா (லண்டன்), வச்சலா (பிரான்ஸ்), பிரசாந்தி ஆகியோரின் மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.08.2013) வெள்ளிக்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக மு.ப. 10 மணிக்கு திருநெல்வேலி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**அரசடி ஒழுங்கை,**
**திருநெல்வேலி.**

(30134)
(10,16)

**தகவல்:**
**க. இராசரத்தினம் (கணவர்).**

## மாகாணசபைத் தேர்தல் 2013



நெருப்பாய் எரியும்
மன உணர்வுதனை
வாக்குரிமையால்
வெளிப்படுத்துவோம்.....
தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின்
இளைய தலைமுறை வேட்பாளர்
இளைஞர் அணித்தலைவர் ஆசிரியர்
திரு.பா. கஜதீபன்
அவர்கள் வெற்றிபெற வாழ்த்துகின்றோம்.

# மரண அறிவித்தல்

## வஸ்ரியாம்பிள்ளை பிலிப்

(சமாதான நீதிவான், ஓய்வு பெற்ற மீன்பிடி பரிசோதகர்)



பாஷையூரைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட வஸ்ரியாம்பிள்ளை பிலிப் நேற்று (01.08. 2013) வியாழக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னாரின் நல்லடக்கம் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பாஷையூர்.

தகவல்: குடும்பத்தினர்.
T.P- 0213006131

உதயன்
விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111

# மரண அறிவித்தல்

## சிவலிங்கம் அழகம்மா



மட்டக்களப்பை பிறப்பிடமாகவும் 75, பழம்றோட், கந்தர்மடம், யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட சிவலிங்கம் அழகம்மா நேற்று (01.08.2013) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சிவலிங்கத்தின் அன்பு மனைவியும், சின்னத்தம்பி- சின்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும், யோகேஸ்வரி, சரஸ்வதி ஆகியோரின் அன்புத் தாயும், மகாலிங்கம், காலஞ்சென்ற பஞ்சாட்சரம் ஆகியோரின் மாமியும், உமாபதி, சுபாசினி(அயர்லாந்து), சயந்தினி, கஜேந்திரன்(பிரான்ஸ்), அஜந்தினி (மலேசியா), திருசாந்தி, சனாதினி, நிரஞ்சலா, சௌந்தர்ராஜன், விக்னராஜன், கீதராஜன், சுபராஜன், சர்மிலா, பிறமிளா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.08.2013) வெள்ளிக்கிழமை பி.ப. 3.30மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கோம்பயன் மணல் இந்து மயானத் தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்.

75, பழம்றோட், கந்தர்மடம், யாழ்ப்பாணம்

077 2846914





இலங்கைப் பத்திரிகை ஸ்தாபனமும், இலங்கைப் பத்திரிகை ஆசிரியர் சங்கமும் இணைந்து கடந்த செவ்வாய்க்கிழமை நடத்திய வருடாந்த விருது வழங்கும் விழாவில், 'சுடர் ஒளி'யின் பிரதம ஆசிரியர் நாகலிங்கம் பத்மசீலன் 'வாழ்நாள் சாதனையாளர்' விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டார்.

நிகழ்வில் கலந்துகொண்டோரில் ஒரு பகுதியினரையும், 'வாழ்நாள் சாதனையாளர்' விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்ட சிரேஷ்ட ஊடகவியலாளர்களையும், 'சுடர் ஒளி' யின் பிரதம ஆசிரியர் கௌரவிக்கப்படுவதையும் படங்களில் காணலாம்.

## மாவிட்டபுரம் கந்தசுவாமி ஆலயத் தேர் திங்களன்று



யாழ்ப்பாணம், ஓக.2

மாவிட்டபுரம் ஸ்ரீகந்தசுவாமி ஆலயத்தின் தேர்த்திருவிழா எதிர்வரும் 5ஆம் திகதி திங்கட்கிழமை இடம்பெறவுள்ளது.

ஆலயத்தின் பெருந்திருவிழா கடந்த 13 ஆம் திகதி ஆரம்பமாகி இடம்பெற்று வருகிறது. இடம்பெற்று வரும் திருவிழா வரிசையில் எதிர்வரும் 5 ஆம் திகதி தேர்த் திருவிழாவில் காலை 5 மணிக்கு உஷத் காலப் பூசையும் காலை 9 மணிக்கு வசந்த மண்டபப் பூசையும் முற்பகல் 10 மணிக்கு தேர் பவனியும் இடம்பெறும். தொடர்ந்து அன்றைய தினம் பிற்பகல் 2 மணிக்கு பச்சை சாத்தலும் மாலை 5.30 மணிக்கு தேரடித் திருவிழாவும் இடம்பெறும்.

அதனைத் தொடர்ந்து மறுநாள் செவ்வாய்க்கிழமை தீர்த்தத் திருவிழாவில் காலை 4 மணிக்கு உஷத் காலப் பூசையும் காலை 5.30 மணிக்கு சுவாமி கீரிமலைத் தீர்த்தத்துக்குப் புறப்படலும் இடம்பெறும். (வ-14-86)

# வடக்கில் 90 வீத மாணவருக்கு தேக ஆரோக்கியம் இல்லையாம்

## அதனால் தான் பால் வழங்குகிறோம் என்கிறார் அமைச்சர்

யாழ்ப்பாணம், ஓக.2

வடமாகாணத்தில் 90 வீதமான மாணவர்களின் தேக ஆரோக்கியம் மந்தமாக உள்ளது. அதனை நிவர்த்தி செய்யவும் அவர்களது தேக ஆரோக்கியத்தை உயர்த்தவுமே ஒரு கோப்பை பால், மதிய உணவு, மருத்துவப் பரிசோதனைகளை வழங்குகிறோம் என்று கல்விச் சேவைகள் அமைச்சர் துமிந்த திசாநாயக்கா தெரிவித்தார்.



யாழ்ப்பாண மாணவர்களுக்கான மருத்துவப் பரிசோதனை முகாமின் ஆரம்ப நிகழ்வு யாழ்.மத்திய கல்லூரியில் நேற்றுமுன்தினம் புதன்கிழமை இடம்பெற்றது.

இதில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:-

தற்போது நாட்டின் அனைத்து இன மக்களும் ஒற்றுமையாக வாழ்கிறார்கள். நான் அனுராதபுரத்தில் படிக்கும் போது தமிழ் முதலாளி ஒருவருடன் நெருங்கிப் பழகும் வாய்ப்புக் கிடைத்தது.

கடந்த காலத்தில் பல இன்னல்களை எதிர்கொண்டோம். எதிர்காலத்தில் அவற்றைச் சீர்செய்ய வேண்டும். கடந்த காலத்தைப் பற்றிப் பார்க்க விருப்பமில்லை.

பாடசாலைகளில் மாணவர்களின் கல்வியைச் சீர்ப்படுத்தவும், ஆரோக்கியத்தை வளப்படுத்தவும் இந்த மருத்துவ முகாம் பெரிதும் உதவும். நாட்டின் கல்வி, சுகாதாரத் துறைகள் வீழ்ச்சியடைந்த நிலை காணப்படுகின்றன. இதனை மாற்றியமைக்க வேண்டும். துரையப்பா மறைந்த பின்னர் பல இன்னல்களை எதிர்நோக்க வேண்டியிருந்தது. ஆனாலும் மாணவர்களுக்கான கற்றல் உதவிகளை நாம் வழங்கினோம். - என்றார். (த-4)

## தீருவில் பொதுப் பூங்காவுக்கு எதிரான வழக்கு ஒத்திவைப்பு

வடமராட்சி, ஓக.2

பொதுப்பூங்கா அமைத்ததை எதிர்த்து பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் வல்வெட்டித்துறை நகரசபைத் தலைவர் ந.அனந்தராஜ், உபதலைவர் க.சதீஸ், உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் ஆகியோர் மீது தொடரப்பட்ட வழக்கு பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுக்கப்பட்டு ஒத்திவைக்கப்பட்டது.

வல்வெட்டித்துறை நகராட்சி மன்றத்தின் ஏற்பாட்டில் தீருவில் வயலூர் முருகன் ஆலயத்துடன் இணைந்த வெளியில் பொதுப்பூங்கா அமைத்ததை எதிர்த்து பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் நகர சபைத் தலைவர் மற்றும் உறுப்பினர்கள் மீது தொடரப்பட்ட வழக்கு பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றத்தில் மாவட்ட நீதிபதி திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரன் முன்னிலையில் நேற்று முன்தினம் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

விசாரணையின்போது பூங்கா அமைக்கப்பட்ட காணியின் உரிமம் தொடர்பாக பொலிஸாருக்கும் பிரதிவாதிகளின் சட்டத்தரணிகளுக்கும் இடையே வாதப் பிரதிவாதங்கள் இடம்பெற்றன.

விசாரணையின்போது பூங்கா அமைக்கப்பட்ட காணியின் உரிமம் தொடர்பாக பொலிஸாருக்கும் பிரதிவாதிகளின் சட்டத்தரணிகள் நடராஜா ராஜிவன், திருமதி விஜயராணி உருத்திரேஸ்வரன் ஆகியோர்களுக்கு இடையே வாதப் பிரதிவாதங்கள் இடம்பெற்றன.

இதனைத் தொடர்ந்து மேலதிக விசாரணைகளுக்காக வழக்கு எதிர்வரும் நவம்பர் மாதம் 20 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது. (வ-8)

## ஒய்வூதியம் குறித்த நடமாடும் சேவை

### பளையில் இடம்பெற்றது




பளை, ஓக. 2

இலங்கை சமூக பாதுகாப்புச் சபையின் ஓய்வூதியம் தொடர்பான நடமாடும் சேவை நேற்றுமுன்தினம் பளை பிரதேச செயலக மண்டபத்தில் இடம்பெற்றது. பளைப் பிரதேச செயலர் கி.சத்தியசீலன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வுக்கு முதன்மை விருந்தினர்களாக சமூக பாதுகாப்பு சபையின் தலைவர் திருமதி சுமணா ஆரியதாச மற்றும் கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் திருமதி றூபாவதி கேதீஸ்வரன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

கிளிநொச்சி மாவட்டத்தில் சமூக பாதுகாப்பு ஓய்வூதியத் திட்டத்தில் இணைந்தவர்களுக்கு அங்கத்தவர் புத்தகங்கள் வழங்கப்பட்டன.

இதேவேளை, மாவட்டத்தில் குறைந்த காலப் பகுதியில் திட்டத்தை நடைமுறைப் படுத்தி சிறப்பான சேவையாற்றிய உத்தியோகத்தர்கள் இந்த நிகழ்வில் கௌரவிக்கப்பட்டனர். (வ-9)

## காவலாளியை கட்டி வைத்து திருட்டு முயற்சி

யாழ்ப்பாணம், ஓக. 2

வரணி, மாசேரிப் பகுதியில் வீட்டுக் காவலாளியை கட்டி வைத்து விட்டு திருடர்கள் கைவரிசையைக் காட்டியுள்ளனர். எனினும் அயலவர்கள் விழிப்படைந்ததால் இடைநடுவில் அந்த முயற்சி தடுக்கப்பட்டது.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் நடைபெற்றுள்ளது.

இந்தச் சம்பவம் குறித்து மேலும் தெரியவருவதாவது:

வீட்டு உரிமையாளர் குடும்பத்துடன் வெளியே சென்ற நிலையில் வயது முதிர்ந்த தாயார் ஒருவரும், வீட்டுக் காவலுக்கு அமர்த்தப்பட்ட அயலவர் ஒருவரும் வீட்டில் இருந்துள்ளனர்.

இரவு 11 மணியளவில் வீட்டுக்குள் நுழைந்த திருடர்கள் காவலுக்கு இருந்தவரை கட்டி வைத்துவிட்டு திருட்டு முயற்சியில் ஈடுட்டுள்ளனர். வீட்டுக்கு வெளியே வந்த வயோதிபப் பெண் கூச்சலிடவே அவரது கையில் இருந்த வளையல்களை பறித்துக் கொண்டு திருடர்கள் தப்பியோடி விட்டனர். சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஜ-122)

## மன்மோகனுக்கு எதிராக கறுப்புக் கொடி போராட்டம்

சென்னை, ஓக.2

திருச்சிக்கு இன்று செல்லவுள்ள இந்தியப் பிரதமர் மன்மோகன்சிங்குக்கு எதிர்ப்புத் தெரிவித்து ம.தி.மு.கவின் ஏற்பாட்டில் கறுப்புக் கொடி காட்டும் போராட்டம் நடத்தப்படவுள்ளது. இந்தப் போராட்டத்துக்கு மக்கள் உரிமைக் கூட்டமைப்பின் ஒருங்கிணைப்பாளர் பழ. நெடுமாறனும் ஆதரவு தெரிவித்துள்ளார்.

புதுக்கோட்டையில் தொழிற்சாலை ஒன்றைத் திறந்து வைப்பதற்காகவே. இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங் திருச்சி வருகின்றார்.

அரசியல் கட்சிகள் அழைப்பு விடுத்துள்ள கறுப்புக் கொடி காட்டும் போராட்டம் காரணமாக பாதுகாப்புப் பணிகளை மேற்கொள்வதற்காக திருச்சி மத்திய மண்டலத்துக்குட்பட்ட 8 மாவட்டங்களைச் சேர்ந்த சுமார் 1,500 பொலிஸார் வரவழைக்கப்பட்டுள்ளதுடன் தமிழ்நாடு சிறப்புக் காவல் படையின் 2 அணியைச் சேர்ந்த 150 பேரும், சிறப்பு பாதுகாப்புக் குழுவைச் சேர்ந்த 50 பேரும், வெடிகுண்டு பரிசோதனை மற்றும் தடுப்புப் பிரிவின் 8 குழுவினரும் பாதுகாப்புப் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். (ற)

# தமிழக மீனவர் கைது விடயத்தில் இந்திய மத்திய அரசு பாராமுகம்

## தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா குற்றச்சாட்டு

சென்னை, ஓக.2

தமிழக மீனவர்கள் தொடர்ந்தும் இலங்கைக் கடற்படையால் கைது செய்யப்படுவது தொடர்பில் இந்திய மத்திய அரசு உரிய நடவடிக்கை எதுவும் எடுக்காது இருக்கின்றது என்று தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா குற்றஞ்சாட்டியுள்ளார்.

இது தொடர்பாக இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்குக்கு எழுதிய அவசர கடிதத்திலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

''அண்மையில் ராமநாதபுரம் மாவட்டத்தைச் சேர்ந்த 34 மீனவர்கள் இலங்கைக் கடற்படையால் சிறைப்பிடிக்கப்பட்டுள்ளனர். மீனவர் பிரச்சினை தொடர்பாக பலமுறை மத்திய அரசுக்கு அறிவுறுத்தியிருந்தபோதும் அதுகுறித்து மத்திய அரசு எதுவித அக்கறையும் எடுப்பதாக இல்லை. கச்சத்தீவுப் பகுதியில் தமிழக மீனவர்கள் மீன் பிடிக்கும் உரிமையை உறுதி செய்ய வேண்டும்'' என்று தெரிவித்துள்ள தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா, ''கைது செய்யப்பட்டு இலங்கைச் சிறையில் உள்ள மீனவர்கள் தொடர்பிலும் இந்திய அரசு பாராமுகமாக இருக்கின்றது'' என்றும் குற்றஞ்சாட்டியுள்ளார்.

''இலங்கைக் கடற்படையால் தமிழக மீனவர்கள் தாக்கப்படுவதையும் அவர்களின் உடைமைகளும் வாழ்வாதாரமும் சிதைக்கப்படுவதையும் தொடர்ந்து கடிதம் மூலம் தெரிவித்தும் இந்திய அரசு மௌனமாக இருப்பதுடன், எந்த வித நடவடிக்கையும் மேற்கொள்ளவில்லை. மீனவர்களை விடுவிப்பது குறித்து எவ்வித உத்தரவாதமும் தரவில்லை. இந்திய வெளியுறவுத் துறை அமைச்சகம் இதில் நேரடியாகத் தலையிட்டு, உச்சபட்ச முக்கியத்துவம் கொடுத்து, தூதரகத்தின் மூலம் மீனவர்களை விடுவிக்க தகுந்த நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்'' என்றும் அந்தக் கடிதத்தில் ஜெயலலிதா வலியுறுத்தியுள்ளார். (ற)

## தெலுங்கானா எதிர்ப்பு 14 அமைச்சர்கள் பதவி விலகல்

ஐதராபாத், ஓக.2

ஆந்திராவில் தெலுங்கானா தனி மாநிலம் அறிவிக்கப்பட்டதற்கு எதிர்ப்பு தெரிவித்து தெலுங்கானா எதிர்ப்பு பகுதியைச் சேர்ந்த காங்கிரஸ் கட்சியின் 14 அமைச்சர்கள், 24 நாடாளுமன்ற உறுப்பினர்கள் பதவி விலகுவதற்கு முடிவெடுத்துள்ளனர்.

அதேவேளை, மேலும் 40 அமைச்சர்கள் பதவி விலகப் போவதாக மிரட்டல் விடுத்துள்ளனர் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

அதையடுத்துப் பெரும் பரபரப்பு ஏற்பட்டுள்ளது. (ற)

# மீனவர்களை விடுவியுங்கள்

## காரைக்கால் மீனவர்கள் போராட்டம்

காரைக்கால், ஓக.2

இலங்கைக் கடற்படையால் கைது செய்யப்பட்ட தமிழக மீனவர்கள் அனைவரையும் விடுக்கக் கோரி காரைக்கால் மீனவர்கள் காலவரையற்ற வேலைநிறுத்தப் போராட்டத்தில் இறங்கியுள்ளனர்.

நாகபட்டிணம் மற்றும் காரைக்கால் மீனவர்கள் 65 பேர் இலங்கைக் கடற்படை யால் கைது செய்யப்பட்டு இலங்கைச் சிறைகளில் அடைக்கப்பட்டுள்ள நிலையில் மேலும் 74 பேர் நேற்று முன்தினம் இலங்கைக் கடற்படையால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்தச் சம்பவம் காரைக்கால் பகுதி மீனவர்களிடையே கடும் கொந்தளிப்பை ஏற்படுத்தியுள்ளது. இலங்கைக் கடற்படையால் கைது செய்யப்பட்டுள்ள 139 தமிழக மீனவர்களையும் உடனடியாக விடுவிக்கக் கோரி காலவரையற்ற வேலை நிறுத்தப் போராட்டத்தில் இறங்கியுள்ள மீனவர்கள், இதுகுறித்து நடவடிக்கை எடுக்கப்படாவிட்டால் போராட்டம் விரிவுபடுத்தப்படும் என்றும் எச்சரித்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட மீனவர்களில் 34 பேர் யாழ்ப்பாணத்திலும், ஏனையவர்கள் திருகோணமலையிலும் சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது. அண்மைக்காலமாக அதிகரித்து வரும் இலங்கைக் கடற்படையினரின் தாக்குதல் குறித்து தமிழக மீனவர்களிடையே பெரும் அதிருப்தி தோன்றியுள்ளது. (ற)

## பொலிஸாருடன் வாக்குவாதம்; இயக்குநர் சேரனுக்கு அபராதம்

சென்னை, ஓக.2

விதிமுறைகளை மீறி கார் கண்ணாடிகள் மீது ஒட்டப்படும் கறுப்பு 'ஸ்டிக்கர்'களை அகற்ற முயன்ற பொலிஸாருடன் ஏற்பட்ட வாக்குவாதத்தை அடுத்து இயக்குநர் சேரனுக்கு அபராதம் விதிக்கப்பட்டது.

சென்னையில் தற்போது வாகனங்களின் கண்ணாடிகளில் ஒட்டப்பட்டுள்ள குறித்த கறுப்பு நிற 'ஸ்டிக்கர்'களை பொலிஸார் அகற்றி வருகின்றனர். வீதிகளில் வாகனங்களை மறிக்கும் பொலிஸார் தமே அவற்றை அகற்றுகின்றனர்.

இந்தநிலையில் இயக்குநர் சேரனின் காரும் பொலிஸாரின் சோதனையில் சிக்கியது. அதில் ஒட்டப்பட்டிருந்த 'ஸ்டிக்கர்'களை அகற்ற முயன்ற பொலிஸாருடன் சேரன் வாக்குவாதத்தில் ஈடுபட்டார். அதையடுத்து சேரனுக்கு பொலிஸார் அபராதம் விதித்தனர்.

அதையடுத்து அங்கு கூட்டம்கூடத்தொடங்கியது. உடனே சேரன் அபராதத் தொகையைக் கட்டி விட்டு அங்கிருந்து அகன்றுவிட்டார். (ற)

# மரண அறிவித்தல்

# ஆனந்தன் செல்வநாதன்

**(உரிமையாளர், அரியாலை மண்ணெண்ணெய் நிரப்பு நிலையம்)**



அரியாலையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட ஆனந்தன் செல்வநாதன் 01.08.2013 வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஆனந்தன் - சரஸ்வதி தம்பதியினரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான K.V.சின்னத்துரை (ஸ்தாபகர் அரியாலை மண்ணெண்ணெய் நிரப்பு நிலையம்) வள்ளிப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மருமகனும் சுசீலாவதியின் பாசமிகு கணவரும், விஜிலா, சசிலா (அபிவிருத்தி உத்தியோகத்தர், பிரதம செயலாளர் செயலகம்), சிவானந்தன் (நிர்வாக உத்தியோகத்தர், கிராமிய நீர்வழங்கல் வடிகாலமைப்பு திட்டம்), சர்வானந்தன் (பொதுச் சுகாதார வெளிக்கள உத்தியோகத்தர், கிளிநொச்சி, நிர்வாக இணைப்பாளர், சயன்ஸ் அக்கடமி, நல்லூர், அரியாலை) ஆகியோரின் அன்புத் தந்தையாரும், இராஜேந்திரகுமார், ராஜ்குமாரன் (அபிவிருத்தி உத்தியோகத்தர், மாகாண திட்டமிடல் செயலகம்), சுகந்தினி ஆகியோரின் பாசமிகு மாமனாரும், வைஷ்ணவிகா (புனித ஜோண் பொஸ்கோ) ரஜீதன் (புனித பரியோவான் கல்லூரி) ஆகியோரின் அன்புப் பேரனும் செல்வலஷ்மி, செல்வநாயகம் ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 02.08.2013 வெள்ளிக்கிழமை பி.ப. 2.00 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்துமயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

22, கலைமகள் வீதி, அரியாலை மேற்கு,
யாழ்ப்பாணம். T.P: 0775388471

தகவல்
**குடும்பத்தினர்**

## 30 இலட்சம் குழந்தைகளுக்கு இலவச ஆடை

டுபாய், ஓக.2
முஸ்லிம்களின் புனித மாதமான ரமழானை முன்னிட்டு மனிதாபிமான பிரசாரத்தை ஆரம்பித்துள்ள டுபாய் மன்னர் ஷேக் முகமது பின் ரஷீத் அல் மக்தூம், 25 நாடுகளைச் சேர்ந்த ஏழைக் குழந்தைகளுக்கு 30 இலட்சம் ஆடைகளை விநியோகித்துள்ளார்.
10 இலட்சம் குழந்தைகளுக்கே ஆடைகளை வழங்கத் திட்டமிட்டிருந்த மன்னர், பின்னர் 30 இலட்சம் குழந்தைகளுக்கு ஆடைகளை விநியோகித்துள்ளார்.
இதுபற்றி அல் மக்தூம் கருத்துத் தெரிவிக்கையில், ''ஐக்கிய அரபு எமிரேட் மக்களின் தாராள குணத்தால் இப்போது 30 லட்சம் குழந்தைகள் பயனடைந்துள்ளனர்.
இத்திட்டத்தை திறம்பட செயற்படுத்திய ஐக்கிய அரபு எமிரேட்டின் ரெட் கிரசன்ட் ஆணையம் மற்றும் இதர அமைப்புகளையும் மனதாரப் பாராட்டுகிறேன். ஐக்கிய அரபு எமிரேட் நாடானது தொண்டு செய்வோரின் தலைநகராக விளங்குகிறது'' என்று தெரிவித்தார். (ற)



## சிம்பாப்வே ஜனாதிபதித் தேர்தல்: மீண்டும் வெல்வாரா முகாபே?

சிம்பாப்வேயில் ஜனாதிபதித் தேர்தலுக்கான வாக்குப்பதிவுகள் நிறைவுற்ற நிலையில், தற்போது வாக்குகள் எண்ணும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. தேர்தல் முடிவுகள் 5 நாள்களுக்குள் முழுமையாக அறிவிக்கப்படும். சிப்பாப்வே அரசமைப்பு விதிகளின்படி 50 சதவீதத்துக்கும் அதிகமான வாக்குகளைப் பெறுபவர் ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்படுவார். 50 சதவீத வாக்குகளை எந்த வேட்பாளரும் பெறாதவிடத்து செப்ரெம்பர் 11ஆம் திகதி மறுவாக்குப் பதிவு இடம்பெறும். தற்போது வாக்குகள் எண்ணப்பட்டு வரும் நிலையில் ஜனாதிபதி முகாபேயே மீண்டும் ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்படுவார் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. (ற)

## சிரியா செல்கின்றது ஐ.நா. குழு

ஜெனிவா, ஓக.2
ஐக்கிய நாடுகள் சபையின் பிரதிநிதிகள் தமது நாட்டில் இராசயன ஆயுதங்கள் குறித்த விசாரணைகளை மேற்கொள்ள சிரியா அனுமதியளித்துள்ளது.
அதையடுத்து சிரியாவில் இரசாயன ஆயுதங்கள் பயன்படுத்தப்படுவதாக வெளியான குற்றச்சாட்டுக்கள் தொடர்பாக ஆராய்வதற்கு ஐ.நாவின் பிரதிநிதிகள் அங்கு செல்லவுள்ளனர்.
சிரியா பயணமாகவுள்ள ஐ.நா. குழு, அங்கு மூன்று பகுதிகளில் இந்த விசாரணைகளை மேற்கொள்ளவுள்ளன.
சிரிய அரச படையினர் இரசாயன ஆயுதங்களைப் பயன்படுத்தி தாக்குதல்களை மேற்கொள்வதாக பல்வேறு தரப்பினரும் குற்றச்சாட்டுக்களை முன்வைத்திருந்தனர். எனினும் அதை சிரிய அரசு தொடர்ந்து மறுத்து வருகின்றது. (ற)

# உடனடித் தேவை சீர்திருத்தங்களே

### அமெரிக்க பொருளாதார மந்தநிலை குறித்து அந்நாட்டு ஜனாதிபதி பராக் ஒபாமா கருத்து

வொஷிங்டன், ஓக.2
அமெரிக்காவை விடவும் ஜேர்மனி, இந்தியா போன்ற நாடுகள் வேகமாக முன்னேறி வரும் நிலையில் அமெரிக்காவில் பொருளாதார சீர்திருத்தங்கள் மேற்கொள்ள வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது என்று தெரிவித்துள்ளார் அந்நாட்டின் ஜனாதிபதி பராக் ஒபாமா.
இதுகுறித்துக் கருத்துத் தெரிவித்த பராக் ஒபாமா மேலும் கூறும்போது,
இந்தியா, ஜேர்மனி, சீனா போன்ற நாடுகள் பொருளாதார ரீதியாக முன்னேறி வருகின்றன. எனவே



அமெரிக்காவும் வெறுமனே பார்த்துக் கொண்டு இருக்க முடியாது. நாம் எதையும் செய்யாமல் இருப்பது, மத்திய நடுத்தர வகுப்பினருக்கு உதவாது. நல்ல சம்பளத்துடன் தொழிற்சாலைகளில் வேலைவாய்ப் புகளை உருவாக்குவதில் நாடு கவனம் செலுத்த வேண்டியது அவசியம்.
நாம் பொருளாதார சீர்திருத்தங்களை உடனடியாக மேற்கொள்ள வேண்டிய நிலையில் உள்ளோம். எமது உற்பத்திப் பொருள்கள் உலகெங்கும் கிடைக்கக் கூடிய வகையில் எமது கொள்கைகளை மாற்ற வேண்டிய நிலையில் உள்ளோம்'' என்று தெரிவித்தார். (ற)

## குட்டி இளவசரனுக்கு 50 பேர் பாதுகாப்பு

லண்டன், ஓக.2
பிரிட்டனின் புதிய வாரிசின் பாதுகாப்புக்கென பிரத்தியேகமாகத் தெரிவு செய்யப்பட்ட 50 பொலிஸார் பாதுகாப்புக் கடமைகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.
பிரிட்டனில் நார்போல்க் நகரம் சண்டிரிங்காமில் உள்ள 20,000 ஏக்கர் பரப்பளவு கொண்ட ராணி இரண்டாவது எலிசபெத் தங்கியுள்ள மாளிகையில், புதிய வாரிசு குழந்தை பராமரிக்கப்பட்டு வருகிறது.
அரசு குடும்ப வாரிசான குழந்தை ஜார்ஜ், 19-ஆம் நூற்றாண்டில் கட்டப்பட்ட சண்டிரிங்காம் மாளிகை



யில் உள்ள ஆன்மெர் வளாகத்தில் வைத்துதான் பராமரிக்கப்பட்டு வளர்க்கப்படுவார் என்று கூறப்படுகிறது.
அந்த அரண்மனையைச் சுற்றி பிரத்தியேகமாகத் தெரிந்தெடுக்கப்பட்ட 50 பொலிஸார் 24 மணி நேரமும் பாதுகாப்புக் கடமைகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர் என்று கூறப்படுகின்றது. (ற)

## ஈராக் வன்முறை: கடந்த மாதம் 989 பேர் சாவு

பாக்தாத், ஓக.2
ஈராக்கில் கடந்த மாதம் இடம்பெற்ற வன்முறைகளில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 989 எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.
இந்த எண்ணிக்கையுள் 778 பொதுமக்களும், 88 பொலிஸாரும், 55 இராணுவத்தினரும், 68 சேவையாளர்களும் அடங்குகின்றனர். அது மட்டுமல்லாது, கடந்த மாதத்தில் மட்டும் வன்முறைகளில் சிக்கி ஆயிரத்து 567 பேர் காயமடைந்துள்ளனர்.
ஈராக் வரலாற்றில் 2008 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்துக்குப் பிறகு கடந்த ஜூலை மாதம் வன்முறைகள் தொடர்பில் மிக மோசமான மாதமாக பதிவாகியுள்ளது.(ற)

## சிறையில் சிறுநீர் அருந்தி உயிர் பிழைத்தவருக்கு அமெரிக்க அரசு வழங்கியது 40 இலட்சம் டொலர்

நியூயோர்க், ஓக.2
அமெரிக்கப் பொலிஸாரின் அசமந்தப் போக்கால் 5 நாள்களாக தண்ணீர், உணவின்றி சிறையில் தவித்த இளைஞர், தனது சிறுநீரை அருந்தி உயிர்வாழ்ந்துள்ளார். அதையடுத்து அமெரிக்க அரசு குறித்த இளைஞருக்கு 40 இலட்சம் அமெரிக்க டொலரை நட்ட ஈடாக வழங்கியுள்ளது.
அமெரிக்காவின் கலிபோர்னியா நகரில் போதை தடுப்பு அதிகாரிகள் அதிரடி சோதனை நடத்தியபோது கஞ்சா வைத்திருந்த டேனியேல் சாங்(25) என்ற இளைஞரை கைது செய்தனர்.
அவரை 4 1/2 சதுர மீற்றர் பரப்பளவு கொண்ட 5 அடி உயர தனிமைச் சிறையில் அடைத்து விசாரணை நடத்திய அதிகாரிகள் அங்கேயே வைத்து பூட்டிவிட்டுச் சென்றனர்.
தங்களது கட்டுப்பாட்டில் ஒரு கைதி இருப்பதை 5 நாள்களாக மறந்து விட்ட பொலிஸார் வழக்கமான ஏனைய பணிகளில் கண்ணும் கருத்துமாய் ஈடுபடத் தொடங்கினர்.
ஜன்னல் வசதி ஏதுமில்லாத காற்றோட்டமற்ற அந்த குறுகிய அறையில் குடிக்கத் தண்ணீர் கூட இல்லாமல் தவித்த அந்த வாலிபர் தனது சிறுநீரையே குடித்து உயிரைக் காத்துக்கொண்டார்.
5ஆவது நாள் பொலிஸார் அந்த அறையை திறந்து பார்த்தபோது மயங்கிய நிலையில் கிடந்த இளைஞரை உடனடியாக மருத்துவமனையில் சேர்த்தனர்.
இதுகுறித்து ஊடகங்கள் செய்தி வெளியிட்டதை அடுத்து இந்த விவகாரம் நீதிமன்றம் வரை சென்றது.
அதையடுத்து டேனியேல் சாங்குக்கு 40 இலட்சம் டொலரை நட்டஈடாக வழங்கி பிரச்சினையை முடித்தது அமெரிக்க அரசு.(ற)

## பழங்குடி மக்கள் மீது தாக்குதல்

ஜெனிவா, ஓக.2
சிலி நாட்டின் பழங்குடியினரான மபுசீ இனத்தவர்களை அந்த நாட்டு அரசு பயங்கரவாத தடை சட்டத்தை கொண்டு அடக்குமுறைக்கு உட்படுத்துகின்றது என்று ஐக்கிய நாடுகள் சபை குற்றம் சுமத்தியுள்ளது.
ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் தொடர்பான விசேட ஆய்வாளர் பென் எமெர்சன் இதனைத் தெரிவித்துள்ளார்.
தங்களின் நில உரிமைகளைக் கோரி நீண்டகாலமாக போராடி வரும் அந்த மக்களுக்கு எதிராக சிலி அரசு கடுமையான அடக்குமுறைகளை மேற்கொள்கின்றது என்றும் அவர் தெரிவித்தார்.(ற)

## ஜோன் கெர்ரி பாக். பயணம்



இஸ்லாமபாத்தில் உள்ள அமெரிக்க தூதர... கெர்ரி

அமெரிக்க இராஜாங்க செயலாளர் ஜோன் கெர்ரி பாகிஸ்தானுக்குப் பயணம் மேற்கொண்டுள்ளார்.
பாகிஸ்தான் சென்றுள்ள ஜோன் கெர்ரி, பிரதமர் நவாஸ் ஷெரீப், புதிதாக தெரிவு செய்யப்பட்ட பாகிஸ்தான் ஜனாதிபதி ஆசிப் அலி சர்தாரி மற்றும் இராணுவ தளபதி அஷ்பக் கயானி ஆகியோரை சந்தித்துப் பேச்சு நடத்தவுள்ளார்.
இந்த பேச்சுக்களில் தீவிரவாத ஒழிப்பு தொடர்பாகவே முக்கியமாகக் கலந்தாலோசிக்கப்படும் என்று தெரிவிக்கப்படுகின்றது.
அத்துடன், பாகிஸ்தானின் பொருளாதாரம், எரிசக்தி, மின்சாரம் போன்ற தட்டுப்பாடுகளை நிலைப்படுத்தும் வகையில் இரு நாடுகளுக்கும் இடையே ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்படுவது குறித்தும் பேச்சுக்களின் போது கலந்துரையாடப்படவுள்ளது என்றும் கூறப்படுகின்றது. (ற)

# பொதுநலவாய மாநாட்டில் கனடா; ஆதாரமற்றது இலங்கையின் தகவல்

## அடியோடு மறுக்கிறார் அந்தநாட்டின் வெளியுறவு அமைச்சர்

லண்டன், ஒக. 2

இலங்கையில் நடைபெறவிருக்கும் பொது நலவாய உச்சிமாநாட்டில் தாம் கலந்து கொள்ளத் திட்டமிட்டிருப்பதாக வெளிவந்துள்ள செய்திகளை கனேடிய வெளியுறவு அமைச்சர் ஜோன் பேயார்ட் மறுத்துரைத்துள்ளார்.

இலங்கையின் வெளியுறவு அமைச்சின் கண்காணிப்பு உறுப்பினர் சஜின்வாஸ் குணவர்த்தன இலங்கை செய்திப் பத்திரிகை ஆசிரியர்களிடமும் ஊடகங்களுக்கும் விடுத்த ஒரு செய்தியில் கனேடிய அமைச்சர் மாநாட்டில் கலந்துகொள்ளவிருப்பதை உறுதிப்படுத்தியுள்ளார் என்று தெரிவித்திருந்தார்.

ஆனால், பேயார்டின் பேச்சாளர் றிக்றொத், கல்காரி ஹெறோல்ட் பத்திரிகைக்கு தெரிவித்துள்ள கருத்தில் மாநாட்டில் கலந்து கொள்வதுபற்றி அமைச்சர் பேயார்ட் இனிமேல்தான் ஒரு முடிவுக்கு வரவேண்டியிருக்கிறது என்றார்.

இலங்கையில் நடந்துமுடிந்த போரின் போது தமிழ் இனத்தவர்களுக்கு எதிராக இலங்கை அரசு போர்க் குற்றம் புரிந்துள்ளது என்ற குற்றச்சாட்டு குறித்து அந்த அரசு பொறுப்புக் கூறாமல் இருந்துவருவது பற்றி கனேடிய அமைச்சர் தொடர்ந்தும் கவலை கொண்டிருக்கிறார் என்று றிக்றொத் கூறியுள்ளார்.

இலங்கையில் நடைபெறும் நிகழ்வுகளை கனடா தொடர்ந்தும் கண்காணிப்பு செய்து வரும் மாற்றங்களை செய்து கொள்ளும்படி இயன்றளவில் அந்த நாட்டுக்கு அழுத்தம் கொடுக்கப்படும் என்றும் றொத் தெரிவித்துள்ளார்.

எமது பிரதமர் மிகத் தெளிவாகக் கூறியிருப்பது போல், அடுத்த பொதுநலவாய மாநாட்டுக்கு முன்னர் எமது கவலைகள் யாவும் தீர்க்கப்பட்டுவிடும் என்று எதிர்பார்க்கின்றோம்.

எதுவானாலும் தற்போதைய நிலவரத்தின் படி எமது அரசு முழு அளவில் பங்குபற்றுவது கடினமாக இருக்கும் என்றார் அவர்.

இலங்கை தனது மனித உரிமை செயற்பாடுகளை சுத்தமாக்கிக் கொள்ளாதவரை பொதுநலவாய உச்சி மாநாட்டை நடத்தக் கூடாது. அந்த வகையில் தாம் மாநாட்டை பகிஷ்கரிக்க வேண்டியேற்படும் என்று கனேடிய பிரதமர் ஸ்ரீபன் ஹார்ப்பர் ஏற்கெனவே அச்சுறுத்தியிருப்பது தெரிந்த விடயம். (ப)

## வீடு வாடகைக்கு

யாழ்/ கோப்பாய் இராச வீதியில் கோப்பாய் பொலிஸ் ஸ்ரேஷனுக்கு அருகில் 7 அறைகளும் போதிய வாகனத் தரிப்பிடங்களும் கொண்ட மேல்மாடி வீடு வாடகைக்குண்டு.

தொடர்பு: 077 704 6705

## கோயில் உதவியாளர் தேவை

இணுவில் திருப்பதி வேங்கடேஸ்வரர் ஆலயத்திற்கு ஆசாரமுள்ள, கோயில் வேலை தெரிந்த, உதவியாளர் தேவை. அனுபவமுள்ளவர்கள் 04.08.2013 ஞாயிற்றுக்கிழமை அன்று காலை 9 மணி முதல் மதியம் 12 மணி வரையும் சுயவிவரக் கோவையுடன் நேரில் சமுகம் தரவும்.

கே.கே.எஸ் வீதி, இணுவில்,
மருதனார்மடம்.

## தேவை

★ **தொழில் நுட்ப உத்தியோகத்தர்**
குடிசார் இயந்திரவியலில் தேசிய தொழில்நுட்ப சான்றிதழ் மற்றும் கட்டட வேலைகளில் குறைந்தது ஐந்து வருட முன் அனுபவம் இருத்தல் வேண்டும்.

★ **முகாமைத்துவ உதவியாளர்**
குறைந்தபட்ச தகைமையாக க.பொ.த.உயர்தரம் வர்த்தகப்பிரிவில் சித்தி அடைந்திருத்தல்வேண்டும். **Quickbook** போன்ற கணினிமயப்படுத்தப்பட்ட கணக்கியல் தொகுப்புக்களில் பரிச்சயமுள்ளவராகவும் இரண்டு வருட முன் அனுபவம் உள்ளவராகவும் இருத்தல் வேண்டும்.

★ **போக்குவரத்து அலுவலகர் (Transport Officer)**
குறைந்தபட்ச தகைமையாக க.பொ.த. உயர்தரம் சித்தி அடைந்திருத்தல் வேண்டும். மேற்குறித்த துறையில் முன் அனுபவம் விரும்பத்தக்கது.

★ **களஞ்சியக் காப்பாளர்**
குறைந்தபட்ச தகைமையாக க.பொ.த. உயர்தரம் சித்தி அடைந்திருத்தல் வேண்டும். கட்டுமானத்துறையில் முன் அனுபவம் விரும்பத்தக்கது. கணினியறிவு மேலதிக தகைமையாகக்கொள்ளப்படும்.

★ **மின் மற்றும் இலத்திரனியல் உபகரண தொழில்நுட்பவியலாளர் (Instrument Technician)**
மின் மற்றும் இலத்திரனியல் கருவிகள் மற்றும் இயந்திரங்கள் போன்றவற்றைப் பராமரிப்பதிலும் பழுதுபார்ப்பதிலும் முன்னனுபவம் உள்ளவர்கள் விரும்பத்தக்கது. தகைமை சான்றிதழ் பரிசீலிக்கப்படும்.

தகைமையுடையோர் முழு விவரங்களும் அடங்கிய விண்ணப்பத்தை 09.08.2013 ஆம் திகதிக்கு முன்பதாக பின்வரும் விலாசத்துக்கு அனுப்பவும்.

யூரோவில்
இல. 45, காட்டுக்கந்தோர் ஒழுங்கை, யாழ்ப்பாணம்.

(சி/10725)
(45.6.3)

## சாய்ராம் திருமண மண்டபம்

திருமண வைபவம், பூப்புனித நீராட்டு, பிறந்த நாள் வைபவம், வேறு விசேட ஒன்று கூடல் ஆகிய வைபவங்களுக்கு உகந்த மண்டபம்.

விளையாட்டரங்க வீதி, கோப்பாய் தெற்கு,
கோப்பாய். (30100)(3.6.11)

T.P- 021 223 0532, 077 856 3648

## வீடு வாடகைக்கு

யாழ்ப்பாணம் அரியாலை கனகரட்னம் வீதியில் 5 Rooms, 2Hall, Varanda உடன் சகல வசதிகளும் கொண்ட தனியாகவோ அலுவலகமாகவோ உபயோகிக்க கூடிய வீடு வாடகைக்கு உண்டு.

0774 847 386

## Annai Nagaa Food City

பதவி வெற்றிடம்

Electrician / மின் இணைப்பாளர்
(ஒப்பந்த அடிப்படையில்) அனைத்து மின் இணைப்பு சம்பந்தப்பட்ட வேலைகள் செய்யக்கூடிய அனுபவமுள்ளோர் விரும்பப்படுவர்.

மேலதிக விவரங்களுக்கு:
077 477 3481, 021 739 0191

(சி/10721) (45.6.3)

## விற்பனைக்கு உண்டு

Arneg Display Freezer (Flat Display)
Suitable For Frozen Products
அளவுகள்: APx (250L x 90co x 75h)Cm
விலைபேசித் தீர்மானிக்கப்படும்
மேலதிக விவரங்களுக்கு:
077 477 3485/ 077 4773479



## புலமைச்சுடர் நடத்தும் தரம் 5 மாணவர்களுக்கான வருடாந்த இலவசக் கருத்தரங்கு

இடம் : வலி. தென்மேற்கு பிரதேச சபை கலாசார மண்டபம் - மானிப்பாய்

காலம் : 04/08/2013 (ஞாயிற்றுக்கிழமை)

நேரம் : காலை 09.00 மணி தொடக்கம் 04.00 மணிவரை

வளவாளர்கள்

என். எஸ். தீபன், பீ. பத்மநேசன்

கல்விச்சுடர் வெளியிடும் மாதிரி வினாத்தாள்களை பெற்றுக்கொள்ளும் பாடசாலைகளும் தவறாது சமுகம் தருமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

புலமைப்பரிசில் பரீட்சை எழுதப்போகும் அனைத்து மாணவச் செல்வங்களையும் அழைக்கின்றோம்.

மாணவர்களின் தொகை மட்டுப்படுத்தப்பட்டுள்ளதால் முற்பதிவு செய்துகொள்ளவும்.

ஒழுங்கமைப்பு

வலி. தென்மேற்கு பிரதேச இளைஞர் சம்மேளனம் 077 2247419

தொடர்புகளுக்கு

011 5738855 / 071 6850005

உதயன் நாளிதழின் ஊடக அனுசரணையுடன்

(C/10862)

## புலமைச்சுடர் நடத்தும் தரம் 5 மாணவர்களுக்கான வருடாந்த இலவசக் கருத்தரங்கு



காலம் : 03/08/2013 (சனிக்கிழமை)

நேரம் : காலை 09.00 மணி தொடக்கம் 04.00 மணிவரை

இடம் : காரைநகர் யாழ்ற்றன் கல்லூரி

வளவாளர்கள்

என். எஸ். தீபன், என். சுரேஸ்

புலமைப்பரிசில் பரீட்சை எழுதப்போகும் அனைத்து மாணவச் செல்வங்களையும் அழைக்கின்றோம்.

கல்விச்சுடர் வெளியிடும் மாதிரி வினாத்தாள்களை பெற்றுக்கொள்ளும் பாடசாலைகளும் தவறாது சமுகம் தருமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

மாணவர்களின் தொகை மட்டுப்படுத்தப்பட்டுள்ளதால் முற்பதிவு செய்துகொள்ளவும்.

ஒழுங்கமைப்பு
காரைநகர் பிரதேச இளைஞர் சம்மேளனம்
077 2247419

தொடர்புகளுக்கு

011 5738855 / 071 6850005

உதயன் நாளிதழின் ஊடக அனுசரணையுடன்

(C/10863)

## மடிக்கணினி திருட்டு; சிறுவன் உட்பட ஐவர் கைது

தென்மராட்சி, ஓக.2
கொடிகாமம் கெற்பேலிப் பகுதியில் வீடொன்றினுள் புகுந்து அங்கிருந்து மடிக்கணினி மற்றும் கையடக்கத் தொலைபேசி ஆகியவற்றைத் திருடிய சம்பவத்துடன் தொடர்புடைய சிறுவன் உட்பட 5 பேரை கொடிகாமம் பொலிஸார் கைது செய்துள்ளனர்.
வீட்டு உரிமையாளர் பொலிஸ் நிலையத்தில் செய்த முறைப்பாட்டை அடுத்து பொலிஸார் மேற்கொண்ட நடவடிக்கையின் பயனாக இந்த ஐந்து பேரும் கைது செய்யப்பட்டனர்.
இந்த ஐந்து பேரையும் நேற்று முன்தினம் புதன்கிழமை பொலிஸார் நீதிமன்றில் முற்படுத்தினர். வழக்கை விசாரித்த நீதிவான் சிறுவனை சான்று பெற்ற பாடசாலையில் அனுமதிக்குமாறும் ஏனைய நால்வரையும் பிணையில் விடுவிக்குமாறு உத்தரவிட்டார். (ஒ-9)

## உரிமைகோராத சடலங்கள்

யாழ்ப்பாணம், ஓக. 2
யாழ்.போதனா வைத்தியசாலையில் உரிமை கோரப்படாத 3 சடலங்கள் வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளன.
குறித்த சடலங்களை உறவினர்கள் அடையாளம் காட்டிப் பெற்றுக்கொள்ளலாம் என்று வைத்தியசாலைப் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.
கடந்த 25 ஆம் திகதி நெடுந்தீவு பொலிஸாரால் ஒப்படைக்கப்பட்ட ஆணொருவரின் சடலமும் கடந்த 21 ஆம் திகதி வட்டுக்கோட்டைப் பொலிஸாரால் ஒப்படைக்கப்பட்ட ஆணா, பெண்ணா என அடையாளம் காணப்படாத சடலமும் கடந்த 28 ஆம் திகதி நெடுந்தீவு பொலிஸாரால் ஒப்படைக்கப்பட்ட ஆணா பெண்ணா என அடையாளம் காணப்படாத ஒருவரின் சடலமும் வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளன. (வ-14)

## பழைய மாணவரின் நிதியுதவியில் பாடசாலைக்கு சுற்றுமதில்

வரணி, ஓக. 2
வரணி, இடைக்குறிச்சி ஸ்ரீசுப்பிரமணிய வித்தியாசாலையின் சுற்றுமதில் அமைக்கும் பணிக்கு பாடசாலையின் பழைய மாணவர் ஒருவர் உதவியுள்ளார்.
அதே இடத்தைச் சேர்ந்த வெளிநாடு ஒன்றில் வசிக்கும் பழைய மாணவரே இந்த நிதியுதவியை வழங்கியுள்ளார்.
பாடசாலைக்கான மதில் அமைக்கும் பணிகள் தற்போது இடம்பெற்று வருவதாகவும், விரைவில் வேலைகள் பூர்த்தியடையும் எனவும் பாடசாலை அதிபர் சு.தர்மலிங்கம் தெரிவித்துள்ளார். (ஐ-122)



சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தினர் அமரர் லயன் டாக்டர் வே.தம்பித்துரையின் நினைவாக மந்துவிலில் நடத்திய மருத்துவப் பரிசோதனை முகாமில் பார்வையில் குறைபாடு காணப்பட்ட பெண்ணுக்கு கழகத் தலைவர் லயன் பி.தளிர்ராஜ் மூக்குக் கண்ணாடி அணிவித்து பத்திரிகை வாசிக்க வைக்கிறார். அருகில் கழக உறுப்பினர்களான லயன் து.யசோதரன், லயன் கு.பிரணவராஜா, லயன் இ.கோகிலன் ஆகியோர் நிற்கின்றனர். (வ-9)

# கட்டுப்பாட்டுக்குள் கசிப்பு உற்பத்திகள்

### மதுவரித் திணைக்கள அதிகாரிகள் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஓக.2
குடாநாட்டில் கசிப்பு உற்பத்தி வெற்றிகரமாகக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டுள்ளது என்று மதுவரித் திணைக்கள அதிகாரிகள் தெரிவித்தனர்.
குடாநாட்டில் மதுப்பிரியர்கள் தற்போது அரச சாராயம் மற்றும் பியர் வகை மதுபானங்களை அதிகமாக நாடுவதால் உள்ளூர் உற்பத்தியாளர்களால் உற்பத்தி செய்யப்படும் கசிப்பை நாடுவதை மதுப்பிரியர்கள் தவிர்த்து வருகின்றனர்.
இதனால் காடுகளில் மறைமுகமாக கசிப்பு உற்பத்தியை மேற்கொள்பவர்கள் விற்பனை இல்லாத காரணத்தால் அதனைக் கைவிட்டுள்ளனர். தற்போது குடாநாட்டுக்குத் தேவையான அளவு மதுபானங்கள் விற்பனை நிலையங்களுக்கு கொண்டு வரப்படுகின்றன.
இந்த நிலையில் மதுவரித் திணைக்கள உத்தியோகத்தர்கள் ஆங்காங்கே இரகசியமாகக் கிடைக்கப்பெறும் தகவல்களின் அடிப்படையில் சட்டவிரோதமாக கசிப்பை உற்பத்தி செய்பவர்களைக் கையும் களவுமாகப் பிடிப்பதுடன் நீதிமன்றங்களில் வழக்குத்தாக்கல் செய்யப்பட்டு



அவர்களிடம் கூடுதல் தண்டப் பணமும் அறவிடப்பட்டு வருகின்றது.
இதனால், கசிப்பு உற்பத்தியாளர்கள் சட்டவிரோதமாக கசிப்பை உற்பத்தி செய்வதைக் கைவிட்டுள்ளனர். எனினும், அரச சாராயத்தை மதுபான விற்பனை நிலையங்களில் இருந்து பெற்று வீடுகளில் வைத்து விற்பனை செய்யும் நடவடிக்கைகள் தொடர்ந்த வண்ணம் உள்ளன.
இதனைக் கட்டுப்படுத்துவதற்கான சட்ட நடவடிக்கைகளையும் மதுவரித் திணைக்களம் மேற்கொண்டு வருகிறது.
எனினும், கடந்த வருடங்களைவிட இந்த வருடம் கசிப்பு உற்பத்தியாளர்கள் மிகக் குறைவடைந்துள்ளமைக்கு கசிப்பை உற்பத்தி செய்யக் கூடிய சாதகமான இடம் கிடைக்கப்பெறாமை ஒரு காரணமாக இருந்தாலும், பாவனையாளர்களின் விருப்புக் குறைவடைந்தமையே பிரதான காரணம் எனத் தெரியவருகிறது.
தீவகப் பகுதி உட்பட கிராமப் புறங்களிலும் சட்டவிரோதமான கசிப்பு உற்பத்திகள் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டுள்ளன எனவும் திணைக்கள அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (வ-14)

## பத்திரிகைத் தொகுப்புப் பிரதிகள் ஹேமலதா நூலகத்தில் காட்சிக்கு

யாழ்ப்பாணம், ஓக. 2
நவாலி ஹேமலதா செல்வராசா ஞாபகார்த்த நூலகத்தில் வாசகர்களின் தேவைக்கேற்ப பத்திரிகைத் தொகுப்புப் பிரதிகள் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளன.
நூலக வாசிப்பு மாதத்தை முன்னிட்டு 1995 ஆம் ஆண்டில் இருந்து தொகுக்கப்பட்ட பத்திரிகைகள் இவ்வாறு காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன.
வலி.தென்மேற்கு பிரதேச சபைக்கு உட்பட்ட பாடசாலை மாணவர்கள், ஆராய்ச்சியில் ஈடுபடுவோர், வாசகர்கள் என அனைவரும் பத்திரிகைப் பிரதிகளைப் பயன்படுத்தலாம்.
வாசிப்புத் தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக பத்திரிகைகள் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.
இவற்றை வாசகர்கள் தேவைக்கேற்ப பயன்படுத்த முடியும் என்று நூலக உதவியாளர் செல்வி சிந்துயானி நடேசன் தெரிவித்துள்ளார். (வ-50-14)

# குளங்களில் நீரில்லை விவசாயிகள் கவலை



தற்போது சிறுதானியப் பயிர்கள் தண்ணீர் இல்லாமல் வாடிய நிலையில் உள்ளன.

வரணி, ஓக. 2
வரணி இடைக்குறிச்சிப் பிரதேசத்தில் வயல் பிரதேசங்களில் சிறுதானியப் பயிர் விதைப்பு செய்த விவசாயிகள் தற்போது அவற்றைக் கைவிடும் நிலையில் உள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.
வயல் நிலங்களுக்கு மத்தியில் அமைந்திருக்கும் குளங்களில் இருந்தே அவர்கள் சிறுதானியப் பயிர்களுக்கு நீர் பயன்படுத்தி வந்த நிலையில் அந்தக் குளங்கள் கடும் வெப்பநிலை காரணமாக நீர்வற்றியுள்ள நிலையில் தண்ணீர் பெறமுடியாத நிலை ஏற்பட்டுள்ளது.
நெல் அறுவடை காலத்தின் பின்பு இன்றுவரை மழை பெய்யவில்லை. இதன் காரணமாக சிறுதானியப் பயிர்ச் செய்கையில் ஈடுபட்டு வந்த மாவில் வயல் வெளியில் ஒரு குளமும், இறமில் பிரதேச வயல்வெளியில் உள்ள ஒரு குளமும் தற்போது நீர் வற்றியுள்ளன.
தற்போது சிறுதானியப் பயிர்கள் தண்ணீர் இல்லாமல் வாடிய நிலையில் உள்ளன. இந்த இரண்டு குளங்களையும் கமத்தொழில் அபிவிருத்தித் திணைக்களம் புனரமைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். (வ-122)

## கோப்பாய் பிரதேச செயலர் பிரிவில் நடமாடும் சேவை

### ஓக. 4,5 திகதிகளில்

யாழ்ப்பாணம், ஓக. 2
'கபே' அமைப்பின் அனுசரணையுடன் வலி.கிழக்கு கோப்பாய் பிரதேச செயலர் பிரிவில் தேசிய அடையாள அட்டை பெறுவதக்கான நடமாடும் சேவை எதிர்வரும் 4 ஆம், 5 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளது.
இந்த நடமாடும் சேவைகள் எதிர்வரும் 4 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை கோப்பாய் பிரதேச செயலகத்திலும் மறுநாள் திங்கட்கிழமை அச்சுவேலி கலாமினி மண்டபத்திலும் நடைபெறவுள்ளன.
இதில் அடையாள அட்டைக்கு புதிதாக விண்ணப்பித்தல், தொலைந்தமைக்கான விண்ணப்பங்கள் மற்றும் பழுதடைந்த அல்லது திருத்தத்துக்கான விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.



இதற்கான பிறப்புச் சான்றிதழ், திருமணச் சான்றிதழ் உட்பட தேவையான ஆவணங்களுடன் நடமாடும் சேவையில் பங்குகொள்ளுமாறு வலி.கிழக்கு கோப்பாய் பிரதேச செயலர் ம.பிரதீபன் அறிவித்துள்ளார். (வ-14-7)

## நாடகவிழா யாழ்ப்பாணத்தில்

யாழ்ப்பாணம்,ஓக. 2
எண்பதுகளில் தமது மொழி பெயர்ப்பு நாடகங்களின் மூலம் ஈழத் தமிழ் நாடகப் புலத்துக்கு பெரும்பணியாற்றிய நாடக நெறியாளர் க.பாலேந்திராவும், அவரது அவைக் காற்றுக் கலைக் கழகத்தினரும் தமது 35 ஆவது ஆண்டு நிறைவைக் கொண்டாடும் முகமாக லண்டனில் இருந்து யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்துள்ளார்கள்.
இவர்களது ஏற்பாட்டில் நாளை சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் 'நாடகவிழா' ஒன்று ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.
இந்த விழாவில் கண்ணாடி வார்புகள், பாடம், சம்பந்தம் ஆகிய மொழி பெயர்ப்பு நாடகங்கள் மேடையேற்றப்படவுள்ளன.
இந்த நாடகவிழாவுக்கான அனுசரணையை திருமறைக் கலாமன்றம், தேசிய கலை இலக்கியப் பேரவை, சப்தமி கலையகம் ஆகிய அமைப்புக்கள் வழங்குகின்றன.
தற்போது லண்டனைத் தளமாகக் கொண்டு செயற்பட்டு வரும் அவைக் காற்றுக் கலைக் கழகம் கடந்த 35 ஆண்டுகளாக இலங்கை உட்படப் பல்வேறு நாடுகளிலும் நூற்றுக்கணக்கான நாடகங்களை மேடையேற்றி உலகளாவிய தமிழ் நாடக ரசிகர்களின் வரவேற்பைப் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஒ)

## மாணவருக்கு வழிகாட்டல் முகாம்

யாழ்ப்பாணம், ஓக.2
ஐ.ஏ.ரி.சித்திரப் பயிற்சி நிறுவனத்தால் புதிதாக உயர்தர வகுப்பில் சித்திரப் பாடத்தை தெரிவு செய்தவர்களுக்கான இலவச வழிகாட்டல் முகாம் நாளை சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு கந்தர் மடத்திலுள்ள ஐ.ஏ.பீ. நிறுவனத் தில் நடைபெறவுள்ளது. (வ-14)



# வாகனம் வழங்குவதில் தொடர்ந்து புறக்கணிப்பு

## காரைதீவு பிரதேச சபைக்கு

**வருடங்கள் இரண்டாகியும் இன்றுவரை வாகன வசதி யற்ற ஒரு சபையாகவே காரைதீவு பிரதேச சபை இருந்து வருகின்றது.**

அம்பாறை, ஓக. 2

மக்கள் சேவை மற்றும் பிர தேச சபைச் செயற்பாடுக ளுக் கென வாகன வழங்கப்ப டாது காரைதீவு பிரதேச சபை புறக்கணிக்கப்பட்டநிலை யில் இருந்து வருகின்றது.

இவ்வாறு, காரைதீவு பிர தேச சபைத் தவிசாளர் செல்லையா இராசையா கவலை தெரிவித்துள்ளார்.

கிழக்கு மாகாண சபையின் மாகாண அபிவிருத்தி அரங் கத்தின் அம்பாறை மாவட் டக் கூட்டம், அக்கரைப்பற்று ரீ.எப்.சீ. மண்டபத்தில் திங் கட்கிழமை நடைபெற்றது.

இந்தக் கூட்டத்தில் காரை தீவு பிரதேச சபைப் பிர தேசம் தொடர்பாகக் கருத்து வெளியிட்டபோதே அவர் இவ்வாறு கூறினார்.

இந்தக் கூட்டத்தில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

அம்பாறை மாவட்டத்திலுள்ள எமது காரைதீவு பிரதேச சபையைக் கடந்த உள்ளூ ராட்சி மன்றத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கைப்பற்றி, மக்கள் சேவை யைத் தொடர்ந்து மேற் கொண்டு வருகின்றது.

வருடங்கள் இரண்டாகியும் இன்றுவரை வாகன வசதி யற்ற ஒரு சபையாகவே காரைதீவு பிரதேச சபை இருந்து வருகின்றது.

தவிசாளர் என்ற வகையில் சபை நடவடிக்கைகளுக்கா கவும், மக்கள் சேவைகளுக் காகவும் பெரும்பாலும் எனது சொந்த வாகனத் தையே பயன்படுத்த வேண் டிய அவல நிலையில் உள் ளேன்.

எமது சபைக்கென வாகன மொன்றை வழங்குமாறு உள்ளூராட்சித் திணைக்க ளம், அமைச்சு உட்பட மாகாண சபையையும் பல தடவை கள் கோரி வந்துள்ளோம்.

ஆனால், இன்று வரை புதிய வாகனம் ஒன்றை வழங்கு வதற்கு எவரும் முன்வர வில்லை. ஏற்கனவே வாகன வசதியுள்ள பல சபைக ளுக்கு மேலதிகமாகப் புதிய வாகனங்கள் வழங்கப்பட் டுள்ளன.-என்றார். (ச-30)

# கடல் அரிப்பில் இருந்து மக்களைப் பாதுகாக்க தடையைப் போடுங்கள்

## மீனவர் சங்கங்கள் வேண்டுகோள்



திருகோணமலை,ஓக. 2

திருகோணமலை மாவட்டத் தில் மூதூர்- கொட்டியாராக் குடாக்கடலை அண்டிய தாக உள்ள தக்வா நகர், ஹபீப் நகர், பஹ்ரிய்யாநகர், கடற் கரைச் சேனை, இறால் குழி போன்ற கரையோரப் பகுதி களை கடல் அரிப்பில் இருந்து பாதுகாக்க வேண்டும்.

கரையோரங்களில் கடல் அரிப்பைத் தடுக்கும் முகமாக கற்களைப் போடுமாறும், இதன் மூலம் அருகில் உள்ள மீனவர்கள் குடியிருப்புக்களை பெருக்கு கடல் ஆபத்திலி ருந்து பாதுகாக்க முடியு மென திருகோணமலை மீனவர் சங்கங்கள் வேண்டு கோள் விடுத்துள்ளன.

அண்மைக்காலமாக கடல் பெருக்கு ஏற்படுகின்ற நிலை மையில், கடற்கரை எல்லை யிலிருந்து அதிக தூரத்தி லிருக்கும் மீனவர் குடியிருப் புக்களும் கடல் சீற்றத்தி னால் முழுமையாக சேதப் படும் நிலை ஏற் பட்டுள்ளது.

இதனால் சில மீனவகர் குடும்பங்கள் அவதியுற்று இருப்பிடங்களை விட்டு வெளியேறியுள்ளன.

மூதூர் கரையோரமாக தடைக் கற்களையிட்டு வேலி யிடுவதன் மூலம் கடல் கொந்தளிப்பிலிருந்தும் மீனவர்களின் குடியிருப் புகள் பாதிக்கப்படுவதிலி ருந்தும் மக்களைப் பாது காக்க முடியும் என்று மீனவர் சங்கங்கள் தெரி வித்தன. (ச-40)

# திருக்கோவிலில் சுனாமி ஒத்திகை

திருக்கோவில்,ஓக.2

அம்பாறை,திருக்கோவில் தம்பட்டை பிரதேசத்தில் மாவட்ட இடர் முகாமைத் துவ நிலையத்தினால் சுனாமி விழிப்புணர்வும் சுனாமி முன்னெச்சரிக்கை ஒத்திகை நடவடிக்கையும் மேற்கொள்ளப்பட்டது.

அம் பாறை மாவட்ட இடர் முகாமைத்துவ பணிப்பாளர் ஏ.எஸ்.எம்.சியாற் தலை மையில் ஒத்திகை மேற்கொள்ளப்பட்டது.

இந்த ஒத்திகை நடவடிக்கையில், இடர் ஒலி எழுப் பப் பட்டதும் மக்கள் வீடு களில் இருந்து பாதுகாப்பான இடங்களுக்கு எவ்வளவு நேரத்தில் செல்கின்றனர் என்பது குறித்து கண்காணிக்கப்பட்டது. (ச)

# கிணறுகள் அமைக்க நடவடிக்கை



அம்பாறை,ஓக. 2

அம்பாறை, திருக்கோவில் பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட கஞ்சிகுடிச்சாறு, தங்கவேலாயுதபுரம் ஆகிய கிராமங்களில் மலசல கூடங்களும் பொதுக் கிண றுகளும் அமைப்ப தற்கான ஆரம்ப நிகழ்வு திங்கட் கிழமை நடைபெற்றது.

இந்த இரண்டு கிராமங் களிலும் 39 மலசலகூடங் களும் 9 பொதுக்கிணறுக ளும் அமைக்கப்படவுள் ளன.

புனர்வாழ்வு அமைச்சால் இதற்காக 40 லட்சம் ரூபா மானியமாக வழங்கப்பட் டுள்ளது என்று திருக் கோவில் பிரதேச செயலர் எம்.கோபாலரெத்தினம் தெரிவித்தார். (ச)

முதலாம் ஆண்டு நினைவஞ்சலி





எங்கள் அப்பா!

தமிழுக்கு உயிர் கொடுத்து
தரணியிலே எம்மைத்
தலை நிமிர வைத்தவரே
எம் முன்னேற்றப் பாதைக்கு
முதுகெலும்பாக இருந்தவரே
எங்கள் அப்பா!
ஆண்டவன் அழைப்பை
ஆண்டுவிழா அழைப்பென நினைத்தவரே
ஆண்டவன் அரவணைப்பில்
ஆண்டு ஒன்று போனபோதும்
நம்ப மனம் மறுக்கிறது
வெம்பி தேகம் அழுகிறது
உங்கள் நினைவுகளை
எங்கள் கனவுகளாக்கி
நாள்தோறும் காணுகின்றோம் உங்களை
நாளும் பொழுதும் தொழுகின்றோம்
சென்றவருடம்
தனிமையிலே எம்மை
தவிக்கவிட்டுச் சென்றபோது
நாம் அழுத கண்ணீர் காயவில்லை
அழுது இன்னும் ஓயவில்லை

உங்கள் ஆத்மாசாந்தி அடைய
எல்லாம் வல்ல இறைவனை வேண்டி நிற்கும்.
- குடும்பத்தினர்.

அமரர்
செல்லப்பா துரைராஜா
(ஓய்வுபெற்ற அதிபர்)
திதி:- 02.08.2013
வெள்ளிக்கிழமை

அன்னை அருள் மடியில்
01.06.1938

தெய்வத் திருவடியில்
13.08.2012

# அரசியல்வாதிகளின் தலையீட்டால் கல்வித்துறைக்கு இன்று சவால்

## கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை குற்றச்சாட்டு



கொழும்பு,ஓக. 2

அரசியல்வாதிகளின் அநாவசிய தலையீடுகளால் கல்வித்துறை இன்று சவால்களுக்கு முகம் கொடுக்க வேண்டிய ஒன்றாகிவிட்டது என்று பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:

சுதந்திரக் கல்வித்துறையானது, கூட்டுத்தாபனமாகவும் நிறுவனமாகவும் பின்னர் அரசியல் மயமாகவும் மாற்றியமைக்கப்பட்டுள்ளதால் கல்வித்துறை சிக்கல்களை எதிர்கொண்டுள்ளது.

இதன்காரணமாக, அரசியல்வாதிகளால் ஆசிரியர்களை மண்டியிடச் செய்யப்படும் நிலை வரை அது நீண்டு சென்றுள்ளது.

கல்வித்துறைக்குள் அரசியல் புகுத்தப்படுவதை ஏற்றுக்கொள்ள முடியாது.

பாடசாலை மற்றும் கல்வியில் ஒழுக்கத்துக்கு முக்கியத்துவம் வழங்கப்பட வேண்டும்.

எனினும் அதனை இங்கு காணமுடியாதிருக்கின்றது.

இத்தகைய நிலைமையில் இருந்து கல்வித்துறை விடுபட வேண்டும்.

நாட்டை ஆசியாவின் ஆச்சரியம் மிக்க நாடாக மாற்றப் போவதாக கூறி கட்டடங்களை அமைப்பதால் அது நிறை வேறி விடப்போவதில்லை. -என்றார். (ச)

# ஹக்கீமின் தந்தை செல்வா நினைவுச் சொற்பொழிவு நூல் இன்று வெளியீடு



கொழும்பு,ஓக. 2

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும், நீதி அமைச்சருமான ரவூப் ஹக்கீம் நிகழ்த்திய தந்தை செல்வா நினைவுச் சொற்பொழிவுகள் அடங்கிய 'சாத்வீகப் போராட்டமும் பிரயோக வலுவுள்ள அரசியலும்' என்ற நூல் வெளியீட்டு நிகழ்வு கொழும்பில் இடம்பெறவுள்ளது.

தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழிகளிலான இந்த இரு நூல்களின் வெளியீட்டு விழா இன்று வெள்ளிக்கிழமை மாலை 3.30 மணிக்கு கொழும்பு - 02, வொக்ஷால் வீதி, 51 ஆம் இலக்கத்தில் அமைந்துள்ள ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைமையகமான 'தாருஸ்ஸலாமில்' இடம்பெறவுள்ளது.

இந்த நிகழ்வில் அமைச்சர் வாசுதேவ நாணயக்கார, பேராசிரியர் எஸ்.பத்மநாதன், பேராசிரியர் எஸ்.சந்திரசேகரன் ஆகியோர் உரையாற்றவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச)

# குற்றம் புரிபவர்களின் முழுத் தகவலும் என்கையில்

## திருந்துங்கள் என்கிறார் ஜனாதிபதி

கொழும்பு,ஓக. 2

குற்றம் செய்வோர் பற்றிய சகல தகவல்களும் எனக்குக் கிடைக்கப்பெறுகின்றன என்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

அலரி மாளிகையில் உள்ளூராட்சிமன்ற உறுப்பினர்களைச் சந்தித்தபோதே அவர் இவ்வாறு கூறினார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-




பிரதேச அரசியல்வாதிகளினால் மேற்கொள்ளப்படும் குற்றச் செயல்கள் தொடர்பிலான சகல தகவல்களும் கிடைக்கப் பெறுகின்றன.

பொது மக்கள் இந்தத் தகவல்களை எனக்கு வழங்குகின்றனர். திருந்துவதற்குச் சந்தர்ப்பம் அளிக்கும் நோக்கில் நான் நடவடிக்கை எதுவும் எடுக்காமல் இருக்கின்றேன்.

எதிர்காலத்தில் குற்றச் செயல்களில் ஈடுபடும் பிரதேச அரசியல்வாதிகளுக்கு எதிராக கடுமையான ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படும்.

குற்றச் செயல்களில் ஈடுபடாது கிராம மக்களின் இதயங்களை வென்றெடுக்க அரசியல்வாதிகள் பழகிக் கொள்ள வேண்டும். -என்றார். (ச)



புதிய இராணுவத் தளபதியான லெப்டினன் ஜெனரல் தயா ரத்னாயக்கவிடம் இராணுவ தளபதிக்கான கடமைகள் புதன்கிழமை உத்தியோகபூர்வமாகக் கையளிக்கப்பட்டன.

இராணுவத் தலைமையகத்தில் வைத்து உத்தியோகபூர்வமான வாளை ஜெனரல் ஜகத் ஜயசூரிய புதிய இராணுவத் தளபதியிடம் கையளித்தார்.

# சேவையிலிருந்து நீக்கப்படுவார் முன்னாள் பொலிஸ் பேச்சாளர்



கொழும்பு,ஓக. 2

பொலிஸ் முன்னாள் பேச்சாளரான பிரசாந்த ஜயக்கொடி, சேவையை விட்டு நீக்கப்படவுள்ளார்.

ஆஸ்திரேலியாவில் பயிற்சிக்காக அனுப்பி வைக்கப்பட்ட அவர், பயிற்சியை முடித்த பின்னர், நாடு திரும்பாததையடுத்தே சேவையை விட்டு நீக்கப்படுவார் என்று பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.

இவர் இறுதியாக இரத்தினபுரி பொலிஸ் பிரிவுக்குப் பொறுப்பான மூத்த கண்காணிப்பாளராகப் பணியாற்றியிருந்தார். (ச)

# மாகாணசபை முறைமை படிப்படியாக ஒழிக்கப்படும்

## ஜனாதிபதி உறுதி வழங்கினார் என்கிறார் குணதாச அமரசேகர

கொழும்பு,ஓக. 2

13 ஆவது திருத்தச் சட்டத்துக்கு அமைய கொண்டு வரப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் மாகாண சபை முறைமை படிப்படியாக ஒழிக்கப்படும் என்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ உறுதியளித்துள்ளார் என்று தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்தின் தலைவர் குணதாச அமரசேகர தெரிவித்தார்.

தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்தின் தலைவர் குணதாச அமரசேகர உட்பட அந்த அமைப்பின் பிரதிநிதிகள் அலரி மாளிகையில் ஜனாதிபதியை சந்தித்து, 13 ஆவது திருத்தச்சட்டம், பொலிஸ், காணி அதிகாரங்கள் தொடர்பில் பேச்சு நடத்தியிருந்தனர்.

இதன்போதே ஜனாதிபதி இவ்வாறு உறுதிமொழியை வழங்கியுள்ளார்.

இதுகுறித்து குணதாச அமரசேகர மேலும் தெரிவித்ததாவது:-

மாகாண சபை முறைமையை உடனடியாக ஒழிக்க முடியாது. படிப்படியாகவே அதற்கான நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும் என்று ஜனாதிபதி கூறினார்.

வட மாகாணசபைக்கு காணி, பொலிஸ் அதிகாரங்கள் ஒருபோதும் வழங்கப்பட மாட்டாது.

அவை தனது அதி காரத்திற்குள்ளேயே வைத்திருக்கப்படும் என்று ஜனாதிபதி குறிப்பிட்டார். -என்றார். (ச)

# கொழும்பு தெற்குத் துறைமுகத்தை திங்களன்று திறந்து வைப்பார் மஹிந்த




கொழும்பு,ஓக. 2

கொழும்பு தெற்கு துறைமுகம் எதிர்வரும் திங்கட்கிழமை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவால் திறந்து வைக்கப்படவுள்ளது.

இந்தத் துறைமுகம் நாட்டின் முன்னேற்றத்துக்கு உந்து சக்தியாக அமையும் என்று துறைமுகங்கள், நெடுஞ்சாலை திட்ட அமைச்சர் ரோஹித அபேகுணவர்தன தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:

கொழும்பு தெற்கு துறைமுக விஸ்தரிப்பினூடாக நேரடியாகவும் மறைமுகமாகவும் 25 ஆயிரம் பேருக்கு வேலை வாய்ப்புகள் கிடைக்கும். 25 ஆயிரம் கொள்கலன் எடுத்துச் செல்லும் கப்பல்களும் நங்கூரமிடும் வகையில் கொழும்பு தெற்கு துறைமுகம் விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

கொழும்பு துறைமுக விஸ்தரிப்பின் முதற்கட்டப் பணிகளுக்கு 400 மில்லியன் ரூபா செலவிடப்பட்டது. 6.8 கிலோமீற்றர் நீளமான பிரதான நீர் தடுப்பு வேலி அமைக்கப்பட்டுள்ளதோடு, 18 மீற்றர் ஆழத்துக்கு நீரேந்து பரப்பு நிர்மாணிக்கப்பட்டுள்ளது.

இந்தத் துறைமுகம் உலகிலுள்ள பிரதான துறைமுகங்களுடன் போட்டியிடும் வகையில் நவீன வசதிகளுடன் கூடியதாக விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

இந்தத் துறைமுகம் உரிய காலத்தில் நிர்மாணிக்கப்பட்டிருக்காவிட்டால் கப்பல்கள் வேறு நாடுகளின் துறைமுகங்களுக்கே செல்ல நேரும். வேறுநாட்டு துறைமுகங்களின் உதவியுடனே பொருள்களை ஏற்றி இறக்க வேண்டி ஏற்பட்டிருக்கும்.

95 வீதமான பொருள்கள் கடல் மார்க்கமாகவே இறக்குமதி செய்யப்படுவதால் பொருள்களின் விலைகளும் உயரும். கடலை நிரப்பியே தெற்குத் துறைமுகம் அமைக்கப்பட்டுள்ளது.-என்றார்.(ச)

# தென் மாகாண கடற்றொழில் அமைச்சர் கைது

கொழும்பு,ஓக.2

தாக்குதல் மேற் கொண்ட சம்பவம் தொடர்பில் தென் மாகாண கடற்றொழில் அமைச்சர் டி.வி. உபுல் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

மாகாண அமைச்சர் வியாழக்கிழமை காலை தங்காலை பொலிஸ் நிலையத்தில் சரணடைந்தபோது கைது செய்யப்பட்டார் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

தங்காலை டிப்போவைச் சேர்ந்த சாரதி ஒருவரே மாகாண கடற்றொழில் அமைச்சரால் தாக்கப்பட்டுள்ளார் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு குறிப்பிட்டுள்ளது.

இந்தத் தாக்குதலில் காயமடைந்த சாரதி தங்காலை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (ச)

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-2229944, விளம்பரம்: 021-2229731
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## தேர்தல் வெற்றியை இலக்கு வைக்காத நிலைபேண் அபிவிருத்தி நாடப்படுமா....?

அரசாங்க வங்கித்துறை சரிந்து போகும் நிலைக்குத் தள்ளப்படும் ஆபத்து உருவாகி வருவதாக எச்சரிக்கப்பட்டுள்ளது. நட்டமுறும் அரசுசார் நிறுவனங்களுக்குக் கடன்களை வழங்குவதாலேயே அவற்றுக்கு இந்த நிலை தோன்றி உள்ளதாக, ஏற்பட்டுள்ளதாக அரசாங்க பொது நிறுவனங்களைக் கண்காணிக்கும் குழு (COPE), தனது பிந்திய அறிக்கையில் அபாய மணி அடித்துள்ளது.

நட்டத்தில் இயங்கும் அரச நிறுவனங்களுக்குக் கடன்களை வழங்குவது தொடர்பில், அரசாங்க வங்கிகள் ஒழுங்கு முறையான செயற்றிட்டம் ஒன்றை வகுக்க வேண்டும். அந்த செயற்றிட்டத்தில் இறுக்கமான வரன்முறைகள், கண்காணிப்பு விதிகள் உள்ளடக்கப்பட வேண்டும் என்று ''கோப்'' காத்திரமாகச் சுட்டிக் காட்டி உள்ளது.

கட்டுப்பாடான செயல்முறைகள், சீரான நிர்வாகம், ஊழல் அற்ற தலைமைத்துவங்கள் இல்லாமையே பல அரச நிறுவனங்கள் நட்டமுறுவதற்கு முக்கிய காரணங்கள் என்று அமைச்சர் டியு குணசேகரா தலைமையிலான ''கோப்'' அழுத்திக் கூறியுள்ளது.

நூற்றுக்கணக்கான அரச வர்த்தக நிலையங்களின் செயற்பாடுகள், நவீன விதி முறைகளுக்கு அமைவாக நடைபெறுவதில்லை என்பதனையும், முறைப்படி கணக்கு அறிக்கைகளை கையாளும் ஆற்றல் கொண்டவர்கள் பணியில் அமர்த்தப்படாமல் இருப்பதனையும் ''கோப்'' முன்னரும் சுட்டிக் காட்டி இருந்தது.

அனைத்துலக நியமங்களுக்கு ஏற்பக் கணக்கு அறிக்கைகள் தயாரிக்கப்பட வேண்டும் என்றும் அப்போது சுட்டிக் காட்டப்பட்டது.

2012 ஜனவரி முதலாம் திகதி முதல் 2013 மார்ச் 30ஆம் திகதி வரையான 15 மாத காலப்பகுதிக்கான 244 அரச நிறுவனங்களின் செயற்பாடுகள் தொடர்பான அறிக்கையே இப்போது வெளிவந்துள்ளது.

அரச தலைவர்களும், அவர்களது பொருளாதார நிபுணர்களும் நாட்டின் பொருளாதார வளர்ச்சி விகிதம் குறித்தும், வருமானம் குறித்தும் பெருமை பேசிவரும் நிலையில், இலங்கையை ஆசியாவின் அதிசயமாக மாற்றுவோம் என்று அரச தலைவர்கள் தம்பட்டம் அடித்துக்கொண்டிருக்கும் நிலையில், வெளியாகியுள்ள 'கோப்'பின் இப்போதைய அறிக்கை அதிர்ச்சி அளிப்பதாக உள்ளது.

அரச நிறுவனங்களைப் பொறுத்தவரை சம்பந்தப்பட்ட அமைச்சின் செயலாளரே அவற்றின் செயற்பாடுகளுக்குப் பொறுப்பு என்பதால் அவர்களை அழைத்து விசாரணை நடத்தியதுடன், வருடாந்த நிதி அறிக்கைகளைச் சமர்ப்பிக்காத நிறுவனங்களிடம் பொது அறிக்கை பெறப்பட்டு பெரும் சிரமங்களுக்கு மத்தியில் இந்த அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது. கோப் அறிக்கையின்படி 16 அரச சார்பு நிறுவனங்கள் நட்டத்தில் இயங்குவது கண்டறியப்பட்டுள்ளது.

அவற்றில் 4 நிறுவனங்கள் மிகவும் மோசமான நிலையில், அதாவது 98 சதவீத நட்டத்தில் இயங்குகின்றன. பொதுமக்களின் அத்தியாவசிய சேவைகளை உள்ளடக்கிய பிரதான நிறுவனங்களான பெற்றோலியக் கூட்டுத்தாபனம், இலங்கை மின்சார சபை ஆகியன இந்த நான்கு நிறுவனங்களுக்குள் அடங்குகின்றன. மற்றைய இரு நிறுவனங்களும் ஸ்ரீலங்கா எயார் லைன், மிஹின் லங்கா ஆகியனவாகும்.

அரசியல் செல்வாக்குகளுக்கு இடமளியாது பிரச்சினைகளைத் தீர்க்க நடவடிக்கை எடுக்குமாறு அரசுக்குப் பரிந்துரைக்கப்பட்டிருந்தது. அவ்வாறு அன்றி இப்போதைய நிலை தொடர்ந்தால் நாட்டின் பொருளாதாரம் மோசமான நிலையை அடையும் என்று குழு எச்சரித்திருந்தது.

2005இல் பரிந்துரைக்கப்பட்ட விடயங்கள் அமுல் செய்யப்பட்டதால் ஒன்பது அரச நிறுவனங்கள் முன்னேற்றம் கண்டுள்ளன என்றும் 38 நிறுவனங்கள் இலாபத்தில் இயங்க ஆரம்பித்துள்ளன என்றும் குழுவின் தலைவர் தெரிவித்துள்ளார். அரச நிறுவனங்கள் சுயாதீனமாகவும், அதிகாரிகளினதும் அமைச்சர்களினதும் தலையீடின்றியும் இயங்க அனுமதிக்கப்பட்டால் சாதகமான பலனைப் பெறமுடியும் என்றும் அவர் தனது அறிக்கையில் சுட்டிக்காட்டியுள்ளார்.

அவரது பிரதான பரிந்துரைகளில் முக்கியமானது உயர் பதவிகளில் துறைசார் அதிகாரிகள் நியமிக்கப்படவேண்டும் என்பதும் அது கட்டாயம் கடைப்பிடிக்கப்பட வேண்டியது என்பதுமாகும். அரசியல் தலையீடு காரணமாக முற்றிலும் அனுபவமில்லாத, நிபுணத்துவமற்றவர்கள் கொழுத்த சம்பளத்துக்கு உயர் பதவிகளில் நியமிக்கப்படுகின்றனர். அரச நிறுவனமொன்றின் வளர்ச்சிக்கு இவர்களால் பயன் எதுவும் ஏற்படுவதில்லை. அரசின் பணமே பெரியளவில் வீணாகிறது. அரச நிறுவனங்களின் கணக்கு வழக்குகள் மற்றும் கணக்கு வழக்குகளைச் சரிபார்த்தல் நடைமுறைகள் சர்வதேச தரத்தில் இருக்கவேண்டும் என்றும் குணசேகர பரிந்துரை செய்துள்ளார்.

'கோப்'பில் அங்கம் வகிக்கும் எதிர்க்கட்சி உறுப்பினர்களான கரு ஜெயசூரிய, எரான் விக்கிரமரட்ன ஆகியோர் உயர்பதவிகளில் தகுதியானோரை நியமிக்கும்படி கோரிக்கை விடுத்துள்ளனர்.

அரசாங்க பொது நிறுவனங்களைக் கண்காணிக்கும் குழு (கோப்) வெளியிட்டுள்ள பிந்திய அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள குறைபாடுகளை இல்லாது ஒழிப்பதில், அரசு அவசரமாகவும், அதீதமாகவும் செயற்பட வேண்டும். அவ்வாறு செய்தால் மட்டுமே நாட்டின் பொருளாதார வளர்ச்சியை முன்னோக்கி நகர்த்த இயலும்; நிலைபேண தகு அபிவிருத்தியை எட்டித் தானும் பார்க்க முடியும்.

அரசாங்கத்துக்கு அதில் நாட்டம் உண்டாயின், பூசி மெழுகாத விதத்திலும், தேர்தலில் வெல்ல வேண்டும் என்பதற்கான இலக்கைப் புறந்தள்ளியதாகவும் அதன் செயற்பாடுகள் அமைய வேண்டும். அதனை எத்தனை வீதம் எதிர்பார்க்கலாம்....?

# நிலைத்து நிற்குமா ஜனநாயகம்?

ராஜராஜன்

ஜனநாயகம் என்பது மக்களால், மக்களுக்காக உருவாக்கப்பட்டது என்று கூறினார் மறைந்த முன்னாள் அமெரிக்க ஜனாதிபதியான ஆபிரகாம் லிங்கன். இந்த வார்த்தைகளைப் பயன்படுத்துவதற்கு அவரை விடப் பொருத்தமானவர்கள் வேறு எவரும் இருக்க முடியாது. ஏனென்றால் உண்மையான ஜனநாயகத்தை மிகவும் நேசித்தவர் ஆபிரகாம் லிங்கன்.

காலாதி காலமாக அடிமைச் சங்கிலியால் பிணைக்கப்பட்டு கேவலமான நிலையில் உழன்று கொண்டிருந்த கறுப்பின மக்களை மீட்டெடுத்து அவர்களைக் கௌரவம் மிக்க அமெரிக்கக் குடிமக்களாக ஆக்குவதற்கு அவர் எதிர்கொண்ட சோதனைகளும், வேதனைகளும் சொல்லி மாளாதவை. ஆனால் சற்றும் மனம் தளராது தாம் எண்ணியதை அவர் சாதித்துக் காட்டினார்.

ஜனநாயகத்தின் மீது அவர் கொண்டிருந்த உறுதியான பற்றுக் காரணமாக அதன் பெருமை மேன்மேலும் உயர்வடைந்தது. அதனால் தான் அவர் இன்றும் கூட போற்றிப் புகழப்படுகின்றார்.

ஆனால் இன்று ஜனநாயகம் என்பது சொல்லளவில் மட்டுமே காணப்படுகின்றது. ஜனநாயகத்தின் பெயரைக் கூறிக் கொண்டு மக்களை அடிமைப் படுத்தும் காரியங்களே கனகச்சிதமாக நிறைவேற்றப்படுகின்றன.

முற்காலங்களில் மன்னராட்சி நிலவியதால் மன்னர் எதனைத் தீர்மானித்தாலும் அதுவே நிறைவேற்றப்படும். மன்னரை எதிர்த்தவர்கள் கடுமையான தண்டனைகளுக்கு உள்ளாகினர். இதனால் மக்கள் ஆளப்படுபவர்களாக மட்டுமே இருக்க வேண்டிய அவல நிலை நிலவியது. ஜனநாயகம் என்ற சொல் கூட அப்போது முளைவிடவில்லை.

ஆனால், இன்றோ இந்த நிலைமையில் மிகப்பெரிய மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. உலகின் பெரும்பாலான நாடுகளில் மன்னராட்சி ஒழிக்கப்பட்டுவிட்டது. மக்கள் தமக்கு விரும்பிய ஆட்சியாளரைத் தெரிவு செய்யக் கூடிய வாய்ப்புக் கிட்டியுள்ளன. இதில் கூட பெரியளவில் தவறுகள் ஏற்படுவதால் ஜனநாயகம் தோற்றுவிக்கப்பட்டதன் நோக்கமே திசை மாற்றப்பட்டு விட்டது.

அரசியல் ஒரு சாக்கடை என்று கூறினார் அறிஞர் பெர்னாட்ஷா. அவரது கணிப்பு இம்மியும் பிசகவில்லை. இன்றைய அரசியல்வாதிகள் சாக்கடையில் விழுந்தெழும் நிலை உருவாகிவிட்டது. மோசடியும், கயமையும் கலந்த ஒரு கலவையாக அரசியல் மாறிவிட்டது. ஒழுக்கமும், நேர்மையும் மிக்கவர்கள் அரசியலுக்குத் தகுதியானவர்கள் அல்லர் என்ற கருத்து வேரூன்றிவிட்டது. மேலும் அரசியலுக்குள் நுழைந்தால் எப்படியும் பணம் சம்பாதித்துவிட முடியுமென்ற நம்பிக்கையும் மக்களிடையே தோன்றிவிட்டது.

இதன் உண்மைத் தன்மை தற்போது நிரூபணமாவதை நாம் கண்கூடாகக் காண்கின்றோம். ஒரு வேளை சாப்பாட்டுக்கே அல்லாடிக் கொண்டிருந்த பலர் அரசியலுக்குள் நுழைந்ததும் சில வருடங்களிலேயே சகல வளங்களும்பெற்றுசுகபோகவாழ்க்கை வாழ்கின்றனர். இது எவ்வாறு இவர்களால் சாத்தியமானது என எவரும் கேள்வி எழுப்புவதில்லை. இதற்கான துணிவும் எவரிடத்தும் இருப்பதில்லை. அரசியல்வாதிகளே சகலதையும் தீர்மானிக்கின்றனர். மக்களின் விருப்பு வெறுப்புக்கள் எதனையும் அவர்கள் கணக்கில் எடுப்பதில்லை. தாம் சொல்வதையே மக்கள் ஏற்றுக் கொள்ள வேண்டுமென்ற மனநிலையில் அவர்கள் இருக்கின்றனர்.

> “
> எமது நாட்டிலே அரசில் அங்கம் வகிக்கும் சிலர் தாம் நினைத்ததையெல்லாம் நிறைவேற்றி வருகின்றனர். சமுர்த்தி உத்தியோகத்தர் ஒருவர் மரத்தில் கட்டப்பட்டதும், ஆசிரியை ஒருவர் முழங்காலில் மண்டியிட வைக்கப்பட்டதும் இங்குதான் நிகழ்ந்திருக்கின்றன.

ஒரு சில மேற்குலக நாடுகளில் அரசியல் ஆரோக்கியமான நிலையில் இருப்பதைக் காண முடிகின்றது. தகுதியானவர்கள் அரசியலில் நுழைவதும், மக்களின் விழிப்புணர்வுடன் செயற்படுதலுமே இதற்கு முக்கிய காரணங்களாக அமைந்துள்ளன. சுதந்திரமான தேர்தல் ஆணையங்கள் அந்நாடுகளில் செயற்படுவதால் எந்தவித மோசடிகளும் இல்லாத நிலையில் தேர்தல்கள் இடம்பெறுகின்றன. மக்களும் அச்சமின்றித் தமது விருப்புக்கு ஏற்றவாறு வாக்களிக்கின்றனர்.

ஆனால் அநேகமான நாடுகளில் தேர்தல்கள் நேர்மையான வகையில் இடம்பெறுவதில்லை. இவற்றுள் தென் அமெரிக்கா நாடுகள், ஆசிய நாடுகள் , சில ஆபிரிக்கா நாடுகள் அடங்கியுள்ளன. ரஷ்யாவில் அண்மையில் நடைபெற்ற தேர்தலின்போது மோசடிகள் இடம்பெற்றதாகக் கூறி ஆர்ப்பாட்டங்கள் இடம்பெற்றன. ரஷ்யாவின் நிலையே இவ்வாறென்றால் ஏனைய நாடுகளின் நிலைமை எவ்வாறிருக்கும் என்பதை ஊகித்துக் கொள்ள முடியும்.

ஆசிய நாடுகளைப் பொறுத்தவரை பெயரளவிலான ஜனநாயகத்தையே காண முடிகின்றது. உலகிலேயே மிகப் பெரிய ஜனநாயக நாடான இந்தியாவில் கூட ஜனநாயக மரபுகளைப் பின்பற்றுகின்ற வகையில் தேர்தல்கள் இடம்பெறுவதில்லையென்ற குற்றச்சாட்டுக்கள் எழுந்துள்ளன. சாதி,மதம் என்பன தேர்தலில் வெற்றியைத் தீர்மானிக்கின்ற முக்கிய சக்திகளாக உருவெடுத்துள்ளதால் அரசியல்வாதிகள் இவற்றையே தமது தேர்தல் பிரசாரங்களின்போது முன்னிலைப்படுத்தி வருகின்றனர்- இதனால் மக்களிடையே முரண்பாடுகளும், மோதல்களும் ஏற்படுகின்றன. குறிப்பாக அங்கு வாழ்கின்ற இந்துக்களுக்கும், முஸ்லிம்களுக்குமிடையில் அடிக்கடி மோதல்கள் ஏற்படுவதற்கு இந்த அரசியல்வாதிகளே தூபம் இடுகின்றனர். இதனால் வேறுபாடுகள் அதிகரித்து மக்கள் பிளவுபடுத்தப்படுகின்றனர்.

ஒரு நாட்டில் வாழுகின்ற மக்கள் தமது ஜனநாயக உரிமைகளை அனுபவிப்பதற்கான முழு உரிமையையும் கொண்டுள்ளனர். இதற்கு அங்கு பாரபட்சமற்ற நடுநிலையான ஆட்சிமுறை அவசியமாகும்- இன வேறுபாடு. மதவேறுபாடு நிற வேறுபாடு என்பன ஆட்சியாளர்களால் கடைப்பிடிக்கப்படுமாயின் எந்தவொரு நாட்டிலும் அமைதி நிலவ முடியாது.

இனவேறுபாடு கடைப்பிடிக்கப்பட்டதன் காரணமாகவே எமது நாடு 30 ஆண்டுகளுக்கும் மேலாக இரத்தம் சிந்த வேண்டிய அவல நிலைக்குத் தள்ளப்பட்டது. இங்கு வசிக்கும் சிறுபான்மை இனத்தைச் சேர்ந்த மக்கள் பெரும்பான்மை இன மக்களுக்குச் சமமான ஜனநாயக உரிமைகளை அனுபவிப்பதற்கான சந்தர்ப்பம் வழங்கப்படாததன் காரணமாகவே இனங்களுக்கிடையில் வேற்றுமைகள் தலை தூக்கின. ஆனால் கொடிய இறுதிப் போரொன்று இடம்பெற்று ஆயிரக் கணக்கில் மக்கள் கொல்லப்பட்டும், அங்கங்களை இழந்து அல்லல் பட்டும், சொத்துக்கள் யாவற்றையும் இழந்து நிர்க்கதி நிலைக்குத் தள்ளப்பட்டும் மிக மோசமானதொரு நிலை நிலவியது.

இருந்தபோதிலும் போர் ஓய்ந்த பின்னரும்கூட இனவாதிகளின் வெறி அடங்கியதாகத் தெரியவில்லை.

இன்றைய தமிழர் பகுதிகளில் மக்கள் நிம்மதியற்றதொரு சூழ்நிலையிலேயே வாழ்ந்து வருகின்றனர். எந்த நேரத்தில் என்ன நடக்குமோ என்ற அச்ச உணர்வு அவர்களிடத்தில் குடிகொண்டுள்ளது.

இந்த நிலையில் வடக்கு மாகாண சபைத் தேர்தலுக்கான அறிவிப்பும் வெளி வந்துள்ளது. ஆனால் இங்கு வசிக்கும் மக்கள்தமது ஜனநாயக உரிமைகளை அச்சம் அற்றதொரு சூழ்நிலையில்பயன்படுத்த முடியுமா என்ற கேள்வி எழுந்து நிற்கின்றது. ஏனென்றால் அவ்வாறானதொரு நிலை இங்கு ஏற்படுத்தப்படுவதாக தகவல்கள் வெளியாகின்றன. மக்களின் ஜனநாயக உரிமைகளைப் பாதுகாக்க வேண்டிய ஆட்சியாளர்களே இத்தகைய சூழ்நிலைகள் உருவாவதற்கு ஆதரவு வழங்கும்போது யார்தான் என்ன செய்ய முடியும்?


முதலில் ஆட்சியாளர்கள் தாமும் இந்த நாட்டு மக்கள்தான் என்பதை உணர்ந்து கொள்ள வேண்டும். மேலும் தாம் மக்களால் தெரிவு செய்யப்பட்டவர்கள் என்பதையும் நினைவில் கொண்டிருக்க வேண்டும். ஆட்சிக்கு வந்ததும் மக்களின் உணர்வுகளைப் புறக்கணிப்பதும், அடக்கி ஒடுக்குவதும், தாம் செய்யும் யாவற்றையும் மக்கள் ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டுமென நினைப்பதும் உண்மையான ஆட்சிக்கு ஒருபோதுமே அழகு சேர்க்காது.

எமது நாட்டிலே அரசில் அங்கம் வகிக்கும் சிலர் தாம் நினைத்ததையெல்லாம் நிறைவேற்றி வருகின்றனர். சமுர்த்தி உத்தியோகத்தர் ஒருவர் மரத்தில் கட்டப்பட்டதும், ஆசிரியை ஒருவர் முழங்காலில் மண்டியிட வைக்கப்பட்டதும் இங்குதான் நிகழ்ந்திருக்கின்றன. ஆனால் இத்தகைய செயல்களைப் புரிந்தவர்களுக்கு எதிராக எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்பட்டதாகத் தெரியவில்லை. ஏனென்றால் அவர்கள் அரசின் பங்காளிகள் என்பதால் இந்த நிலை. இந்த நிலையில் எமது நாடு ஒரு ஜனநாயக நாடென நாம் எவ்வாறு கூற முடியும்?

மக்களின் வாக்குப் பலத்தினால் ஆட்சிக் கதிரையில் அமர்பவர்கள், பின்னர் தம்மை ஆட்சியில் அமர்த்திய மக்களை மறந்து விடுகின்றனர்.

எனவே மக்களே தமது ஜனநாயக உரிமைகளைப் பாதுகாப்பதற்கு முன்வரவேண்டும் இல்லையேல் ஜனநாயகம் என்ற சொல் அகராதியில் இருந்து மறைந்து விடும். ★

ந.மீனலோசினி, 3 ஆம் வருடம், விஞ்ஞான பீடம், யாழ்.பல்கலைக்கழகம்.




# ‘நனோ’ தொழில்நுட்பம்

இயற்கை பல்வேறு புதுமைகளை நிகழ்த்திக் கொண்டிருக்கின்றது. உதாரணமாக மண்ணில் புதையுண்ட கரி வைரமாக மாறுகிறது. கடலிலுள்ள நீர் மேகமாக மாறுகிறது. இதுபோல் இயற்கையின் செயற்பாடுகளை தினந்தோறும் உணரலாம். இதே செயல்களை மனித இனமும் செயற்கையாக நன்மை தரும் விதமாக செய்து கொள்ள முடியும் என்ற மனித ஆராய்ச்சியின் வெளிப்பாடுதான் இந்த நனோ தொழில்நுட்பம். இந்தத் தொழில்நுட்பம் பற்றி கட்டாயம் இளம் தலைமுறையினர் அறிந்திருக்க வேண்டியது அவசியம். விஞ்ஞானத்தின் வளர்ச்சியால் தோன்றிய பல தொழில்நுட்பச் சக்கரங்கள் மனித வாழ்வை மேம்படுத்தக் காரணமாக அமைகின்றன. ஆடைத்தொழில்நுட்பம், புகையிரத தன்னியக்க, கணினி மற்றும் தகவல்தொழில்நுட்பம் என இவ்வுலகம் துறைசார் வளர்ச்சியைக் கண்டிருந்தாலும் இன்றைய கால கட்டத்தில் அனைவராலும் வியக்கத்தக்க தொழில்நுட்பமாக நனோ தொழில்நுட்பம் காணப்படுகிறது.

விஞ்ஞானத் தொழில்நுட்பத்துக்கு வலுச்சேர்க்கும் இத்தொழில்நுட்பமானது மருத்துவம், விவசாயம், கைத்தொழில், இலத்திரனியல், உயிரியல், பொறியியல் என சகல துறைகளிலும் வளர்ச்சியடைந்து வருகின்றதோர் தொழில்நுட்பமாகும்.

இந்த நனோ தொழில்நுட்பம் என்றால் என்ன? இதன் பயன்பாடுகள்தான் என்ன? போன்ற பல விடயங்கள் பற்றி பார்ப்போமேயானால், நனோத்தொழில்நுட்பமானது பலதுறை சார்ந்து காணப்படுவதால் ஒவ்வொரு துறையினரும் வெவ்வேறு விதமாக வரவிலக்கணப் படுத்துகிறார்கள். எனினும் பொதுவாக நனோ தொழில்நுட்பம் என்பது நனோ மீற்றர் வரிசையில் அணுக்களினாலோ மூலக்கூறுகளினாலோ கட்டியெழுப்பப்படும் பொருள்களை உருவாக்கும் தொழில்நுட்பமாகும். ஒரு நனோ மீற்றர் என்பது ஒரு மில்லிமீற்றரின் $10^{6}$ இல் ஒரு பங்காகும்.

நனோ தொழில்நுட்பத்தின் பிரயோகங்கள் மனிதனால் பயன்படுத்தப்படும் சகலவிதமான பாவனைப்பொருள்களிலும், நுட்பங்களிலும் காணப்படுகின்றன. நனோத்திரவியங்களில் கூடுதலான நடைமுறைப் பிரயோகங்களைக் கொண்டது காபன்நனோகுழாய்கள் ஆகும். இதன் கட்டமைப்பானது இரு பரிமாண தாள்வடிவான கிரபைற்றின் சுருட்டிய வடிவமாகும். உருக்கின் வலிமையிலும் பல மடங்கு வலிமை கொண்டது. பாரம் குறைந்ததும், துருப்பிடிக்காததுமான காபன் நனோக் குழாய்கள் உருக்குக்கு மாற்றீடாகப் பாலங்கள், கட்டடங்களில் பயன்படுத்தப் படுகின்றன. காபன் நனோக் குழாய்களின் பொறிமுறைப் பிரயோகங்கள் வலிமையான பாரம் குறைந்த ரெனிஸ் மட்டைகள், வாகன உதிரிப்பாகங்கள், உடைகள், விண்வெளி ஓடங்கள் என்பவற்றில் காணப்படுகின்றன. இத்தகைய பொறிமுறைப் பண்புகளை மட்டுமன்றி நனோ குழாயின் விட்டத்தை மாற்றுவதன் மூலமும் எமது தேவைக்கேற்ற இரசாயன, இலத்திரனியல், ஒளியியல் பண்புகளையும் பெற்றுக்கெள்ள முடியும்.

காட்சித்திரைகள், ஒளியியல் இக்னைற்றர்கள், திரான்ற்றர், மீகடத்திகள், கடத்துபடலங்கள் போன்றன ஒளியியல், இலத்திரனியல் மின்னியல் சார்ந்த பிரயோகங்களில் சிலவாகும். காபன் நனோக் குழாய்கள் போன்று உலோக ஒட்சைட்டுக்களான தைத்தேனியம் டைஒட்சைட்டு, நாக ஒட்சைட்டு என்பவற்றின் நனோத்துகள் பல பிரயோகங்களைக் கொண்டுள்ளன. உதாரணமாக கழியூதாக் கதிர்களையும், கிருமித்தொற்றையும் தடுக்கும் ஆற்றல்கொண்ட நனோதுகள்கள் கொண்டு உருவாக்கப்படும் ஊடுகாட்டும் முகப்பூச்சுக்கள் தற்போது பாவனைக்கு வந்துள்ளன. இது சருமத்தின் இயற்கைத் தோற்றத்தை மாற்றாதிப்பதுடன் கழியூதாக் கதிர்களின் தாக்கத்தில் இருந்தும் பாதுகாப்பளிக்கின்றது.

இதேபோன்று இலத்திரனியல் துறையை எடுத்துக் கொள்வோமேயானால் இன்றைய கணினிகளானது அக்காலக் கணினிகளோடு ஒப்பிடும்போது கையடக்கமாகவும் பல்வேறு வசதிகளைக் கொண்டதாகவும், வேகமாக எமது கணித்தல் செயற்பாடுகளை இலகுவில் மேற்கொள்ளத்தக்கதாகவும் வளர்ச்சியடைந்துள்ளது. கோடிக் கணக்கான திரான்சித்தர்களை ஒருங்கிணைத்து சிறிய இடப் பரப்பில் உள்ளடக்கக்கூடியதாகவிருப்பதால் இன்றைய தகவல்தொழில்நுட்பச் சாதனங்கள் பருமனில் சிறியதாகவும், உயர் செயற்பாட்டுத் திறன் கொண்டவையாகவும் காணப்படுகின்றன. தகவல் தொழில்நுட்பத்தின் இன்றைய உன்னத நிலைக்கு இதுவே காரணமாகும். வெவ்வேறு வகைத் தொழில்நுட்ப சாதனங்களால் ஆற்றப்படும் செயற்பாடுகள் அனைத்தும் தனியொரு இலத்திரனியல் சாதனத்தினாலேயே ஒருங்கமைத்து காணப்படுகிறது.

இன்றைய மைக்கிரோ இலத்திரனியலானது நனோ இலத்திரனியலாக முழுமையாக மாற்றம் பெறும்போது ஒரு சதுர அலகுப்பரப்பில் ரெறா பயிற்ஸ் அதாவது 100ஜிகா பயிற்ஸ் $110^{8}$ GB அளவுக்கு மேற்பட்ட தகவல்களை சேமிக்கக்கூடிய வகையில் காணப்பட இருப்பதால் எதிர்காலத்தில் இலத்திரனியல் சாதனங்களின் பருமன் நுண்ணியளவிலும் அதிவிரைவான செயற்பாட்டுத்திறன் கொண்டதாக இருக்கும் அதே வேளை மிகமலிவானதாகவும் காணப்படும்.

இதேபோன்று இன்றைய உலகின் முக்கிய பிரச்சினையாக சக்தி நெருக்கடியைக் கூறலாம். இதற்குக் காரணம் உலகின் சக்தி நுகர்வு வீதம், சக்தி உற்பத்தி வீதத்தை உயர்த்திச் செல்வதேயாகும். இதே வேளையில் மசகுஎண்ணெய்யின் உற்பத்தி தொடர்ந்து குறைந்து வருவதால் இன்னும் சில வருடங்களில் நாம் சக்தி நெருக்கடிக்கு உட்படுவோம். மாற்றீட்டுச் சக்தி முதல்களில் கூடிய கவனம் செலுத்துவதன் மூலம் மட்டுமே இச்சக்தி நெருக்கடியை எதிர்கொள்ளலாம். அண்ணளவான கணிப்பீட்டின்படி 10 வீதம் வினைத்திறனுடைய சூரிய கலங்கள் சகாரா பாலைவனத்தின் மொத்தப் பரப்பின் 0.3 வீதத்தில் மட்டும் நிறுவும்போது பிறக்கும் போது உருவாக்கப்படும் மின் சக்தியானது உலக மின்சக்தித் தேவையை பூர்த்தியாக்குவதற்கு போதுமானது. எனவேதான் உலகளாவிய ரீதியில் மாற்றீட்டுச் சக்தி முதல்களில் முதன்மையான சூரிய சக்தியிலியங்கும் சூரியப்படல்களை உரு வாக்குவதில் ஆய்வு நிறுவனங்கள் தமது கவனத்தை செலுத்தியுள்ளன.

இப்போதுள்ள சூரியபடல்களானது விலை கூடுதலாகவிருப்பதால் விலை மலிவானதும், வினைத்திறன்கூடியதுமான சூரியகலங்களை நனோ தொழில்நுட்பம் மூலம் உருவாக்கக்கூடியதாக இனங்காணப்பட்டுள்ளது.

> நனோ தொழில்நுட்பம் என்பது நனோ மீற்றர் வரிசையில் அணுக்களினாலோ மூலக்கூறுகளினாலோ கட்டியெழுப்பப்படும் பொருள்களை உருவாக்கும் தொழில்நுட்பமாகும்.

விவசாயத்துறையில் குறிப்பாக இடுபொருள், நீர்ப்பாசனம், மண் போன்ற பல்வேறு பிரிவுகளில் துறை வாரியாக நனோ தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துவது குறித்த ஆராய்ச்சிகளும் தொடங்கிவிட்டன. அந்த வகையில் ஆர்கன்சா பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த ஆராய்ச்சியாளர்கள் ஒரு மாபெரும் கண்டுபிடிப்பை நிகழ்த்தியுள்ளனர். அது காபன் நனோ துகள்களைப் பயன்படுத்தி தக்காளிப் பயிரில் செய்யப்பட்ட ஒரு சோதனை. அந்த சோதனை முடிவுகளின்படி தக்காளி விதைகளை காபன் நுண்குழாய்களினுள் சேர்த்து சிறிதளவு மண் மற்றும் பாறை துகள்கள் உட்சேர்த்து விதைத்து சோதனையிடப்பட்டபோது அது விதையில் உயிரியல் ரீதியான செயற்பாடுகளில் தாக்கங்களை பதிவுசெய்துள்ளனர். இதன் தொடர்ச்சியாக காபன் நுண்குழாயுடன் சேர்க்கப்பட்ட விதைகள் சாதாரண நிலையை விட இரு மடங்கு வேகமாக முளைப்பதாகவும் முளைக்கும் தன்மையானது வேகமாகவும் காணப்படுகிறது. மேலும் சாதாரணமாக 38.9 வீத நீரை வித்துக்கள் முளைக்கும்போது உள்ளுறிஞ்சுவதாகவும் ஆனால் காபன் சிறு குழாய்கள் கலந்து முளைக்கப்பட்ட விதைகள் 57.6 வீதம் நீரை உறிஞ்சுவதாகவும் கணக்கிட்டுள்ளனர்.

உயிர்த்தொழில்நுட்பம் என்பது தரமான உணவுப் பொருள்களின் தரமேம்பாடு தொடர்பான உயிரியல் ஆய்வுநுட்பங்களின் பிரயோகமாகும். உதாரணமாக நாம் உட்கொள்ளும் காய்கறி, பழவகைகளை உயர்தரத்துடன் அளவிற் பெரியதாகவும் உயர் போசாக்குடையதாகவும் உற்பத்தி செய்ய இத்தொழில்நுட்பம் பயன்படுகின்றது. உயர் நனோ தொழில் நுட்பம் மூலம் உணவுப் பொருள்களின் அதன் தன்மை கெடாது. பாதுகாக்கும் நனோ துகள்கள் கொண்ட படலங்களும் உருவாக்கப்பட்டு வருகின்றன.

மருத்துவத்துறையில் நனோ தொழில் நுட்பத்துறையின் பிரயோகங்கள் அளப்பரியன. நோயாளியொருவரின் பாதிக்கப்பட்ட கலங்களை இனங்காணவோ, மருந்துகள், வெப்பம், ஒளி போன்றவை பாதிக்கப்பட்ட கலங்களை நேரடியாகச் சென்றடைய நனோதுகள்கள் தற்போது பயன்படுத்தப்படுகின்றன. பாதிக்கப்பட்ட குறித்த கலங்களில் சிகிச்சைகளை மேற்கொள்ளத்தக்க வசதியை அளிப்பதன் காரணமாக ஏனைய ஆரோக்கியமான கலங்களுக்கு ஏற்படக்கூடிய சேதங்கள் குறைக்கப்படுகின்றன. இச்சிகிச்சை முறைகளில் வெள்ளி, தங்கம், கற்மியம் செலுனைற் நனோதுகள் பயன்படுகின்றன. நனோ வெள்ளித் துகள்கள் பக்றீரியா கிருமியழிப்பானாக காணப்படுவதுடன் இது பங்கசு எச்.ஐ.வி. உள்ளிட்ட சில வைரஸ் கிருமிகளையும் அழிக்க வல்லவை.

பக்றீரியா மூலம் ஏற்படும் தொற்றுகைக்குட்பட்ட நோயாளியை சில நாள்களுக்கு கிருமித் தடுப்பு மருந்து பயன்படுத்தி குணப்படுத்துவதற்குப் பதிலாக எதிர்காலத்தில் ஒரு சில நிமிடங்களுக்குள்ளாகவே நனோ மருத்துவத்தின் மூலம் குணப்படுத்தக் கூடியதாகவிருக்கும்.

அத்தோடு பாதிக்கப்பட்ட கலங்களைக் குணப்படுத்த சத்திர சிகிச்சைகளை கலங்களின் மட்டத்திலேயே நனோ றோபோக்களின் மூலம் மேற்கொள்ள முடியும். நனோ றோபோக்கள் மூலமாக பற்கள், நுரையீரல்கள் போன்றவற்றை சுத்திகரிப்பு செய்யவும் தோலின் கீழுள்ள மேலதிக கொழுப்புப் படிவுகளை அகற்றிக் கொள்ளவும் முடியும்.

இதயத்துக்குக் குருதியை வழங்கும் குழாய்களிலுள்ள கொலஸ்ரோல் படிவுகளை ரேடியோ அலைகளுடன் இணைத்த நனோ சாதனங்களின் மூலம் வைத்திய நிபுணர் இனங்கண்டு சிகிச்சை அளிக்கக்கூடிய வாய்ப்பை நனோ தொழில்நுட்பத்தின் மூலம் அடைய முடியும்.

ஆகவே இன்னும் இருபது ஆண்டுகளில் மனிதன் மிக நுண்ணிய கணினி சிப்களை (chips) தனது உடலில் உட்பதிப்பதன் மூலம் நோய்களைத் தடுத்து தனது வாழ்க்கைக் காலத்தை நீடிப்பது மட்டுமன்றி தனது இளமைப் பராயத்தை மீளப் பெறக் கூடியவனாகவும் இருப்பான். அதாவது மனிதன் தனது வரையறைகள் பல்வற்றை வெற்றிகொள்ளக்கூடியவனாக இருப்பான்.



# வீதிகளில் பயணம் செய்யக்கூடிய (Winglet) விங்ளெற் சாதனம் அறிமுகம்

அதிசிறந்த போக்குவரத்து சாதனங்களை உற்பத்தி செய்து அறிமுகப்படுத்தும் ஜப்பானின் ரொயோற்றா நிறுவனம், வீதிகளில் பயணம் செய்யக்கூடிய நவீன (Winglet) சாதனத்தை விங்ளெற் உருவாக்கும் திட்டத்தை முன்னெடுத்து வருகிறது.
எனினும் முந்திக்கொண்ட சீன நிறுவனம் ஒன்று றொப்ஸ்ரெப் றொபோட்டீஸ் (Robstep Robotics) எனும் சாதனத்தை உருவாக்கியுள்ளதுடன் இதனை வீதிப்போக்குவரத்துக்குப் பயன்படுத்தலாம் எனவும் தெரிவித்துள்ளது.
மணிக்கு 15 கிலோமீற்றர் வேகத்தில் பயணம் செய்யக்கூடிய இச்சாதனத்தை ஒரு முறை சார்ஜ் செய்தால் 20 கிலேமீற்றர் வரை பயணிக்க முடியும்.
மேலும் இதன் பெறுமதி 2,000 அமெரிக்க டொலர்களாகும்.

# தாண்டல் முறை மூலம் இடம்பெயரும் ரோபோ

தற்காலத்தில் ரோபோக்களின் பங்களிப்பு அளப்பரியதாகக் காணப்படுகின்றது. இதனால் பல்வேறு நவீன தொழில்நுட்பங்களை உட்புகுத்தி புதிய ரோபோக்கள் உருவாக்கப்பட்டவண்ணமே இருக்கின்றன.
இவற்றின் வரிசையில் தற்போது தாண்டல் முறை மூலம் இடம்பெயரக்கூடிய RHex என்ற ரோபோ உருவாக்கப்பட்டுள்ளது.
பென்சில்வேனியா பல்கலைக்கழக ஆராய்ச்சியாளர்களால் உருவாக்கப்பட்டுள்ள இந்த ரோபோ 51 சென்ரிமீற்றர் நீளமானதாகவும், 40.5 சென்ரி மீற்றர் அகலம் உடையதாகவும் காணப்படுவதோடு இதன் எடை 6.7 கிலோகிராம் ஆகவும் அமைந்துள்ளது.
இவற்றில் காணப்படும் இசைந்துகொடுக்கக்கூடிய கால்கள் போன்ற அமைப்பினால் எந்தவொரு பிரதேசத்திலும் நகரக்கூடியவாறு இருப்பதுடன், பாய்ச்சல் மூலம் இடம்பெயரக்கூடியதாகவும் காணப்படுகின்றது.





# தகவல்களை ஒரே நேரத்தில் சேமிக்க நவீன சாதனம்




தற்போது பயன்படுத்தப்படும் மொபைல் சாதனங்கள் மூலம் எடுக்கப்படும் காணொலிகளையோ அல்லது புகைப்படங்களையோ சேமிக்க தனித்தனியாக சேமிப்புச் சாதனங்கள் பயன்படுத்தப்படும்.
ஆனால் தற்போது ஒரே நேரத்தில் ஒன்றுக்கு மேற்பட்ட மொபைல் சாதனங்கள் மூலம் எடுக்கப்படும் காணொலி அல்லது புகைப்படங்களை ஒரே சேமிப்பு சாதனத்தில் சேமிக்க முடியும்.
இதற்கென வயர்லெஸ் தொழில்நுட்பத்தைக் கொண்ட ஸானட் டிஸ் விசேடமாக உருவாக்கப்பட்டுள்ளது.
இதில் 16 ஜி.பி., 32 ஜி.பி. என இரண்டு வகைகள் உருவாக்கப்பட்டுள்ளதுடன் 16 ஜி.பி. ஸான்டிஸ் - இன் பெறுமதி 49.99 டொலர்களும், 32 ஜி.பி ஸான்டிஸ் - இன் பெறுமதி 59.99 டொலர்களும் ஆகும்.

# உயர் தர ஒலிநயத்துடன் HTC 8XT ஸ்மார்ட் கைபேசி அறிமுகம்

உயர் தர ஒலிநயம் மற்றும் உயர் வினைத்திறன் கொண்ட கமராவை உள்ளடக்கிய எஸ்.ரி.சி. 8 ரி ஸ்மார்ட் கைபேசி விரைவில் அறிமுகப்படுத்தப் படவுள்ளது
விண்டோஸ் 8 இயங்குதளத்தை கொண்ட இக்கைபேசியின் திரை 4.3 அங்குல அளவு, 800x480 Pixel Resolution உடையது.
CÁØÔB Processor ஆனது 1.4 GHz வேகத்தில் செயலாற்றக்கூடியதாகக் காணப்படுவதுடன், பிரதான நினைவகமாக 1 ஜி.பி.RAM தரப்பட்டுள்ளது.
இவை தவிர 8 மெகாபிக்சல்கள் மற்றும் 1.6 மெகாபிக்சல்களை உடைய இரு கமராக்களை கொண்டுள்ளது.
இவற்றின் சேமிப்பு நினைவகம் 8 ஜி.பி. ஆகக் காணப்படுவதுடன் அதனை 64 ஜி.பி. வரை அதிகரித்துக்கொள்ள முடியும்.







# பல வகையிலும் பயன்மிக்க விக்கிபீடியா இணையம்




கட்டற்ற களஞ்சியமாக ஏராளமான விடயங்களை தன்னகத்தே கொண்டுள்ள விக்கிப்பீடியா தளம் பல வகையிலும் மக்களுக்கு உதவுவதாகக் காணப்படுகின்றது.
முற்றிலும் இலவசமானது என்பதுடன், அனைவராலும் கட்டுரைகளை பதிவேற்றம் செய்யக்கூடியதாகவும், செம்மையாக்கம் செய்யக்கூடியதாகவும் இருப்பதே இதற்குக் காரணம் ஆகும்.
இதேவேளை இதுவரை காலமும் கணினிகள் மூலமே இத்தளத்திலுள்ள கட்டுரைகளை செம்மையாக்கம் செய்யக்கூடியதாக இருந்தது.
ஆனால் தற்போது ஸ்மார்ட் கைபேசிகளின் மூலமும் இத்தளத்தைச் செம்மையாக்கம் செய்யக்கூடியதாக மாற்றியமைக்கப்பட்டுள்ளது.

# காணொலி, புகைப்படங்களை கூகுளின் கண்டுபிடிப்பு

பல்வேறு வகையான தொழில்நுட்பச் சேவைகளை வழங்கிவரும் கூகுள் நிறுவனம் காலத்திற்கு காலம் பல புதிய வசதிகளையும் அறிமுகப்படுத்தி வருகின்றது.
இந்த அடிப்படையில் தற்போது Chromecast என்ற புத்தம் புதிய சாதனத்தை அறிமுகப்படுத்தியுள்ளது.
இச்சாதனம் மொபைல் சாதனங்களிலோ அல்லது இணையத்தளங்கள் மூலமாகவோ பார்த்து ரசிக்கும் காட்சிகளை தொலைக்காட்சிகளிலும் பார்த்து மகிழக்கூடிய வசதியை ஏற்படுத்தித் தருகின்றது.
இதனை Netflix, You-Tube, Google Play உள்ள காணொலிகளை தொலைக்காட்சியில் இயக்குவதற்கும் செய்வதற்கும் பயன்படுத்த முடியும்.
இவற்றுடன் கூகுள் குரோம் உலாவி மூலம் பார்வையிடும் விடயங்களை தொல ்க்காட்சியிலும் பார்வையிடுவதற்கு விசேட நீ[illegible] ஒன்றும் காணப்படுகின்றது.
35 டொலர்களே பெறுமதியான இச்சாதனத்தை கூகுள் பிளே மற்றும் அமேசான் தளங்களிலிருந்து கொள்வனவு செய்துகொள்ள முடியும் என்பது குறிப்பிடத்தக்கது.



## ஆசிரிய உதவியாளருக்கான முக்கிய கூட்டம்

கிளிநொச்சி மாவட்டத்தில் தொண்டர் ஆசிரியர்களாக கடமையாற்றதற்போது புதிதாக ஆசிரிய உதவியாளர்களாக நியமனம் பெற்ற அனைவருக்குமான முக்கிய கூட்டம் ஒன்று நடைபெறவுள்ளது.

இந்தக் கூட்டம் நாளைய தினம் சனிக்கிழமை காலை 9 மணிக்கு கிளிநொச்சி எடிசன் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இந்தக் கலந்துரையாடலில் ஆசிரிய கலாசாலைக்கு விண்ணப்பிப்பது தொடர்பான முக்கிய விடயம் கலந்துரையாடப்படவுள்ளதால் கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்த புதிதாக நியமனம் பெற்ற சகல ஆசிரிய உதவியாளர்களையும் தவறாது கலந்துகொள்ளுமாறு கிளிநொச்சி மாவட்ட ஆசிரிய உதவியாளர் சங்கம் கேட்டுள்ளது. (க-426)



# போக்குவரத்து நெருக்கடியில் பூநகரிப் பிரதேச மக்கள்

பூநகரி, ஓக. 2

கிளிநொச்சி பூநகரிப் பிரதேச செயலர் பிரிவில் நிலவும் போக்குவரத்து நெருக்கடி காரணமாக மீளக்குடியமர்ந்துள்ள மக்கள் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

பூநகரியிலுள்ள கிராமங்களிலிருந்து பஸ் சேவைகள் இடம்பெறும் வீதிகள் நீண்ட தூரத்தில் இருப்பதால் மக்கள் போக்குவரத்துச் செய்வதில் இடர்களை எதிர்கொண்டு வருகின்றனர். மேலும் ஏ-32 வீதியில் நீண்டநேர இடைவெளிகளில் பஸ் சேவைகள் இடம்பெறுவதால் கிராஞ்சி, வலைப்பாடு, வேரவில், பொன்னாவெளி ஆகிய கிராமங்களைச் சேர்ந்த மக்கள் தொடர்ந்து போக்குவரத்து இடர்களை எதிர்கொண்டு வருகின்றனர். இவர்கள் தினமும் பெருமளவில் பல்லவராயன்கட்டுச்சந்தி, நாச்சிக்குடாச் சந்தி, பள்ளிக்குடாச் சந்தி ஆகியவற்றில் பஸ்களுக்காகக் காத்திருப்பதைக் காண முடிகின்றது.

பல்லவராயன் கட்டுச் சந்தி, நாச்சிக்குடாச் சந்தி ஆகியவற்றில் இருந்து கரியாலை நாகபடுவான், ஜெயபுரம் வடக்கு, தெற்கு, சோலை ஆகிய கிராமங்களுக்கு மக்கள் நீண்ட தூரம் நடந்து செல்வதையும் காண முடிகின்றது.

பூநகரி பிரதேச செயலர் பிரிவில் அதிகளவிலான அரச பஸ் சேவைகளை நடத்துமாறு இந்தப் பகுதி மக்கள் கிளிநொச்சி அரச அதிபருக்கு மனுக்களைக் கையளித்துள்ள போதிலும் இதுவரை எதுவும் நடக்கவில்லை.

யாழ்ப்பாணத்திலிருந்து பூநகரி வழியாக அக்கராயன் வரை இடம்பெற்ற அரச பஸ்சேவைகள் பூநகரி 10 ஆம் கட்டைக்கும் முக்கொம்பனுக்கும் இடையில் கொங்கிறீற் வீதி அமைப்பதன் காரணமாக இடைநிறுத்தப்பட்டுள்ளன. இதனால் முக்கொம்பன், அக்கராயன் பகுதிகளைச் சேர்ந்த பாடசாலை மாணவர்களும் ஆசிரியர்களும், பொதுமக்களும் பெரும் போக்குவரத்து இடர்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

யாழ்ப்பாணத்திலிருந்து பூநகரி முக்கொம்பன் வழியாக அக்கராயன் வரை தரமான வீதிகள் அமைக்கப்படுமாயின் இந்தப் பிரதேசங்கள் வளர்ச்சியடையக் கூடிய வாய்ப்புக்கள் இருப்பதாக மக்கள் தெரிவிக்கின்றனர். (க-18)





மாங்குளம் மகா வித்தியாலயத்தில் கல்வி கற்கும் மாணவிகளுக்கு பருத்தித்துறை ஸ்ரீராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரமத்தின் சுவாமி சித்ரூபானந்தா நூல்களை அன்பளிப்புச் செய்கின்றார். (க)

## குளத்தின் புனரமைப்பு பணிகளில் மக்கள் அதிருப்தி

துணுக்காய், ஓக. 2

துணுக்காய் பழைய முறிகண்டிக் குளத்தின் புனரமைப்பு வேலைகள் தொடர்பாக இந்தப் பகுதி மக்கள் கடும் அதிருப்தி வெளியிட்டுள்ளனர்.

சுமார் 36 குடும்பங்கள் வாழ்கின்ற இந்தக் கிராமத்தில் நெற் பயிர்ச்செய்கை முக்கியமான தொழிலாக விளங்குகின்றது. பழை முறிகண்டிக் குளத்தை நம்பியே இந்தக் கிராம மக்கள் உள்ளனர்.

இந்த நிலையில் குளத்தின் புனரமைப்புப் பணிகள் திருப்பதியளிப்பதாக இல்லையென கிராம மக்கள் தெரிவிக்கின்றனர். அணைக்கட்டு, வாய்க்கால்கள் என்பனவற்றின் புனரமைப்புப் பணிகள் உரிய வகையில் அமையவில்லை என்பது மக்களின் குற்றச்சாட்டாக உள்ளன.

மேலும் புனரமைப்புப் பணிகளில் உள்ள குறைபாடுகளால் எதிர்காலத்தில் தாம் பாதிப்புக்களை எதிர்கொள்ள வேண்டி நேரிடும் எனவும் அவர்கள் அச்சம் வெளியிட்டுள்ளனர். (க-18)

### புதுக்குடியிருப்பு ஆனந்தபுரம் மக்களின்

## குடிதண்ணீர்ப் பிரச்சினைக்கு நிரந்தர தீர்வு காணும் முயற்சிகள்

புதுக்குடியிருப்பு, ஓக. 2

ஆனந்தபுரம் மக்களின் குடிதண்ணீர்ப் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காண்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இதற்கென புதுக்குடியிருப்பு பிரதேச சபை, 'ஜெய்க்கா' நிறுவனத்தின் நிதியுதவியுடன் சிவநகரிலிருந்து குழாய் மூலம் குடி தண்ணீரை வழங்குவதற்கான ஒழுங்குகளை மேற்கொண்டுள்ளது.

புதுக்குடியிருப்பு பிரதேசத்திலுள்ள 19 கிராம உத்தியோகத்தர் பிரிவுகளில் ஆனந்தபுரம் கிராமம் கடற்கரையோரமாக அமைந்திருப்பதனால் அங்கு வசிக்கும் 300 இற்கும் அதிகமாக குடும்பங்களுக்கு வருடம் முழுவதும் குடிதண்ணீர் வழங்க வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது.

புதுக்குடியிருப்புப் பிரதேச சபையில் குடி தண்ணீர் வழங்குவதற்கான ஏனைய வளங்கள் இருந்த போதிலும் ஆளணிப் பற்றாக்குறை நிலவுவதால் ஆனந்தபுரம் மக்களுக்குத் தினசரி குடிதண்ணீரை வழங்க முடியாத நிலை தற்போது ஏற்பட்டுள்ளது.

இதனால் அந்தப் பகுதியில் ஒன்பது தண்ணீர்த் தொட்டிகள் வைக்கப்பட்டு இரு நாள்களுக்கு ஒருதடவை என்ற அடிப்படையில் மட்டுமே குடிதண்ணீர் வழங்கப்பட்டு வருகின்றது. பிரதேச சபையால் வழங்கப்பட்டு வரும் குடி தண்ணீர் மக்களின் தேவைக்குப் போதியதாக இல்லாததால் அவர்கள் சிரமங்களை எதிர்கொண்டுள்ளனர்.



இந்த நிலையில் ஆனந்தபுரம் மக்களின் குடி தண்ணீர்ப் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வைக் காண முன்வந்துள்ள புதுக்குடியிருப்புப் பிரதேச சபை 'ஜெய்க்கா' நிறுவனத்தின் நிதியுதவியுடன் குடிதண்ணீரை வழங்குவதற்கான ஒழுங்குகளை மேற்கொண்டுள்ளது.

சிவநகர் கிராமத்தில் இருக்கும் புதுக்குடியிருப்புப் பிரதேச சபைக்குச் சொந்தமான காணியில் குழாய்க்கிணறு ஒன்றை அமைத்து அதிலிருந்து குழாய் மூலமாகக் குடிதண்ணீர் வழங்கப்படவுள்ளதாகத் தெரிய வருகின்றது. (க-115)

## பஸ் சேவைகள் இடம்பெறாமையால் இடர்களை எதிர்கொள்ளும் மக்கள்

அக்கராயன், ஓக. 2

அக்கராயனுக்கும் துணுக்காய்க்கும் இடையிலான பஸ் சேவைகள் கடந்த ஒரு மாதமாக இடம்பெறாததால் மக்கள் பெரும் இடர்களை எதிர்கொண்டு வருவதாகத் தெரியவந்துள்ளது.

இதனால் அக்கராயன் மற்றும் மல்லாவி மருத்துவமனைகள், துணுக்காய்ப் பிரதேச செயலகம், மல்லாவி மத்திய கல்லூரி, அக்கராயன் மகா வித்தியாலயம் ஆகியவற்றுக்குப் போக்குவரத்து செய்வதில் பாடசாலை மாணவர்களும், பொதுமக்களும் பெரும் இடர்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

இதேவேளை தொடர்ச்சியான டிப்பர் வாகனங்களின் போக்குவரத்துக் காரணமாக அக்கராயனுக்கும் துணுக்காய்க்கும் இடையிலான 22 கிலோமீற்றர் நீளமான வீதி பெரும் குன்றும் குழியுமாக மாறியுள்ளது.

மழைகாலம் ஆரம்பிக்கவுள்ளதால் இந்த வீதியால் போக்குவரத்துச் செய்வதில் மக்கள் பெரும் இடர்களை எதிர்கொள்வரெனவும் தெரிவிக்கப்படுகின்றது. (க-18)

## நீர்த் தேக்கத்தை அமைக்கும் வேலைகள் இழுபறி நிலையில்

கிளிநொச்சி, ஓக.2

கிளிநொச்சி வன்னேரிக் குளத்தையும் தேவன்கட்டையும் இணைத்து உருவாக்கப்படும் தீர்த்தேக்க வேலைகள் இழுபறி நிலையில் காணப்படுவது தொடர்பாக மக்கள் அதிருப்தி வெளியிட்டுள்ளனர்.

தேவன்குளத்தின் அணைக்கட்டு பகுதியில் மிதிவெடிகள் அகற்றப்பட்டதால் இந்தப் பணியில் ஈடுபட்டிருந்த மிதிவெடியகற்றும் அணியினர் ஏனைய பகுதிகளிலும் தமது பணிகளை இடைநிறுத்திவிட்டுக் கடந்த மார்ச் மாதம் 15 ஆம் திகதி வெளியேறியுள்ளனர்.

மீதமுள்ள இடங்களில் மிதிவெடி அகற்ற வேண்டிய நிலை காணப்படுவதால் நீர்த் தேக்கத்தின் பணிகள் இடைநிறுத்தப்பட்டுள்ளன.

வன்னேரிக்குளமும் தேவன் கட்டும் இணைக்கப்படுமானால் வன்னேரிக்குளத்தின் கீழ் தற்போது 400 ஏக்கரில் மேற்கொள்ளப்படும் நெற்செய்கையை 1000 ஏக்கராக அதிகரிக்க முடியுமெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதனால் வன்னேரிக்குளத்தின் விவசாய முயற்சிகளில் துரித முன்னேற்றம் காண்பதற்கான நிலை உருவாகும் எனத் தெரிகின்றது. (க-18)

## வீதிகளை தாரிட்டுப் புனரமைக்குமாறு வர்த்தகர்களும் மக்களும் கோரிக்கை

அக்கராயன் அம்பலப் பெருமாள் சந்தியிலிருந்து பிரிந்து செல்லும் நான்கு வீதிகளையும் தார் ஊற்றி அவசரமாகப் புனரமைக்குமாறு இந்தச் சந்தியில் வர்த்தக நிலையங்களை நடத்திவரும் வர்த்தகர்களும் பொது மக்களும் அவசரவேண்டுகோள் விடுத்துள்ளனர்.

வன்னேரிக்குளம், துணுக்காய், திருமுறிகண்டி, ஸ்கந்தபுரம் ஆகிய பகுதிகளுக்குச் செல்லும் நாற் சந்தியைக் கொண்ட இந்தப் பகுதியில் வர்த்தக நிலையங்கள், உணவகங்கள், பொலிஸ் நிலையம், எரிபொருள் நிரப்பு நிலையம் என்பன அமைந்துள்ளதுடன் கிளிநொச்சியின் உப நகரமாகவும் வளர்ந்து காணப்படுகின்றது. இந்தச் சந்தியால் நாள்தோறும் ஏராளமான வாகனங்கள் பயணிப்பதன் காரணமாக வீதியின் கிரவல் தூசி, உணவகங்கள், வர்த்தக நிலையங்களில் படிவதால் உணவுப் பொருள்கள் மற்றும் ஏனைய பொருள்களைப் பாதுகாக்க முடியாத அவல நிலையில் வர்த்தகர்கள் உள்ளனர்.

இந்த நிலையில் இந்தப் பகுதியில் காணப்படும் வீதிகளை தாரிட்டுப் புனரமைத்து வழங்குமாறு மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.



இதேவேளை, அக்கராயன் ம.வி., அக்கராயன் ஆரம்ப வித்தியாலயம், ஸ்கந்தபுரம் இல.1 பாடசாலை ஆகியவற்றில் கல்வி கற்கும் மாணவர்கள் காலை வேளையில் பாடசாலைக்குச் செல்லும் போது வாகன போக்குவரத்தால் எழும்தூசுப்படிவங்களால் அவலங்களை எதிர்கொண்டு வருகின்றனர். இதனால் டிப்பர்கள் போன்ற வாகனங்களை காலை 8 மணிக்குப் பின்னர் அந்தப் பாதையில் செல்லும் வகையில் பொலிஸார் நடவடிக்கை எடுக்க வேண்டுமெனவும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (க-18)

உதயன்
02/08/2013

## பச்சிலைப்பள்ளி ப.நோ.கூ.சங்க

# கிராமிய வங்கிக் கணக்குப் புத்தகத்தை தொலைத்தவர்கள் தொடர்பு கொள்ளலாம்

பளை, ஓக.2

பளை, பச்சிலைப்பள்ளி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் கிராமிய வங்கியில் கணக்குகளை ஆரம்பித்து பிரதேசத்தில் ஏற்பட்ட பல்வேறு இடப்பெயர்வுகள் காரணமாக வங்கி கணக்குப் புத்தகத்தைத் தொலைத்ததால் வங்கி நடவடிக்கைகளைத் தொடர முடியாதவர்கள் உரிய ஆதாரங்களுடன் சங்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறு சங்கம் அறி வித்துள்ளது.

கடந்த வாரம் சங்க மண்டபத்தில் இடம்பெற்ற சங்கப் பணிப்பாளர்கள் சந்திப்பில் கடந்த ஜூலை முதலாம் திகதி உதயனில் பிரசுரமான செய்தி தொடர்பாக ஆராயப்பட்டு அவ்வாறு பாதிக்கப்பட்டவர்களின் விண்ணப்பங்கள் கிடைப்பின் அவை ஆராயப்படல் வேண்டுமென முடிவு செய்யப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

பிரதேசத்தில் ஏற்பட்ட பல்வேறு இடப்பெயர்வுகளின் போது சங்கம் இயங்கிய அனைத்து இடங்களிலும் வங்கியும் இயங்கியது. இறுதியாக முள்ளி வாய்க்காலில் இயங்கியபோது ஏற்பட்ட போர் காரணமாக வங்கி ஆவணங்கள் இழக்கப்பட்டன.


கடந்த 2010 ஆம் ஆண்டு பிரதேசத்தில் மக்கள் மீளக் குடியமர்ந்த வேளையில் சங்கக் கட்டடங்கள் முற்றாக அழிந்த போதிலும் மக்களுக்கு உரிய சேவையை வழங்கும் பொருட்டு தற்காலிக கட்டடங்களில் சங்கத்துடன் வங்கியும் இயங்கியது.

அவ்வேளையில் வங்கி வாடிக்கையாளர்களுக்கு பாதிப்பு ஏற்படாதவகையில் வங்கி நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு வாடிக்கையாளர்களை தொடர்பு கொண்டு கணக்குகளை சீர் செய்யுமாறு பத்திரிகை ஊடாக (07.07.2010) இல் விளம்பரம் மூலம் அறிவிக்கப்பட்டது.

அதன் பின்னர் பலர், தமது வங்கிக் கணக்குகளை சீர் செய்து தொடர்ந்து பேணி வருகின்றனர்.

இருப்பினும் இதுவரை தமது வங்கிக் கணக்குகளை பதிவு செய்யாதவர்களும், வங்கிக் கணக்குப் புத்தகங்களை தொலைத்ததால் தமது வங்கி நடவடிக்கைகளைத் தொடர முடியாதவர்களும் சங்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறும்-

விண்ணப்பங்கள் கிடைக்கும் பட்சத்தில் பரிசீலனை செய்து வங்கி நடவடிக்கையைத் தொடர வழிவகை செய்யப்படும் என்றும் முடிவு செய்யப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-9)



பொருளாதாரத்தில் பின்தங்கிய குடும்பங்களைச் சேர்ந்த 10 மாணவர்களுக்கு சைக்கிள்கள் வழங்கும் நிகழ்வு கரைச்சிப் பிரதேச சபை உறுப்பினர் வி.சுவிஸ்கரன் தலைமையில் வட்டக்கச்சிப் பிரதேசத்தில் நடைபெற்றது. இதற்கான நிதிப் பங்களிப்பை பிரான்ஸ் நாட்டில் உள்ள வரம் பிரான்ஸ் எனப்படும் வட்டக்கச்சி இராமநாதபுரம் மக்கள் ஒன்றியம் வழங்கியிருந்தது. இந்த நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன், தமிழரசுக் கட்சியின் கிளிநொச்சி மாவட்டச் செயலாளர் க.பசுபதிப்பிள்ளை, மற்றும் கட்சியின் முக்கியஸ்தர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் எனப்பலர் கலந்து கொண்டனர். (ஒ)

# குதிரையை வெட்டிக் கிழித்து மரத்தில் தொங்கவிட்ட கொடுமை

## நெடுந்தீவில் படுபாதகச் செயல்

யாழ்ப்பாணம், ஓக. 2

கொடுமை..கொடுமை.. நெடுந்தீவில் குதிரையொன்றை வெட்டிக் கிழித்து மரத்தில் தொங்கவிட்ட சம்பவமொன்று நிகழ்ந்துள்ளது. கடந்த திங்கட் கிழமை நெடுந்தீவில் பற்றைக்காட்டுப் பகுதியில், கொல்லப்பட்ட குதிரை மரத்தில் தொங்கவிடப்பட்டிருந்தது.

அந்த வாயில்லாத ஜீவனைக் கொன்ற படுபாதகர்களின் செயலை ஊர் மக்கள் கவலையுடன் கண்டித்திருக்கின்றனர்.

அந்தக் கொடுமையான சம்பவம் குறித்து தெரிய வருவதாவது:-

நெடுந்தீவு மேற்குப் பகுதியைச் சேர்ந்த அருள் என்பவருக்குச் சொந்தமான இந்தக் குதிரை ஓட்டப் போட்டி களில் கலந்துகொண்டு எஜமானருக்கு முதல் பரிசைத் தட்டிக் கொடுப்பது வழக்கம். ஊரில் இடம்பெறும் குதிரை ஓட்டப் போட்டிகளில் ஒவ்வொரு தடவையும் அக்குதிரை முதலிடத்தைப் பெற்றுக் கொள்ளும். இதனால் பொறாமை கொண்ட ஒருவரோ அல்லது ஒரு குழுவினரோ இந்தப் பாதகச் செயலை புரிந்திருக்கலாம் என்று கூறப்படுகின்றது.

இறுதியாக கடந்த 15 ஆம் திகதி நடைபெற்ற பாரம்பரிய விளையாட்டுப் போட்டியிலும் இந்தக் குதிரை பங்கு பற்றி மிகவும் சிறந்த முறையில் ரசிகர்களைக் கவர்ந்து ஓட்டத்தில் வெற்றி பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஒ 7)

தருவது வித்தியா

## இன்றைய நாள்

### உங்களுக்கு எப்படி?

நாளை

ஆடி-18 சனிக்கிழமை 03.08.2013
திதி: துவாதசி மு.இ. 10.35 வரை
நட்சத்திரம்: மிருகசீரிடம் பி.ப. 01.43 வரை
சுபநேரம்: 03.04 - 04.34 வரை
இராகுகாலம்: 09.04 - 10.34 வரை

**மேடம்:** சோர்வு, அலைச்சல் நீங்கி ஆனந்தமாகக் காணப்படுவீர்கள். பழைய நண்பர்களைச் சந்திப்பீர்கள். அரசியல்வாதிகளின் ஆதரவு கிடைக்கும். பயணங்களால் ஆதாயம் உண்டு.

**இடபம்:** ஒருவித படபடப்பு வந்து செல்லும். நீங்கள் நகைச்சுவைக்காக கூறும் சில கருத்துக்கள் கூட சீரியசாக வாய்ப்பிருக்கிறது. மற்றவர் களைச் சார்ந்திருக்க வேண்டாம். உத்தியோகத் தில் அதிகாரிகளால் அலைக்கழிக்கப்படுவீர்கள்.

**மிதுனம்:** எளிதாக முடிக்க வேண்டிய சில காரியங்களைக்கூட போராடி முடிக்க வேண்டி வரும். உத்தியோகத்தில் பணிகளை போராடி முடிக்க வேண்டி வரும்.

**கடகம்:** நீண்ட நாள் எண்ணங்களைப் பூர்த்தியாக்க முயற்சிப்பீர்கள். பிரியமானவர்களின் சந்திப்பு நிகழும். உத்தியோகத்தில் மன உளைச்சல் நீங்கும். பணிகளை விரைந்து முடிப்பீர்கள்.

**சிங்கம்:** மன உறுதியுடன் செயற்பட்டு சில வேலைகளை முடிப்பீர்கள். வேலையாள்களின் ஆதரவு கிடைக்கும். மாணவர்கள் உற்சாகத்துடன் காணப்படுவார்கள்.

**கன்னி:** புதிய முயற்சிகள் வெற்றி தரும். எதிர்பார்த்த இடத்திலிருந்து பணவரவு உண்டு. பிரியமானவர்களைச் சந்தித்து பொழுதைக் கழிப்பீர்கள். அலுவலகப பணிகளை விரைந்து முடிப்பீர்கள். பயணங்கள் மகிழ்ச்சி தரும்.

**துலாம்:** சிலரின் நயவஞ்சக செயலை நினைத்து வருந்துவீர்கள். மற்றவர்களுக்கு உதவி செய்யப் போய் உபத்திரவத்தில் சிக்கிக் கொள்ளாதீர்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்களை பகைத்துக் கொள்ள வேண்டாம்.

**விருச்சிகம்:** உங்களின் வெளிப்படை யான பேச்சை அனைவரும் ரசிப்பார்கள். ஆன்மிகத்தில் ஈடுபாடு அதிகரிக்கும். உத்தியோகத்தில் மேலதிகாரியின் பாராட்டைப் பெறுவீர்கள்.

**தனுசு:** முன்கோபம் விலகும். அரச காரியங்களில் அனுகூலம் உண்டு. அயல் வீட்டாரின் ஆதரவு அதிகரிக்கும்.

**மகரம்:** செயலில் வேகத்தைக் காட்டுவீர்கள். மனக்குழப்பங்கள் நீங்கி தெளிவான முடிவுகளை எடுப்பீர்கள். மாணவர்களின் நினைவாற்றல் அதிகரிக்கும்

**கும்பம்:** பணப்பற்றாக்குறை நீங்கும். வெளிவட்டாரத் தொடர்பு அதிகரிக்கும். ஆன்மிகத்தில் ஈடுபாடு அதிகரிக்கும். மாணவர்கள் உயர்கல்வியில் கூடுதல் கவனம் செலுத்துவார்கள்.

**மீனம்:** தன்னம்பிக்கை துளிர்விடும். தைரியமான முடிவுகளை எடுப்பீர்கள். வெளியூர் பயணங்களால் மகிழ்ச்சியுண்டு. உத்தியோகத்தில் திறமைகளை வெளிப்படுத்த நல்ல சந்தர்ப்பங்கள் அமையும்.

## சுடோக்கு

### எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | 9 | 6 | | 8 | | | |
| | | 3 | 9 | 4 | | | | |
| 5 | 1 | | 2 | | | | | 8 |
| 2 | | 6 | | 8 | | 3 | | |
| 9 | 4 | 5 | | 7 | | 1 | 8 | 2 |
| | | 8 | | 2 | | 6 | | 4 |
| 6 | | | | | 2 | | 4 | 3 |
| | | | | 9 | 3 | 7 | | |
| | | | 7 | | 4 | 5 | | |

### நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 5 | 3 | 8 | 7 | 9 | 4 | 1 | 2 | 6 |
| 6 | 4 | 9 | 1 | 2 | 3 | 5 | 8 | 7 |
| 7 | 1 | 2 | 8 | 5 | 6 | 9 | 4 | 3 |
| 1 | 9 | 7 | 2 | 3 | 5 | 4 | 6 | 8 |
| 8 | 2 | 6 | 4 | 7 | 1 | 3 | 5 | 9 |
| 3 | 5 | 4 | 9 | 6 | 8 | 7 | 1 | 2 |
| 9 | 7 | 1 | 5 | 8 | 2 | 6 | 3 | 4 |
| 2 | 6 | 5 | 3 | 4 | 7 | 8 | 9 | 1 |
| 4 | 8 | 3 | 6 | 1 | 9 | 2 | 7 | 5 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1–9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1–9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராமல் நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப் படுகையில் உள் பெட்டிகளுக்குள் ளும் அவ்வாறே 1–9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் 'தனி எண்' என் பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான 'நிகோலி' இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.




பெரும்பாலும் மேகக் கூட்டத்துடனான காலநிலை நிலவும்.




தேசிய நிலை தமிழ்த்தினப் போட்டியில் பிரிவு 5 இற்கான இலக்கணப் போட்டியில் முதலிடம் பெற்று தங்கப்பதக்கம் வென்ற மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரி மாணவி செல்வி தம்பிராசா கஜேந்தினிக்கு கல்லூரி சமூகத்தினர் நடத்திய பாராட்டு விழாவில் கல்லூரியின் ஓய்வுநிலை அதிபர் ஜே. விநாயகமூர்த்தி விருது வழங்கி கௌரவித்தார். (ஒ-9)

## வில்லூன்றியில் ஆடி அமாவாசை

யாழ்ப்பாணம், ஓக.2
யாழ்ப்பாணம் வில்லூன்றி புனித தீர்த்தத்தில் ஆடி அமாவாசை நிகழ்வுகள் எதிர்வரும் செவ்வாய்க்கிழமை வழமைபோல் சிறப்பாக நடைபெறவுள்ளது. வில்லூன்றி விநாயகராலயத்தில் அதிகாலை விசேட அபிஷேகம், பூசைகளும் காலை 7 மணிக்கு வசந்த மண்டபப் பூசையும் இடம்பெறும். காலை 8 மணிக்கு வில்லூன்றி புனித தீர்த்தத்தில் தீர்த்தவாரி நடைபெற்றபின் பொதுமக்கள் அமாவாசை தீர்த்த சங்கற்பம் செய்து தீர்த்தமாடவும் பிதிர் தர்ப்பணங்கள் செய்து கொள்ளவும் விரிவான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.(ஒ)


## ஆலயங்களில் தெய்வீகக் காட்சிகள்



வரலாற்றுப் புகழ்மிக்க மாவிட்டபுரம் கந்தசுவாமி ஆலய வருடாந்த உற்சவத்தையொட்டி இடம்பெற்ற கற்பூரத் திருவிழா நேற்றுமுன்தினம் புதன்கிழமை இரவு 7.30 மணியளவில் மிகவும் விமரிசையாக இடம்பெற்றது. கற்பூரத் திருவிழாவையொட்டி சுவாமி வெளி வீதியுலா வருவதைக் காணலாம். (ந-86)



வட்டுக்கோட்டை தெக்கணப்பாய் கண்ணலிங்கேஸ்வரர் கோயில் தேர்த் திருவிழாவின்போது சுவாமி வீதியுலா வந்த வேளையில்... (ஒ-250)



சாவகச்சேரி ஆயிலடி வீரகத்தி விநாயகர் ஆலய தேர்த் திருவிழாக் காட்சி. (ஒ-9)



காரைநகர் அசரடி காடு கதிர்வேலாயுத சுவாமி கோயிலில் இடம்பெற்ற தேர்த் திருவிழாவில் வேல் பெருமான் தேரில் எழுந்தருளி அடியார்களுக்கு அருட்காட்சி கொடுப்பதைக் காணலாம். (ஒ)

## இடைக்காடு ம.வி முத்தமிழ் விழா

அச்சுவேலி, ஓக.2
இடைக்காடு மகாவித்தியாலய முத்தமிழ் விழாவும் "வித்தியாவனம்'' மலர் வெளியீட்டு விழாவும் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 1 மணிக்கு வித்தியாலய அரங்கில் நடைபெறவுள்ளது. முத்தமிழ் கலாமன்றத்தின் தலைவர் ம.கிரிசாந்த் தலைமையில் நடைபெறும் விழாவில் முதன்மை விருந்தினராக யாழ். கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் பொ.அருணகிரிநாதன் கலந்து கொள்கின்றார். மலர் வெளியீட்டுரையை மூத்த எழுத்தாளர் கே.ஆர். டேவிட்டும் மதிப்பீட்டுரையை ஓய்வு நிலை விரிவுரையாளர் கலாநிதி செ.திருநாவுக்கரசுவும் நிகழ்த்துவர். (ஒ-11)

## தொழில்நுட்ப பாடநெறி வடமராட்சியில் இரு பாடசாலைகளில்

ஜி.சீ.ஈ உயர்தர வகுப்பு மாணவர்களுள் கலை மற்றும் வர்த்தகத்துறை சார்ந்த மாணவர்கள் மட்டும் புதிதாக ஆரம்பிக்கப்பட்ட தொழில் நுட்பப் பாடநெறியைத் தெரிவு செய்து கற்பதற்காக வடமராட்சி வலயத்தில் கரவெட்டிக் கோட்டத்தைச் சேர்ந்த நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம், பருத்தித்துறைக் கோட்டத்தில் பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை என இரு பாட சாலைகள் மட்டுமே தெரிவு செய்யப்பட்டுள்ளன. கல்வி அமைச்சின் அறிவிப்புக்கு அமைய செப்ரெம்பர் 15 ஆம் திகதிக்கு முன்னர் புதிய பாட நெறியில் மாணவர்கள் தம்மை ஈடுபடுத்திக் கொள்ளலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.(ஒ-35)

## வெடிகொளுத்தி அட்டகாசம் புரிந்தோர் எச்சரிக்கையின் பின் விடுதலை

யாழ்ப்பாணம், ஓக.2
மல்லாகம் நீதிமன்றத்தின் நடவடிக்கைகள் பாதிப்படையும் வகையில் வெடி கொளுத்தி அட்டகாசம் செய்தார்கள் என்ற குற்றச் சாட்டின் பெயரில் தெல்லிப்பழை பொலிஸாரினால் இருவர் கைது செய்யப்பட்டு மல்லாகம் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்டனர். அவர்கள் நீதிமன்றினால் எச்சரிக்கை செய்யப்பட்டு விடுதலை செய்யப்பட்டார் கள்.
நேற்றுமுன்தினம் பகல் மல்லாகம் நீதிமன்றத்துக்கு அருகில் உள்ள அரசியல் கட்சி ஒன்றின் பிரதிநிதி வடமாகாண சபைத் தேர்தலுக்கான வேட்பு மனுத்தாக்கல் செய்வதற்காக தயாரான நிலையில் இந்தச் சம்பவம் இடம்பெற்றது.
அதன்போதே நீதிமன்றத்தின் செயற்பாடுகள் பாதிப்படையும் வகையில் வெடி கொளுத்தி அட்டகாசமாக மகிழ்ச்சி தெரிவிக்கப்பட்ட நிலையில் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.(ந-86)

## பஜனைக்கான பயிற்சிப் பட்டறை

யாழ்ப்பாணம், ஓக. 2
நல்லூர் பிரதேச இந்து ஆலயங்களின் சமூக அமைப்பு அபிவிருத்தி ஒன்றியமும் சின்மய மிஷனும் இணைந்து நல்லூர் திருவிழா ஆரம்பமாகும் எதிர்வரும் 12 ஆம் திகதி தொடக்கம் திருவிழா முடிவடையும் நாள்வரை பிற்பகலில் முருகன் வீதி யுலா வரும் போது பஜனை நடத்த உள்ளனர். இதற்கான பயிற்சிப் பட்டறை நாளை சனிக் கிழமை காலை 9.30 மணிக்கு நல்லூர் பிரதேச செயலகத் தின் மாநாட்டு மண்டபத்தில் நடைபெறும். நல்லூர் பிரதேச இந்து ஆலயங்களின் பஜனையாளர்களையும் இசை மாலை வழங்குபவர்களையும் கலந்து கொள்ளுமாறு கலாசார உத்தியோகத்தர் திருமதி ரஜனி குமார சிங்கம் கேட்டுக் கொண்டுள்ளார். (வ-7)

## மெய்வன்மைப் போட்டி

எவர்சைன் கிட்ஸ் வேல்ட்டின் 8 ஆவது மெய்வன்மைப் போட்டி நாளை சனிக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு யாழ். இந்துக்கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.
எவர்சைன்கிட்ஸ் வேல்ட்டின் இயக்குநர் செ.ஜெயபாலசிங்கம் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழக வணிகபீட முகாமைத்துவ கற்கைகள் பேராசிரியர் க.தேவராஜா கலந்துகொள்வார்.(ந-14)

## கருத்தரங்கு

யாழ்ப்பாணம், ஓக.2
யாழ். வர்த்தக தொழில் துறை மன்றத்தின் ஏற்பாட்டில் ''நிர்மாண ஒப்பந்த வேலைகளில் விலை வேறுபாடுகளும் அவற்றுக்கான பரிகாரங்களும்'' என்ற விடயம் தொடர்பான கருத்தரங்கு நடைபெறவுள்ளது.
இந்தக் கருத்தரங்கில் பங்கு கொள்ள ஆர்வமுடைய யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த கட்டட ஒப்பந்தக்காரர்கள், தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள், பொறியியலாளர்கள் மற்றும் தொடர்புடைய ஏனைய தனியார் துறையினர் எதிர்வரும் 9 ஆம் திகதிக்கு முன்னதாக பதிவுகளை மேற்கொள்ளலாம்.
ஆர்வமுடையவர்கள் இல.124 இராசாவின் தோட்டம் வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் மேலதிக விவரங்களைப் பெற்றுக் கொள்ளலாம் என்று வர்த்தக தொழில் துறை மன்றம் அறிவித்துள்ளது. (ந-14)

## கடவுள் என்றும் எம்முடன்

ஓர் இளைஞனுக்கு கடவுள் நம்பிக்கை இல்லை. அவன் வசிக்கும் தெருவில் துறவி ஒருவர் தினமும் சொற்பொழிவாற்றுவார். இறைவன் இருக்கிறார் என்பதே அவரது பேச்சின் சாராம்சமாக இருக்கும். அவரது பேச்சைக்கேட்ட இளைஞன், அவரிடம் சென்று இறைவனை நேரில் காட்டினால் அவர் சொல் வதை நம்புவதாகக் கூறினான். இறைவனை நினைந்து தவமிருந்தால், அவன் விரும்பியபடியே நடக்கும் என்றார் துறவி. இளைஞனும் ஏற்றுக் கொண்டு கடுந்தவம் இருந்தான். ஒருநாள் அவனுக்கு சுவாமி காட்சி தந்தார். ஆனாலும் அவனது சந்தேகப் புத்தி அப்போதும் தீரவில்லை. வந்திருப்பது சுவாமி தானா என ஆய்வு செய்ய ஆரம்பித்தான். அதைப் புரிந்துகொண்ட இறைவன். ''நான் உன்னுடனேயே இருக்கிறேன். ஆனால் உன் பார்வைக்குப் புலப்பட மாட்டேன்'' என்றார். ''சுவாமி! நீங்கள் என்னுடன் இருப்பதை எப்படி நான் தெரிந்து கொள்வது?'' என்று கேட்டான். அதற்கு இறைவன் ''நீ எங்கு சென்றாலும் நான்கு பாத சுவடு கள் தெரியும். அதில் இரண்டு என்னுடையது'' என்றார். ஒரு நாள் அந்த இளைஞன் சந்தேகத்துடன்,




நான் வந்த பாதையில் திரும்பிப் பார்த்தான். அங்கு இரண்டு பாதச்சுவடுகள் மட்டும் இருந்தன. தன்னை இறைவன் ஏமாற்றியதாகக் கருதிய அவன் சத்தமாக ''இங்கே இரண்டு பாதச் சுவடுகள் மட்டும் தானே உள்ளன. இறைவா! நீ என்னுடன் இல்லையா'' என்று கத்தினான். அப்போது இறைவன் அவனிடம் ''பக்தனே! என்னோடு இருப்பவர்கள் துன்பப்படுவதைப் பொறுக்கமாட்டேன். சற்றுத் தள்ளிப்பார். அங்கே முள் கிடக்கிறது அல்லவா? எனவே, நான் முன்னே சென்று அந்த முள் உன் காலில் குத்தாமல் தடுக்கும் வகையில் என் காலில் குத்திக்கொள்ளச் செய்தேன்'' என்றார். இறைவனின் கருணையை உணர்ந்த அவன் அவரிடம் மன்னிப்புக் கோரினான்.

நன்றி:- ஞானச்சுடர்

உதயன்
02/08/2013

# 16 ஆம் ஆண்டு நினைவலைகள்



மலர்வு 19 . 11 . 1961

உதிர்வு 30 . 07 . 1997

செல்வி **மைதிலி-கந்தசாமி**

(திதி: ஏகாதசி)

ஆண்டு பதினாறு சென்றும்
ஆறவில்லை உன் துயரம்
மீண்டும் நீ வாராயோ-என
நிதம் ஏங்கித் தவிக்கின்றோம்.

ஞானபண்டிதா வீதி,
கொக்குவில் மேற்கு,
கொக்குவில். (10706)(11.3.6)

உன் பிரிவால் வாடும்
அம்மா சகோதரர்கள்.

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



மண்ணில் 25.03.1954

விண்ணில் 03.07.2013

திருமதி **மகாராசா துரையம்மா**

03.07.2013 அன்று இறைபதம் அடைந்த எமது குடும்பத்தலைவியின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (02.08.2013) வெள்ளிக்கிழமை காலை 6.00 மணி தொடக்கம் அன்னாரது இல்லத்தில் நடைபெறும். இந்நிகழ்வில் தாங்களும் கலந்துகொண்டு அன்னாரது ஆத்மா சாந்தி பெற வேண்டுவதோடு, அதைத்தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

பளவத்தை,
சமரபாகு, வல்வெட்டித்துறை. (376857)(3.5.6)

குடும்பத்தினர்.
077 048 7620

## யாழ். வலய மட்ட புலமைப்பரிசில் முன்னோடிப் பரீட்சை

யாழ்ப்பாணம், ஒக. 2

யாழ்ப்பாண வலயக்கல்வி திணைக்களத்தினால் நடத்தப்படும் தரம் 5 புலமைப்பரிசில் முன்னோடிப் பரீட்சை நாளை சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு யாழ். வலயப் பாடசாலைகளில் நடைபெறும் என்று கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

இன்று வெள்ளிக்கிழமை பாடசாலைகள் பிற்பகல் 2 மணிக்கு வினாப்பத்திரப் பொதிகளைத் தத்தமது கோட்டக்கல்வி அலுவலகங்களில் பெற்று பரீட்சையை நடத்துமாறும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ஒ)

## புலமைப் பரிசில் மாணவருக்கு பரிசில் வழங்கும் நிகழ்வு

தென்மராட்சி, ஒக. 2

கொமர்ஷல் வங்கியின் சாவகச்சேரிக் கிளையில் 'அருணலு' சேமிப்பு கணக்கு வைத்துள்ள 2012 ஆம் ஆண்டு ஐந்தாம் தரப் புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தி பெற்ற மாணவருக்குப் பரிசில் வழங்கும் நிகழ்வு இன்று வெள்ளிக்கிழமை மாலை 4 மணிக்கு வங்கி மண்டபத்தில் இடம்பெறும்.

பரீட்சையில் சித்தி பெற்று பாடசாலை ரீதியாக புள்ளிகள் அடிப்படையில் முதல் மூன்று இடங்களைப் பெற்ற வங்கியில் அருணலு சேமிப்புக் கணக்கு வைத்துள்ள 22 மாணவர்கள் நிகழ்வில் கௌரவிக்கப்படவுள்ளனர்.

வங்கிக் கிளை முகாமையாளர் கே.பிரஜீவ் தலைமையில் நடைபெறும் நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் சு.கிருஷ்ண குமாரும், சிறப்பு விருந்தினராக கல்வி வலய ஆரம்பப் பிரிவு உதவிக்கல்விப்பணிப்பாளர் ந.சர்வேஸ்வரனும் கலந்து கொள்வர். (ந-9)

உதயன்
விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
021 567 1111

## மஞ்சவனப்பதி முருகனுக்கு நாளை கொடி

கொக்குவில் மஞ்சவனப்பதி முருகன் ஆலய வருடாந்தப் பெரும் திருவிழா நாளை சனிக்கிழமை முற்பகல் 11 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

எதிர்வரும் 12 ஆம் திகதி மாலை 7 மணிக்கு மஞ்சத் திருவிழாவும், 16 ஆம் திகதி மாலை 7 மணிக்கு கைலாச வாகனமும், 17 ஆம் திகதி காலை 6.30 மணிக்கு தண்டாயுதபாணித் திருவிழாவும், 18 ஆம் திகதி மாலை 7 மணிக்கு சப்பரத் திருவிழாவும், 19 ஆம் திகதி காலை 7 மணிக்கு தேர்த் திருவிழாவும், 20 ஆம் திகதி காலை 8.30 மணிக்குத் தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும். (ந)

# 31 ஆம் நாள் நினைவஞ்சலி



மண்ணில் 17.09.1938

விண்ணில் 04.07.2013

அமரர் **வேலுப்பிள்ளை-திருநாவுக்கரசு**

(ஓய்வுநிலை அதிபர்)

கண்மூடித் தூங்குவமோ? நெஞ்சு
கருவேலம் முள்ளோடு தான்
உன்னவோ கையை வைத்தாலோ
அங்கெல்லாம் உன் முகந்தான்
உறங்கவோ பாயும் போட்டாலோ
உன்றன் காலடி ஓசையும் காதில்
ஐயா நான் சாய்ந்த ஈச்சாரில்
முன்னாடி உன் வண்ணந்தான்
அணையாத ஜோதி நீவர வேண்டும்
வழிமீது விழிவைத்துப் பார்ப்போம்
சாவிலும் சாயா அன்பிது
தீயும் தான் தீண்டாத தெய்வம் நீர்
உங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்

இன்று (02.08.2013) வெள்ளிக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அழைக்கின்றோம்.

"குமாரோதயம்",
புகையிரத நிலைய வீதி,
கொக்குவில் கிழக்கு. (30096)(2.3.6)

உங்கள் அன்பின் மனைவி,
மகள் Dr. வித்தியா.

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு: 12.10.1949　　இறப்பு: 13.08.2012

அமரர் **மாணிக்கம் சபாநாதன்**

(முன்னாள் சிரேஷ்ட எழுதுவினைஞர், தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை)



எமது குடும்பத் தலைவர் அமரர் மாணிக்கம் சபாநாதன் அவர்களின் முதலாம் ஆண்டு-நினைவுநாள் இன்று (02.08.2013) வெள்ளிக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

(இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளுமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.)

இல. 36, திருநகர் வடக்கு,
கிளிநொச்சி. (37495)(5.6.3)

குடும்பத்தினர்.

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு 24 * 04 * 1937

உதிர்வு 25 * 07 * 2012

திருமதி **கதிரவேலு புஸ்பவதி** (செல்லம்மா)

திதி: ஏகாதசி

ஆண்டு ஒன்று ஓடிப்போனது
ஆறாத துயர் மட்டும் இன்னும் ஓய்ந்ததில்லை
நீங்காத நினைவுகளும் மாறாத பந்தமும்
அலை கொண்டு போனாலும் அம்மா!
எங்களோடு தான் வாழ்ந்திடுவாய்.

பேக்கரி லேன்,
சண்டிலிப்பாய். (30112)(4.5.3.6)

உங்கள்
குடும்பத்தினர்.

# வடமேல் மாகாண சபையில் 13 கட்சிகள், 12 குழுக்கள் களத்தில்

## மக்கள் முன்னணியுடன் மு.கா.இணைந்து போட்டி

குருநாகல், ஓக.2

நடைபெறவுள்ள வடமேல் மாகாண சபைக்கான தேர்தலில் குருநாகல் மாவட்டத்துக்கான வேட்பு மனுத்தாக்கல் நேற்று வியாழக்கிழமை நண்பகல் 12 மணிக்கு முடிவடைந்த போது பதிவு செய்யப்பட்ட 13 அரசியல் கட்சிகளும், 12 சுயேச்சைக் குழுக்களும் வேட்பு மனுக்களைத் தாக்கல் செய்திருந்தன.

இந்த முறை இந்த மாவட்டத்தில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி, ஐக்கிய தேசியக் கட்சி, மக்கள் விடுதலை முன்னணி, ஜனநாயக் கட்சி, முஸ்லிம் காங்கிரஸ், ஜனசெத பெரமுன, தொழிற்கட்சி, ஐக்கிய இலங்கை மகா சபை, தேசிய முன்னணி, பொதுஜனக் கட்சி, இன ஒற்றுமைக் கூட்டணி, ருகுணு மக்கள் கட்சி, தேசப்பற்றுள்ள தேசிய முன்னணி ஆகிய கட்சிகள் போட்டியிடுகின்றன.

வடமேல் மாகாண சபைக்கு ஆளும் கட்சி சார்பாக முதன்மை வேட்பாளர் தயாசிறி ஜயசேகர எனத் தெரிவிக்கப்பட்ட போதிலும், முன்னாள் முதல்வர் அதுல விஜேசிங்கவே முதன்மை வேட்பாளராக அறிவிக்கப்பட்டுள்ளார்.

ஐ.தே.கட்சியின் சார்பில் முன்னாள் மாகாண எதிர்க் கட்சித் தலைவர் சமல் பிரசன்ன செனரத், முஸ்லிம் காங்கிரஸ் சார்பில் ரிஸ்வி ஜவஹர்ஷா, மக்கள் விடுதலை முன்னணி நாமல் கருணாரத்ன , ஜனநாயக கட்சி சார்பில்எம்.ஏ.சமரவீர ஆகியோர் முதன்மை வேட்பாளர்களாக அறிவிக்கப்பட்டுள்ளனர்.

இந்த மாவட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் ஜே.ஸ்ரீரங்காவின் மக்கள் முன்னணி, முஸ்லிம் காங்கிரஸுடன் இணைந்து போட்டியிடுகிறது. இந்தக் கட்சி சார்பாக முஸ்லிம் காங்கிரஸ் வேட்பாளர் பட்டியலில் கே.கனகராஜா, எஸ்.ஜெகன் பிரகாஷ் ஆகிய இருவரும் போட்டியிடுகின்றனர். கே.கனகராஜா அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோவின் குருநாகல் மாவட்ட பெருந்தோட்டப் பகுதி இணைப்பாளர் என்பது குறிப்பிடத்தக்கது.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி, ஐ.தே.கட்சி, ம.வி.மு ஆகிய கட்சிகளின் பட்டியலில் தமிழர்கள் இடம்பெறவில்லை.

ஆனால் இந்தக் கட்சிகள் சார்பாக 1, 5, 1 என்ற ரீதியில் 07 முஸ்லிம்கள் இடம்பெற்றுள்ளனர். 35 மாகாண சபை உறுப்பினர்கள் பதவிக்காக இந்த மாவட்டத்தில் அரசியல் கட்சிகள் சார்பாக 481 பேரும் சுயேச்சைக் குழுக்கள் சார்பாக 444 பேருமாக மொத்தம் 925 பேர் போட்டியிடுகின்றனர். (ஒ-200)

## பாடசாலைகளை வேறு தேவைக்கு பயன்படுத்த வேண்டாம்

யாழ்ப்பாணம், ஓக.2

தீவகக் கல்வி வலயத்தில் ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சை மற்றும் தரம்-5 புலமைப்பரிசில் பரீட்சை நடைபெறும் காலப்பகுதியில் பரீட்சை நிலையங்கள் மற்றும் இணைப்பு நிலையங்களாகச் செயற்படவுள்ள பாடசாலைகளை வேறு செயற்பாடுகளுக்குப் பயன்படுத்தவேண்டாம் என்று தீவகக் கல்விப் பணிப்பாளர் தி.ஜோண் குயின்ரஸ் அறிவித்துள்ளார்.

பாடசாலைகளை வேறு தேவைகளுக்குப் பயன்படுத்துவதனால் வலயக் கல்விப் பணிப்பாளர் ஊடாக பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் அனுமதி பெறுதல் வேண்டும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ந-14)

## சட்டவிரோத குடியேறிகள் தாமாக நாடு திரும்ப வாய்ப்பு

கொழும்பு, ஓக. 2

பிரிட்டனில் சட்டவிரோதமாகக் குடியேறியவர்கள் தாமாகவே தமது சொந்த நாடுகளுக்குத் திரும்ப முடியும் அவ்வாறு திரும்புபவர்களைப் பிரிட்டன் அரசு ஊக்கப்படுத்தும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவ்வாறு தன்னிச்சையாக மீளத் திரும்பாவிடின் அவர்கள் மீது சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த விடயம் தொடர்பாக பிரிட்டன் குடிவரவு அமைச்சர் மார்க் ஹாப்பர் தெரிவிக்கையில்:-

சட்டவிரோதமாக இங்கு வந்து வேலை செய்வதை நாங்கள் கடினமாக்குகின்றோம். பிரிட்டனில் வசிக்கும் உரிமையைக் கொண்டிராதவர்களை வெளியேற்றும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இவர்கள் கைவிலங்கிடப்பட்டு வெளியேற்றுவதற்குப் பதிலாக எம்முடன் ஒத்துழைத்து தங்களின் நாடுகளுக்கு மீளத் திரும்ப முன்வந்தால் அவர்களுக்கு உதவியும், ஆலோசனையும் வழங்கப்படும்.

கடந்த வருடம் 3 ஆயிரத்து 699 வெளிநாட்டவர்கள் தன்னிச்சையாக பிரிட்டனை விட்டு வெளியேறியுள்ளனர்.- என்றார். (த-5)



தும்பளை யோகசாந்தி நிலையத்தினரால் புத்தூர் ஸ்ரீ சோமஸ்கந்த கல்லூரியில் யோகாசன கண்காட்சி நடைபெற்றது. அதில் ஒரு கட்டம். (ஒ)

## பதவியுயர்வுடன் இடமாற்றம்

வலி.தென்மேற்கு, ஓக.2

சண்டிலிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையில் பதில் மேற்பார்வை பொது சுகாதாரப் பரிசோதகராகக் கடமையாற்றிய என்.நிர்மலானந்தன், நிரந்தர மேற்பார்வை பொது சுகாதாரப் பரிசோதகராகப் பதவி உயர்வு பெற்றுப் புதுக்குடியிருப்பு சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

இவர் சண்டிலிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையில் இரு வருடங்களாகக் கடமையாற்றும் போது டெங்குக் கட்டுப்பாடு, தொற்றுநோய்க் கட்டுப்பாடு, பாடசாலைச் சுகாதாரம், உணவுப் பாதுகாப்பு போன்ற நடவடிக்கைகளில் பிரதேச சபை, பிரதேச செயலகம் ஆகிய திணைக்களங்களுடன் இணைந்து செயற்பட்டு வந்ததுடன் மக்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் பிரசாரங்களையும் மேற்கொண்டு வந்துள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஒ-115)


## உயர்தரப் பரீட்சை முறைப்பாட்டை ஏற்றுக்கொள்ள விசேட கூடம்

கொழும்பு,ஓக.2

ஜி.சீ.ஈ உயர்தரப் பரீட்சை சம்பந்தமான சிக்கல்கள் மற்றும் முறைப்பாடுகளை ஏற்றுக்கொள்ள பரீட்சைகள் திணைக்களத்தால் விசேட நடவடிக்கைகள் கூடம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இந்தக் கூடம் மூலம் உயர்தரப் பரீட்சை சம்பந்தமான முறைப்பாடுகள், வினா குறித்த சிக்கல்களை முன்வைப்பதற்கு முடியும் என்று பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இந்த விசேட நடவடிக்கைகள் கூடம் ஜி.சீ.ஈ உயர்தரப் பரீட்சை முடிவுறும் வரை 24 மணி நேரமும் செயற்படவுள்



ளது எனத் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது. ஜி.சீ.ஈ உயர்தரப் பரீட்சை எதிர்வரும் 5 ஆம் திகதி ஆரம்பமாகி 31 ஆம் திகதி வரை நடைபெறும் என்பது குறிப்பிடத்தக்கது. (ச-22)

## 30,000 மெற்றிக்தொன் நெல் கொள்வனவு



கொழும்பு,ஓக.2

இந்த ஆண்டு அநுராதபுரம், வவுனியா, மன்னார், முல்லைத்தீவு, கிளிநொச்சி மற்றும் யாழ்ப்பாண மாவட்டங்களில் சிறுபோக நெல் விளைச்சல்களிலிருந்து 30,000 மெற்றிக்தொன் நெல்லைக் கொள்வனவு செய்வதற்கு நெல் சந்தைப்படுத்தல் சபை தீர்மானித்துள்ளது.

இந்த நெல் கொள்வனவுக்கு 9 1/2 கோடி ரூபா செலவிடப்படவுள்ளது என்று நெல் சந்தைப்படுத்தல் சபையின் அனுராதபுர வலயத்தின் முகாமையாளர் பந்துல குமார தெரிவித்தார்.

**நெல் கொள்வனவுக்கு 9 1/2 கோடி ரூபா செலவிடப்படவுள்ளது.**

இதன்கீழ் அநுராதபுர மாவட்டத்தில் 20,000 மெற்றிக்தொன் நெல்லும், வட மாகாணத்திலிருந்து 10,000 மெற்றிக்தொன் நெல்லும் கொள்வனவு செய்யப்படவுள்ளது. அநுராதபுரத்தில் 25 நெல் கொள்வனவு நிலையங்கள் திறக்கப்படவுள்ளன. (ச-22)

## மத்திய மாகாணத்தில் யானையில் ஐ.ம.மு. சார்பில் இளைஞர் மூவர்

கண்டி, ஓக. 2

மத்திய மாகாண சபைத் தேர்தலில் ஐக்கிய தேசிய கட்சியுடன் இணைந்து யானைச் சின்னத்தில் கண்டி மாவட்டத்தில் வேலுகுமார், நுவரெலிய மாவட்டத்தில் ராஜ்குமார், சந்திரகுமார் ஆகிய மூன்று படித்த இளைஞர்களை கட்சித் தலைவர் மனோ கணேசனின் நேரடி முன்னெடுப்பாக, தமது கட்சி மலையகத்தில் களம் இறக்கியுள்ளதாக ஜனநாயக மக்கள் முன்னணி தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் ஜனநாயக மக்கள் முன்னணி விடுத்துள்ள செய்திக் குறிப்பில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது:-

முகாமைத்துவ பட்டதாரியும், தற்போது கண்டி நகரில் ஆசிரியராகப் பணியாற்றுபவருமான, வேலுகுமார் ஜனநாயக மக்கள் முன்னணியின் கண்டி மாவட்ட வேட்பாளராக யானைச் சின்னத்தில் போட்டியிடுகின்றார்.

நுவரெலியா அம்பகமுவ பிரதேச சபையில் ஐ.ம.முவின் உறுப்பினரான ராஜ்குமார் மற்றும் ஆசிரியரான சந்திரகுமார் இருவரும் ஜனநாயக மக்கள் முன்னணியின் நுவரெலியா மாவட்ட வேட்பாளர்களாக யானைச் சின்னத்தில் போட்டியிடுகின்றனர். (ஒ)

## கரவெட்டிப் பிரதேச செயலகத்தில் கவிதைச் செயலமர்வு

கரவெட்டி, ஓக. 2

வடமாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணையுடன் கரவெட்டி பிரதேச செயலகத்தில் கவிதைச் செயலமர்வொன்று இடம்பெறவுள்ளது.

யாழ்.மாவட்டத்திலுள்ள தகுதி வாய்ந்த வளவாளர்களைக் கொண்டு பத்து அமர்வுகளாக இந்தச் செயலமர்வு நடத்து வதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.

எனவே கரவெட்டி பிரதேசத்தைச் சேர்ந்த ஆர்வமுடையவர்கள் 21.08.2013 க்கு முன்பு பிரதேச செயலகத்துக்கு நேரடியாக வருகை தந்தோ அல்லது 0212263258 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டோ தங்கள் விண்ணப்பங்களை சமர்ப்பிக்கலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ஓ)

# வரிகள் இல்லாத சுதந்திர விமான நிலையமாக மத்தளவை பிரகடனப்படுத்த யோசனை

### ஜனாதிபதி மஹிந்த முன் வைக்கிறார்



கொழும்பு,ஓக.2

ஹம்பாந்தோட்டை- மத்தள சர்வதேச விமான நிலையத்தை சுதந்திரமான விமான நிலையமொன்றாகப் பிரகடனப்படுத்த ஆலோசிக்கப்பட்டுள்ளது.

சுங்க வரிகள் மற்றும் ஏற்றுமதி இறக்குமதிச் சட்ட விதிகளிலிருந்தும் விடுவித்து மத்தள விமான நிலை யத்தை சுதந்திர விமான நிலையமொன்றாகப் பெயரிடுவதற்கு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவினால் யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது.

இதேவேளை இந்த விமான நிலையத்துக்கு வர்த்தகச் செயற்பாடுகள் தொடர்பான ஈர்ப்பை ஏற் படுத்தி வைக்கும் நோக்கில் தம் மன்னாவ, குறுந்தன ஆகிய பிரதேசங்களை விமான நிலையத்துக்கு உரிய களஞ்சியப் பிரதேசங்களாகப் பிரகடனப்படுத்தவும் யோசனைகள் முன் வைக்கப்பட்டுள்ளன.

நேரடியாக இலங்கைக்கு ஏற்றுமதி செய்யப்படாத பண்டங்களை களஞ்சியப் படுத்தும் பிரதேசங்களில் வைத்து மீள ஏற்றுமதி செய் வதற்கும் ஆலோசிக்கப் பட்டுள்ளது. (ச-22)

# சந்தேகநபர் தப்பியோட்டம்

களுபோவிலை போதனா வைத்தியசாலையில் தங்கியிருந்து சிகிச்சை பெற்றுவந்த சந்தேகநபர் ஒருவர், பொலிஸாரைத் தாக்கிவிட்டு தப்பிச் சென்றுள்ளார்.

குற்றச்செயல்கள் தொடர்பில் தேடப்பட்டுவந்த சந்தேகநபர் ஒருவரே இவ்வாறு தப்பிச் சென்றுள்ளார். சில தினங்களுக்கு முன் னர் தெஹிவளை பிரதேசவாசிகள் சிலரால் சந்தேகநபர் தாக்கப்பட்டு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தார்.

சந்தேகநபரைக் கைது செய்வதற்காக புதன்கிழமை இரவு பொலிஸ் உத்தியோகத்தர்கள் சிலர் வைத்தியசாலைக்கு சென் றிருந்தனர். இதன்போது கூரான ஆயுதத்தால் பொலிஸ் உத்தி யோகத்தர் ஒருவரைத் தாக்கிவிட்டு, சந்தேகநபர் தப்பிச் சென் றுள்ளார். (ச)

## மீள்திருத்த பெறுபேற்றை பார்க்கலாம்

2012ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் இடம் பெற்ற ஜி.சி.ஈ. சாதாரண தரப் பரீட்சை விடைத்தாள்களை மீள்திருத்தம் செய்ய விண்ணப்பித்தவர்களுக்கான பெறுபேறுகள் வெளியாகியுள் ளன.

www. doents.lk என்ற இணையத் தள முகவரி மூலம் மீள் பரீட்சைப் பெறு பேறுகளைப் பார்வையிட முடியும் என பரீட்சைத் திணைக்களம் அறிவித்துள்ளது. (ஐ-400)


## பாராட்டி வாழ்த்துகின்றோம்



31.07.2013 அன்று பண்டாரநாயக்கா நினைவு மண்டபத்தில் இடம் பெற்ற பட்டமளிப்பு விழாவில் (B.Architecture) பட்டம் பெற்ற மொறட்டுவ பல்கலைக்கழகத்தில் கல்வி கற்ற

**செல்வராஜா மதன்ராஜ்**

அவர்கள் மேன்மேலும் பல பட்டங்கள் பெற வாழ்த்துவோர்:

அப்பப்பா, அப்பம்மா (கோப்பாய்),
கனபாலன் மாமா குடும்பம் (கோப்பாய்),
மகாலிங்கம் மாமா குடும்பம் (கோப்பாய்),
உதயன் சித்தப்பா குடும்பம் (கன்னாகம்)
சயந்தன் மாமா குடும்பம் (அரியாலை)
கோனேஸ் சித்தப்பா

Best Wishes

(C/9770)(10,16)


# வடக்கு, கிழக்குக்கு 66,500 அ.அட்டை

### ஆள்பதிவுத் திணைக்களம் தகவல்



கொழும்பு,ஓக.2

அடையாள அட்டைகளைப் பெற்றுக் கொள்வதற்காக வடக்கு, கிழக்குப் பிரதேசங்களைச் சேர்ந்த குடியிருப்பாளர்களிடமிருந்து 73,500 விண்ணப்பங்கள் கிடைத்துள்ளன. அவற்றுள் 66,500 ஆள் அடையாள அட்டைகள் விநியோகிக்கப் பட்டுள்ளன என்று ஆள் பதிவுத் திணைக்கள ஆணையாளர் தெரிவித்தார்.

இந்த அடையாள அட்டைகளுள் வடமாகாணத்திலிருந்து விண்ணப்பித்துள்ளோரின் அடையாள அட்டைகளே அதிகளவில் உள்ளன என்று அவர் குறிப்பிட்டார்.

இந்த அடையாள அட்டைகளின் விவரங்கள் சிங்களம் மற்றும் தமிழ் மொழிகளில் தயாரிக்கப்பட்டுள்ளன.

வடமாகாண சபைத் தேர்தலுக்கு முன்னர் ஆள் அடையாள அட்டைகளைக் கொண்டிராத வாக்காளர்களுக்கு அடையாள அட்டைகளை விநியோகிக்கும் விசேட திட்டத் தின்கீழ் அஞ்சு முன்னுரிமை வழங் கப்பட்டுள்ளது என்று அவர் கூறினார்.

கடந்த 15 ஆம் திகதியிலிருந்து வடக்கின் ஐந்து மாவட்டங்களில் நடமாடும் சேவைகள் நடைமுறைப்படுத்தப்பட்டு வருவதோடு, அவற்றின் மூலம் பெறப்படும் விண்ணப்பங்கள் பிரதான அலுவலகப்பத்துக்கு அனுப்பி வைக்கப்படுகின்றன என்று அவர் மேலும் குறிப்பிட்டார். (ச-22)


## அகமகிழ்ந்து வாழ்த்துகின்றோம்



எமது பாடசாலையின் அதிபர்

**திருவடிவேலு ஜீவரத்தினம்**

(BED, SLPSIII)

அவர்கள் நீதிச்சேவை ஆணைக்குழுவால் சமாதான நீதிவானாகவும், பச்சிலைப்பள்ளி பிரதேச மத்தியஸ்தர் சபையின் தவிசாளராகவும் உயர்வு பெற்றமையை பாராட்டி வாழ்த்துவதோடு அவரை மேலும் பல உயர்வுகள் பெற்று கல்விப்பணி, சமூகப்பணி ஆற்றிட பாராட்டி வாழ்த்துகின்றோம்.

கிளி/பளை றோ.க.த.க. பாடசாலை, பளை
ஆசிரியர்கள், கல்விசாரா ஊழியர்கள், மாணவர்கள்

## விற்பனைக்கு உண்டு



01. 16இஞ்சி பெட் 5½ அடி நீளம் -450,000/= (சீவு இயந்திரம்)
02. வேர்டிகள் - 200, 000/= (வேலைப்பாட்டு இயந்திரம்)
03. வளைவு வெட்டும் இயந்திரம். 70,000/=
04. 6இஞ்சி பெட் - 40,000/= (சீவு இயந்திரம்)
05. கொம்பிரேஷன் - 25,000/=
06. 5000 வோல்ட் ஜெனரேற்றர் - 50,000/=
07. மைக்கிட்டா கமர் ரில்- 50,000/=

30130

தொடர்பு:- 077 0448609
(பலாலி றோட், உரும்பிராய்)

## உடனடி வேலைவாய்ப்பு

போட்டோ சொப் வீடியோ எடிட்டிங் துறையில் அனுபவம் உள்ளவர் தேவை. கணினி அறிவுள்ள ஆங்கிலம் ஓரளவு தெரிந்த பெண் கணக்காளர் தேவை.

30131

தொடர்பு:- 078 5661717

## பஸ் விற்பனைக்குண்டு

யாழ்ப்பாணம் முல்லைத்தீவு சேவையில் ஈடுபடும் அசோக் லேலண்ட் தொடர் இலக்கம் NA xxxx, ND xxxx,

யாழ் கொழும்பு சேவையில் ஈடுபடும் Non A/C சீற் அஜேஸ் றபில் தொடரிலக்கம் NDxxxx, விற்பனைக்குண்டு.

தொடர்புக்கு: 077 078 15 16 (30132) (18,16)

## முதலாவது பிறந்தநாள் வாழ்த்து



காண்டீபன்-நாமகள் தம்பதியரின் செல்வப் புதல்வி

**காருணிஹா**



இன்று (02.08.2013) வெள்ளிக்கிழமை தனது முதலாவது பிறந்த நாளை தனது இல்லத்தில் கொண்டாடுகின்றார்.

இவரை சீரும் சிறப்புடனும் பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்தும்

இல.15, இராமநாதன் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.

Happy 1st birthday

தாத்தா, அம்மம்மா.

## சைக்கிள் மரதன் ஓட்டப் போட்டி-வலி.மேற்கு

உள்ளூராட்சி வாரத்தை முன்னிட்டு வலி.மேற்கு பிரதேச சபையினால் சைக்கிள் மரதன் ஓட்டப் போட்டிகள் (ஆண்கள் மட்டும்) நடத்தப்பட உள்ளன.

வலி.மேற்கு பிரதேச எல்லைக்குள் வாழும் இளைஞர் (திறந்த நிலை) மேற்படி போட்டியில் கலந்து கொள்ளலாம். விண்ணப்பப் படிவங்களை தலைமை அலுவலகத்தில் ரூபா 50 செலுத்தி பெற்றுக் கொள்ளலாம்.

விண்ணப்பங்களை எதிர்வரும் 05.08.2013 முதல் 14.08.2013 வரையான திகதிக்குள் தலைமை அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளவும். மேற்படி போட்டிக்கான திகதி, போட்டி வழி, விதி முறைகள் விண்ணப்பப் படிவத்துடன் வழங்கப்படும்.

திருமதி நா.ஐங்கரன், தவிசாளர்,
வலிகாமம் மேற்கு பிரதேச சபை, சுழிபுரம். (C/10731) (3.6.11)

## English Classes

தனியாகவும், குழுவாகவும் கற்பிக்கப்படும்.

S. Nelakshan
Gr: 6-11
T.P: 077 331 46 08 (30133) (10,16)

## வாடகைக்கு

வெள்ளவத்தை, காலி வீதிக்கு ராமகிருஷ்ண மிஷன் அருகில் முகப்பாக Room வாடகைக்கு விடப்படும். A/C, TV வசதியுடன் 3500/=, TV வசதியுடன் 2500/=

(C/10692)(3.6.11)

## விற்பனைப் பிரதிநிதி தேவை

சாவகச்சேரியில் இயங்கும் நிறுவனத்துக்கு விற்பனைப் பிரதிநிதி தேவை. கல்வித் தகைமை கவனிக்கப்படமாட்டாது. 18 வயதுக்கும் 30 வயதுக்கும் இடைப்பட்டவர்கள் தொடர்பு கொள்ளவும். உணவு தங்குமிடம் இலவசம்.

தொடர்பு: 021 227 05 86

## முதலாம் பக்கத் தொடர்ச்சி

# செப். 21 தேர்தல்

ழரசுக் கட்சி, ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி, ஐக்கிய தேசியக் கட்சி என்பன வடக்கின் 5 மாவட்டங்களிலும் போட்டியிடுகின்றன.

வட மாகாண சபைக்கான வேட்பு மனுத் தாக்கல் கடந்த ஜூலை 25 ஆம் திகதி முதல் நேற்று மதியம் 12 மணி வரை இடம்பெற்றது. இதன் பின்னர் ஆட்சேபனைக்கான கால அவகாசம் வழங்கப்பட்டது.

இதன் பின்னர் வடக்கின் ஒவ்வொரு மாவட்டத்திலும் போட்டியிடும் கட்சிகள், சுயேச்சைக் குழுக்களின் விவரங்கள் வெளியிடப்பட்டன.

யாழ். மாவட்டத்தில் 13 அரசியல் கட்சிகளும் 10 சுயேச்சைக் குழுக்களும் வேட்பு மனுத் தாக்கல் செய்திருந்தன. அவற்றில் ஜாதிக சல்வர்த்தன பெரமுன, எமது தேசிய முன்னணி ஆகிய கட்சிகளினதும், ஒரு சுயேச்சைக் குழுவினதும் வேட்பு மனுக்கள் நிராகரிக்கப்பட்டன.

கிளிநொச்சி மாவட்டத்தில் 11 அரசியல் கட்சிகளும் 3 சுயேச்சைக் குழுக்களும் போட்டியிட வேட்பு மனுத் தாக்கல் செய்திருந்தன. இவற்றில் ஒரே ஒரு சுயேச்சைக் குழுவின் வேட்பு மனு நிராகரிக்கப்பட்டது.

முல்லைத்தீவு மாவட்டத்தில் 10 கட்சிகளும் 3 சுயேச்சைக் குழுக்களும் போட்டியிட வேட்பு மனுத்தாக்கல் செய்திருந்தன. அவை அனைத்தும் ஏற்றுக் கொள்ளப்பட்டன.

இருப்பினும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் வேட்பாளர் சதாசிவம் கனகரட்ணம், ஆதிசிவம் கனகரட்ணம் என்று விண்ணப்பித்துள்ளார். இது தொடர்பில் ஆட்சேபம் எழுப்பப்பட்டபோதும், அது நிராகரிக்கப்பட்டது - ஆனாலும் இது தொடர்பில் எழுத்து மூலமான முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

மன்னார் மாவட்டத்தில் போட்டியிடுவதற்கு 12 கட்சிகளும், 8 சுயேச்சைக் குழுக்களும் வேட்பு மனுத் தாக்கல் செய்திருந்த நிலையில் வேட்பு மனுக்கள் அனைத்தும் ஏற்றுக் கொள்ளப்பட்டன.

வவுனியா மாவட்டத்தில் 12 கட்சிகளும், 7 சுயேச்சைக் குழுக்களும் போட்டியிட வேட்பு மனுத் தாக்கல் செய்திருந்த நிலையில் ஒரே ஒரு சுயேச்சைக் குழுவின் வேட்பு மனு மட்டும் நிராகரிக்கப்பட்டுள்ளது.

யாழ். மாவட்டத்தில் போட்டியிடும் கட்சிகள் விவரம் வருமாறு:-

ஸ்ரீலங்கா தொழிலாளர் கட்சி, இலங்கை தமிழரசுக் கட்சி, ஜனசெதபெரமுன, சோஷலிச சமத்துவக் கட்சி, ஐக்கிய தேசியக் கட்சி, மக்கள் விடுதலை முன்னணி, ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி, ஜனநாயகக் கட்சி, ஜனநாயக ஐக்கிய முன்னணி, ஐக்கிய சோஷலிசக் கட்சி, ஸ்ரீலங்கா மகாஜன கட்சி.

**வவுனியா மாவட்டம்**

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு, ஜனசெத பரமுன, இலங்கை தொழிலாளர் கட்சி, எக்ஸ்சத் லங்கா மகா சபா, தமிழரசுக் கட்சி, மக்கள் விடுதலை முன்னணி, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், ஜனநாயகக் கட்சி, ஐக்கிய தேசியக் கட்சி, ஐக்கிய சோஷலிசக் கட்சி, ஜனநாயகத் தேசியக் கூட்டமைப்பு, எக்ஸ்சத் லங்கா பொதுஜன பக்ஷய,12 கட்சி, 8 சுயேச்சைக் குழுக்கள் வேட்புமனுவில் இதில் செல்லையா விஜயகுமார் தலைமையில் சுயேட்சைக் குழுவின் வேட்புமனு நிராகரிப்பு. 6 பேரைத் தெரிவு செய்ய 171 பேர் களத்தில் போட்டியிடுகின்றனர்.

**முல்லைத்தீவு**

தமிழரசுக் கட்சி, ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு, ஐக்கிய தேசியக் கட்சி, எக்ஸ்சத் லங்கா பொதுஜன பக்ஷய, மக்கள் விடுதலை முன்னணி, ஜனசெத பெரமுன, ஜனநாயகத் தேசியக் கூட்டமைப்பு, இலங்கை தொழிலாளர் கட்சி, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், ஐக்கிய சோஷலிக் கட்சி, 2 சுயேச்சைக் குழு, 10 அரசியல் கட்சி.

**மன்னார் மாவட்டம்**

தமிழரசுக் கட்சி, எக்ஸ்சத் லங்கா பொதுஜன பக்ஷய, ஐக்கிய தேசியக் கட்சி, இலங்கை தொழிலாளர் கட்சி, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு, முஸ்லிம் விமுக்தி பெரமுன, மக்கள் விடுதலை முன்னணி, ஜாதிக பெரமுன, ஜனநாயகத் தேசியக் கூட்டமைப்பு, ஐக்கிய சோஷலிசக் கட்சி, ஜனநாயகக் கட்சி, 2 சுயேச்சைக் குழு

**கிளிநொச்சி மாவட்டம்**

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு, ஜனசத பெரமுன, தமிழரசுக் கட்சி இலங்கைத் தொழிலாளர் கட்சி, மக்கள் விடுதலை முன்னணி, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், ஐக்கிய தேசியக் கட்சி, ஐக்கிய சோஷலிசக் கட்சி, ஜனநாயகத் தேசியக்கூட்டணி, எக்சத்லங்கா பொதுஜன பக்ஷய, ஈழவர் முன்னணி, சுயேச்சை குழுக்கள் 2.

(த-402, 400)

# இராணுவம் வேண்டாம்

டியிட விண்ணப்பித்த அரசியல் கட்சிகளுடன் தெரிவத்தாட்சி அலுவலர் சுந்தரம் அருமைநாயகம் கலந்துரையாடல் நடத்தினார். இந்தக் கலந்துரையாடல் முடிவடைந்து வெளியேறும் போது ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்த இலங்கை தமிழரசுக் கட்சியின் முதன்மை வேட்பாளர் சி.வி. விக்னேஸ்வரன், ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் சி.தவராசா மற்றும் இ. அங்கஜன் ஆகியோரே மேற்படி கருத்தை வலியுறுத்தினர்.

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் முதன்மை வேட்பாளர் சி.வி.விக்னேஸ்வரன், இராணுவத்தினர் தேர்தல் காலத்திலாவது முகாம்களுக்குள் முடக்கப்பட வேண்டும் இல்லாவிட்டால் எமக்குப் பெரிய விளைவுகள் ஏற்படும் - என்றார்.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் சி.தவராசா, இ. அங்கஜன் ஆகியோர் கருத்துத் தெரிவிக்கையில்;

இராணுவத்தினர் பாதுகாப்புக்குப் பொறுப்பானவர்கள். அவர்களை இராணுவ முகாமுக்குள் முடக்குவது நாட்டின் பாதுகாப்புடன் தொடர்புடைய விடயம். ஆனால், தேர்தல் நடவடிக்கைகளில் இராணுவத்தினர் எந்தக் காரணம் கொண்டும் தலையீடு செய்யக்கூடாது. அதில் நாம் உறுதியாக இருக்கின்றோம் - என்றனர். (த-5)

## படையினரின் மறியல் காலம் மீண்டும் நீடிப்பு

ஒகஸ்ட் மாதம் 5 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் ஏ.எல்.அஸ்ஹர் நேற்று வியாழக்கிழமை மீண்டும் உத்தரவிட்டுள்ளார்.

சந்தேகநபர்கள் திருகோணமலை நீதிவான் நீதிமன்றில் நேற்று முன்னிலைப்படுத்தப்பட்டபோதே நீதிவான் ஏ.எல். அஸ்ஹர் மேற்கண்டவாறு உத்தரவிட்டுள்ளார். (த)

## ஆஸ்திரேலியா செல்ல முயன்ற 116 பேர் கடலில் மடக்கிப் பிடிப்பு

இவர்கள் மட்டக்களப்பு, திருகோணமலை, கிளிநொச்சி, வவுனியா, மன்னார், யாழ்ப்பாணம், வெலிகம பகுதிகளைச் சேர்ந்தவர்களாவர். கைது செய்யப்பட்டவர்கள் திருகோணமலை துறைமுகத்துக்கு அழைத்துச் செல்லப்பட்டுக் குற்றப்புலனாய்வுப் பிரிவினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர். (த)

# மூதூர் படுகொலை குறித்து நீதியான விசாரணை இல்லை

4 ஆம் திகதியன்று தமிழர்களாகிய 17 பேர் மூதூர் அக்ஷன் பாம் நிறுவன அலுவலகச் சூழலில் வைத்து கொலை செய்யப்பட்டனர். இதில் 4 பெண்களும் அடங்கியிருந்தனர்.

விடுதலைப்புலிகளுக்கும் படையினருக்கும் இடையில் இடம்பெற்ற கடும் மோதல்களின் பின்னரே இந்தக் கொலைகள் இடம்பெற்றிருந்தன

இந்த நிலையில் சர்வதேசத்துக்கு ராஜபக்ச அரசு நல்ல எலும்புத் துண்டுகளை வீசியுள்ள போதிலும் குறித்த மனித உரிமை மீறல் தொடர்பில் உரிய முன்னெடுப்புகள் மேற்கொள்ளப்படப்பட்வில்லை என்று கண்காணிப்பகத்தின் கொள்கைப் பணிப்பாளர் ஜேம்ஸ் ரோஸ் குற்றம் சுமத்தியுள்ளார். (த)

# கருணாநிதியும் கோரிக்கை

தாவது: வடக்கு மாகாணத்தில் இராணுவம் அதிக அளவில் குவிக்கப்பட்டுள்ளதை, குறைக்க வேண்டுமென்று சர்வதேச நாடுகள் கூறி வருகின்றன. ஆனாலும், பாதுகாப்புக்காக என்று சாக்குச்சொல்லி, அந்த இராணுவத்தை விலக்கிக் கொள்ள இலங்கை அரசு மறுத்து வருகிறது.

இந்தச் சூழலில் சுதந்திரமாக அங்கே தேர்தல் நடைபெற வேண்டுமென்றால், அங்கே குவிக்கப்பட்டுள்ள இராணுவத்தினரை அந்தப் பகுதியிலிருந்து விலக்கிக்கொள்ள வேண்டுமென வலியுறுத்தப்பட்டு வருகிறது. வடக்கு மாகாணத்தில் தற்போதுள்ள பொலிஸார் மற்றும் இராணுவத்தினர் அனைவருமே சிங்களவர். மொத்தம் 15 படைப் பிரிவினர் அங்கே முகாமிட்டிருக்கிறார்கள். மிக அதிக அளவிலான இந்த இராணுவக் குவிப்பு மக்களிடம் பெரும் பயத்தை ஏற்படுத்தியுள்ளது. இலங்கைப் பயணத்தின் போது தமிழர் பகுதிகளில் நடக்கும் சீரமைப்பு நடவடிக்கைகளை ஐ.நா.மனித உரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளை ஆய்வு செய்யவிருக்கிறார். அவர் அங்கு நிலைமையை நேரடியாகக் கண்டறிந்து அதைச் சரி செய்வதற்கான முயற்சிகளை மேற்கொள்வார் என்று உலகத்தமிழர்கள் எதிர்பார்க்கிறார்கள்-என்றுளது. (த)

# வடமேல், மத்திய மாகாணங்களில் 112 கட்சிகள், 46 சுயேச்சைகள்

களுக்கும் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளிலிருந்தும், சுயேச்சைக் குழுக்களிலிருந்தும் 3 ஆயிரத்து 785 வேட்பாளர்கள் போட்டியிடுகின்றனர். இவர்களுள் அரசியல் கட்சிகள் சார்பில் 2 ஆயிரத்து 279 வேட்பாளர்களும், சுயேச்சைக் குழுக்கள் சார்பில் ஆயிரத்து 506 வேட்பாளர்களும் போட்டியிடுகின்றனர்.

தாக்கல் செய்யப்பட்ட 210 வேட்பு மனுக்களில் அரசியல் கட்சிகள் சார்பில் தாக்கல் செய்யப்பட்ட 131 வேட்பு மனுக்களில் 5 வேட்புமனுக்கள் நிராகரிக்கப்பட்டு 126 வேட்புமனுக்கள் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளன.

இதேவேளை, சுயேச்சைக் குழுக்கள் சார்பில் தாக்கல் செய்யப்பட்ட 79 வேட்பு மனுக்களில் 4 வேட்புமனுக்கள் நிராகரிக்கப்பட்டு 75 வேட்புமனுக்கள் ஏற்றுக் கொள்ளப்பட்டன.

வடமேல் மாகாணத்தில் 50 உறுப்பினர்களைத் தெரிவு செய்வதற்காக ஆயிரத்து 362 வேட்பாளர்கள் போட்டியிடுகின்றனர். இதற்கமைய தாக்கல் செய்யப்பட்ட 51 வேட்புமனுக்களில் 3 வேட்பு மனுக்கள் நிராகரிக்கப்பட்டு 48 வேட்புமனுக்கள் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளன.

இதனடிப்படையில் அரசியல் கட்சிகள் சார்பில் தாக்கல் செய்யப்பட்ட 28 வேட்பு மனுக்களில் 3 வேட்புமனுக்கள் நிராகரிக்கப்பட்டு, 25 வேட்புமனுக்கள் ஏற்றுக் கொள்ளப்பட்டன.

இதேவேளை, சுயேச்சைக் குழுக்களால் தாக்கல் செய்யப்பட்ட 23 வேட்புமனுக்களும் ஏற்றுக்கொள்ளப்பட்டன.

மத்திய மாகாணத்தில் 56 உறுப்பினர்களைத் தெரிவு செய்வதற்காக ஆயிரத்து 517 வேட்பாளர்கள் போட்டியிடுகின்றனர். இதற்கமைய இம் மாகாணத்தில் தாக்கல் செய்யப்பட்ட 69 வேட்பு மனுக்களில் ஒரு வேட்புமனு நிராகரிக்கப்பட்டு 68 வேட்புமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டன.

அரசியல் கட்சிகள் சார்பில் தாக்கல் செய்யப்பட்ட 44 வேட்புமனுக்கள் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளதுடன், சுயேச்சைக் குழுக்கள் சார்பில் தாக்கல் செய்யப்பட்ட 25 வேட்புமனுக்களில் ஒன்று நிராகரிக்கப்பட்டு 24 வேட்பு மனுக்கள் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளன என தேர்தல்கள் திணைக்களம் அறிவித்துள்ளது. (த-சி)

**கணினி திருத்தம்**
உங்கள் கணினிகள் பழுதடைந்து விட்டனவா? உடன் உங்களது வீடுகளுக்கே வந்து திருத்தி தருகின்றோம். அழையுங்கள்.
0779086737 GUNAA BEST PC
52, Hospital Road, Jaffna.

**கண்ணீர் அஞ்சலி**



அரியாலை எரிபொருள் நிரப்பு நிலைய
உரிமையாளர்
**ஆனந்தன் செல்வநாதன்**
அவர்கள் இறைபதம் எய்திய செய்தி அறிந்து மிக்க துயருறுவதுடன், அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அவரது ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.
சலூயா, சலுசலா, சதீபன்,
விஷ்ணுயா, டிஷானுயா, அபிஷன்,
திபிஷன், சுதேஷன்.
(30128) (10,18)

**கண்ணீரைக் காணிக்கையாக்குகின்றோம்**

எமது நிறுவனத்தின் நிர்வாக இணைப்பாளர்
செ.சர்வானந்தன் அவர்களின் பாசமிகு தந்தை



**ஆனந்தன் செல்வநாதன்**
(உரிமையாளர், அரியாலை மண்ணெண்ணெய் நிரப்பு நிலையம்)
அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதோடு, அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
சயன்ஸ் அக்கடமி,
நல்லூர்-அரியாலை.
இயக்குநர்,
ஆசிரியர்கள், மாணவர்கள்.
(சி/10732)(5.8)

**1 ஆம் ஆண்டு நினைவஞ்சலி**



அமரர்
சின்னப்பொடி
அப்புக்குட்டி
தோற்றம் 30.07.1930
மறைவு 13.08.2012

எம்மை அரவணைத்து ஆகாரம் தந்து
எம் உயர்வுக்கு எல்லாம் உடனிருந்து
ஏணியாய் உழைத்திட்ட உத்தமரே!
எமை இங்கு தவிக்கவிட்டு சென்ற
ஏக்கம் இன்னும் தணியவில்லையே!
எமது உள்ளத்தில் நிதமும் நன்றியுணர்வுடன்
எம் கண்கண்ட தெய்வத்தை மனதில்
கொள்கின்றோம்
"உமாபதி"
இமையாணன் கிழக்கு, உடுப்பிட்டி.
குடும்பத்தினர்.

## அன்ரனிஸ், அரியாலை ஐக்கியம் இறுதியாட்டத்தில் மோதுகின்றன



யாழ்ப்பாணம், ஒக.2
யாழ். உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் மட்டுவில் வளர்மதி சனசமூக நிலையத்தின் 48ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு மட்டுவில் வளர்மதி விளையாட்டுக் கழகம் நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுத் தொடரின் இறுதியாட்டத்துக்கு பாசையூர் சென். அன்ரனிஸ் விளையாட்டுக் கழகமும், அரியாலை ஐக்கிய விளையாட்டுக் கழகமும் தகுதி பெற்றுள்ளன.


முதலில் இடம் பெற்ற அரையிறுதியாட்டத்தில் அரியாலை ஐக்கிய விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து இளவாலை யங்ஹென்றிஸ் விளையாட்டுக்கழக அணி மோதியது.

அதில் அரியாலை ஐக்கிய விளையாட்டுக் கழக அணி 2:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று இறுதியாட்டத்திற்குத் தகுதி பெற்றது.

இரண்டாவதாக இடம்பெற்ற ஆட்டத்தில் பாசையூர் சென். அன்ரனிஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து நாவாந்துறை சென்.நீக்கிலஸ் விளையாட்டுக்கழக அணி மோதியது

அதில் பாசையூர் சென். அன்ரனிஸ் விளையாட்டுக் கழக அணி 3:1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று இறுதியாட்டத்திற்குத் தகுதிபெற்றது. (ற-23)

## விக்றோரியை வீழ்த்தியது மானிப்பாய் பரிஷ் வி.க



யாழ்ப்பாணம், ஒக.2
மானிப்பாய் பரிஷ் விளையாட்டுக் கழகம் நடத்தும் பாலகிருஷ்ணன் வெற்றிக் கிண்ண 20/20 கிரிக்கெட் சுற்றுத் தொடரில் கடந்த வாரம் இடம்பெற்ற ஆட்டம் ஒன்றில் மானிப்பாய் பரிஷ் விளையாட்டுக் கழகம் அபார வெற்றி பெற்றது.

மானிப்பாய் இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம் பெற்ற இறுதி ஆட்டத்தில் மானிப்பாய் பரிஷ் விளையாட்டுக் கழகமும் விக்றோரி விளையாட்டுக் கழகமும் மோதிக் கொண்டன.

முதலில் துடுப்பெடுத்தாடிய மானிப்பாய் பரிஷ் விளையாட்டுக் கழக அணி 20 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 8 இலக்குகளை இழந்து 147 ஓட்டங்களைப் பெற்றது.

அதில் வினோத் 40 ஓட்டங்களையும், சுபாஸ் 52 ஓட்டங்களையும், ஹரிகரன் 16 ஓட்டங்களையும் தமது அணி சார்பாகப் பெற்றனர்.

பந்து வீச்சில் விக்ரோறி விளையாட்டுக் கழக அணி சார்பில் ஐங்கரன் 3 இலக்குகளையும், விபுலன் 2 இலக்குகளையும், நகுல், செந்தூரன் ஆகியோர் தலா ஓர் இலக்கையும் வீழ்த்தினர்.

148 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய விக்ரோறி விளையாட்டுக் கழக அணி 16 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் சகல இலக்குகளையும் இழந்து 63 ஓட்டங்களை மட்டுமே பெற்றது.

அதில் கணேஸ் 13 ஓட்டங்களையும், சசி 11 ஓட்டங்களையும் தமது அணி சார்பாகப் பெற்றனர்.

பந்துவீச்சில் மானிப்பாய் பரிஷ் விளையாட்டுக் கழக அணி சார்பில் பிரதீப் 5 இலக்குகளையும் சுபாஸ், கிசோர் ஆகியோர் தலா ஓர் இலக்கையும் வீழ்த்தினர். (ற-23)

## இன்றைய ஆட்டங்கள்

யாழ்ப்பாணம், ஒக. 2
யாழ்.உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் புத்தூர் எவறெஸ்ட் விளையாட்டுக் கழகம் நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுத் தொடரில் இன்று வெள்ளிக்கிழமை கழக மைதானத்தில் இடம்பெறவுள்ள அரையிறுதி ஆட்டங்களில் மோதவுள்ள அணிகளின் விவரம்:

இரவு 7.30 மணி
நவஜீவன்ஸ் விளையாட்டுக் கழகம் எதிர் நாவாந்துறை சென்.நீக்கிலஸ் வி.க.

இரவு 8.45 மணி
நாவாந்துறை சென் மேரிஸ் விளையாட்டுக்கழகம் எதிர் பாஷையூர் சென்.அன்ரனிஸ் விளையாட்டுக்கழகம். (ற-23)

★★★

யாழ்ப்பாணம் ஒக.2
தெல்லிப்பழை நாமகள் விளையாட்டுக்கழகம் நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுத் தொடரில் இன்று வெள்ளிக்கிழமை கழக மைதானத்தில் இடம்பெறவுள்ள அரையிறுதி ஆட்டங்களில் பங்கு கொள்ளவுள்ள அணிகளின் விவரம்:

பிற்பகல் 4 மணி
தாவடி காளியம்பாள் வி.க. எதிர் மானிப்பாய் றெட்றேஞ்சஸ் வி.க.

மாலை 5 மணி
அராலிபாரதிவி.க.எதிர்இளவாலை யங்ஹென்றிஸ்வி.க (ற-23)

★★★

யாழ்ப்பாணம் ஒக.2
பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் வதிரி டைமன்ஸ் விளையாட்டுக் கழகத்தின் நூற்றாண்டு நிறைவையொட்டி நடத்தப்படும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் இன்று வெள்ளிக்கிழமை கழக மைதானத்தில் இடம்பெறவுள்ள ஆட்டத்தில் மோதவுள்ள அணிகளின் விவரம் :

பி.ப. 4 மணி
நாச்சிக்குடா சென் மேரிஸ் வி.க. எதிர் நவிண்டில் கலைமதி. (ற-23-34)

## சென்.ஜோன்ஸ் அணிக்கு சிறந்த அணிக்கான விருது



யாழ்ப்பாணம், ஒக.2
பாட்டா மற்றும் சண்டே ரைம்ஸ் இணைந்து நடத்தும் 'பாடசாலை பையன் 2013' கிரிக்கெட் விருது வழங்கும் நிகழ்வு இன்று வெள்ளிக்கிழமை மாலை 5 மணிக்கு கொழும்பு பண்டாரநாயக்க ஞுபாகார்த்த மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்த விருது வழங்கும் நிகழ்வில் வடமாகாணத்தில் சிறந்த கிரிக்கெட் அணியாக சென்.ஜோன்ஸ் கல்லூரியின் 19 வயதுக் கிரிக்கெட் அணி தெரிவு செய்யப்பட்டு விருது வழங்கி கௌரவிக்கப்படவுள்ளது.

இந்த நிகழ்வுகளுக்கு பிரதம விருந்தினராக வித்தன புஞ்சி கேஹு, குசலமெண்டிஸ் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (ற-23)



அண்மையில் பொலனறுவையில் இடம்பெற்ற 25 ஆவது தேசிய இளைஞர் விளையாட்டு விழாவின் இறுதிநாள் நிகழ்வுகளின் போது நடைபெற்ற கலைநிகழ்வுகளில் ஒரு காட்சி. (ற-23)

# இறுதியில் மோதுகின்றன ஞானம்ஸ், ஸ்ரீமுருகன்



ஞானம்ஸ் வி.க.



ஸ்ரீமுருகன் வி. க.

பருத்தித்துறை, ஒக. 2
பருத்தித்துறை குரும்பைகட்டி உதயசூரியன் விளையாட்டுக்கழகம் யாழ்.மாவட்ட கழகங்களிடையே நடத்தி வரும் மாபெரும் 10 பந்து பரிமாற்றங்கள் கொண்ட மென்பந்தாட்டச் சுற்றுப் போட்டியின் இறுதியாட்டத்துக்கு வதிரி ஸ்ரீமுருகன் விளையாட்டுக் கழக அணியும் கரவெட்டி ஞானம்ஸ் விளையாட்டுக் அணியும் தகுதி பெற்றுள்ளன.

முதலாவது அரையிறுதியாட்டத்தில் கரவெட்டி ஞானம்ஸ் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து மாலிசந்தி மைக்கல் விளையாட்டுக் கழகம் மோதியது.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற மைக்கல் விளையாட்டுக் கழக அணி முதலில் துடுப்பெடுத்தாட தீர்மானித்தது. இதன்படி களமிறங்கிய மைக்கல் அணியின் இலக்குகள் அனைத்தும் மளமளவென சரிந்து கொண்டிருந்தன. எனினும் மத்திய வரிசையில் களமிறங்கிய கோகுலன், வினோத் ஆகியோர் ஆட்டத்தை கையில் எடுத்து ஞானம்ஸ் அணியின் பந்து வீச்சுக்களை எல்லைக் கோட்டுக்கு வெளியே பறக்க விட்டனர்.

10 பந்து பரிமாற்றங்கள் நிறைவில் 9 இலக்குகளை இழந்து 99 ஓட்டங்களைப் பெற்றது மைக்கல் விளையாட்டுக் கழகம்.

துடுப்பாட்டத்தில் கோகுலன் 7 சிக்ஸர்கள் அடங்கலாக ஆட்டமிழக்காது 49 ஓட்டங்களையும், வினோத் 14 ஓட்டங்களையும் தர்சன் 8 ஓட்டங்களையும் பெற்றனர்.

ஞானம்ஸ் விளையாட்டுக் கழகத்தின் பந்துவீச்சில் ஜொ[illegible] 3 இலக்குகளையும் துவாரகன் 2 இலக்குகளையும் கைப்பற்றினர்.

இமாலய இலக்கான 100 ஓட்டங்களைத் துரத்த களமிறங்கிய ஞானம்ஸ் அணிக்கு ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்கள் உறுதியான அடித்தளம் இட்டனர். அதையடுத்து மத்திய வரிசை வீரர்கள் அழுத்தம் எதுவும் இல்லாமல் பந்துகளை எல்லைக்கோட்டுக்கு விரட்ட 9 பந்துப் பரிமாற்றங்களில் 7 இலக்குகளை இழந்து வெற்றி பெற்று இறுதியாட்டத்துக்கு தகுதி பெற்றது ஞானம்ஸ் விளையாட்டுக் கழக அணி.

துடுப்பா[illegible]த்தில் சேந்திரன் 27, [illegible] 13, கீதன் 11, துவாரகன் 10 ஓட்டங்களைப் பெற்றனர்.

பந்து வீச்சில் மாலிசந்தி மைக்கல் அணியின் முரளி, தர்சன் மற்றும் தினோஜன் ஆகியோர் தலா 2 இலக்குகளை வீழ்த்தினர்.

இரண்டாவது அரையிறுதி ஆட்டத்தில் வதிரி ஸ்ரீமுருகன் விளையாட்டுக் கழகமும் அண்ணாசிலையடி விளையாட்டுக் கழகமும் பலப்பரீட்சை நடத்த களமிறங்கின.

நாணயச் சுழற்சியில் வென்ற வதிரி ஸ்ரீமுருகன் அணியினர் முதலில் துடுப்பெடுத்தாட தீர்மானித்தனர்.

ஆரம்பம் முதலே அதிரடியாக ஆடிய அந்த அணியின் ஆரம்பவீரர் ராஜ் எதிரணியின் பந்துவீச்சை வெளுத்து வாங்கினார்.

10 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 4 இலக்குகளை இழந்து 121 ஓட்டங்களை குவித்தனர் ஸ்ரீமுருகன் அணியினர்.

துடுப்பாட்டத்தில் ராஜ் ஆறு சிக்ஸர்கள் உள்ளடங்கலாக 57 ஓட்டங்களையும், பவன் 20, அரிகரன் 19 ஓட்டங்களையும் பெற்றனர்.

அண்ணாசிலையடி சார்பாக பிரதாப் 2 இலக்குகளையும் பகிர் ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.

பதிலுக்கு மிகச் சவாலான இலக்கை கொண்டு துடுப்பெடுத்தாட களமிறங்கிய அண்ணா சிலையடி விளையாட்டுக் கழகத்தினருக்கு ஆரம்ப வீரர்கள் அதிரடியாக ஆடிய போதும் ஒரு பக்கம் இலக்குகள் வீழ்ந்து கொண்டிருந்தன. இதனால் அனைத்து இலக்குகளையும் இழந்து 9 பந்துப் புரிமாற்றங்கள் நிறைவில் 75 ஓட்டங்களை மாத்திரேமே பெற்றது அண்ணாசிலையடி விளையாட்டுக் கழக அணி. துடுப்பாட்டத்தில் சுசீலன் 23, டிலக்சன் 18, கஜன் 14 ஓட்டங்களை தமது அணி சார்பாக பெற்றுக் கொடுத்தனர்.

வதிரி ஸ்ரீமுருகன் விளையாட்டுக் கழகம் சார்பாக சதீஸ், ராஜ் ஆகியோர் தலா 2 இலக்குகளையும் டெஸ்மன் மற்றும் பவன் ஆகியோர் தலா ஓர் இலக்கையும் வீழ்த்தினார்கள்.

இதன் மூலம் அண்ணா சிலையடி விளையாட்டுக் கழகத்தினரை 46 ஓட்டங்களினால் வெற்றி பெற்று இறுதியாட்டத்துக்கு தெரிவாகியது வதிரி ஸ்ரீமுருகன் விளையாட்டுக் கழகம்.(ற-34)

# தென்னாபிரிக்காவை வீழ்த்தி இலங்கை அபார வெற்றி




இலங்கைக்குக் கிரிக்கெட் சுற்றுப்பயணம் மேற் கொண்டுள்ள தென்னாபிரிக்க அணிக்கும், இலங்கை அணிக்குமிடையிலான 5 ஆட்டங்கள் கொண்ட ஒரு நாள் சர்வதேசத் தொடரின் 5ஆவதும் இறுதியுமான ஆட்டத்தில் இலங்கை அணி 128 ஓட்டங்களால் அபார வெற்றிபெற்றது

நேற்றுமுன்தினம் கொழும்பு ஆர்.பிரேமதாச மைதானத்தில் இடம்பெற்ற இப்போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற இலங்கை அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி 50 பந்துப்பரிமாற்றங்களில் 4 இலக்குகளை மாத்திரம் இழந்து 307 ஓட்டங்களைக் குவித்தது.

முதலாவது இலக்காக குஷால் ஜனித் பெரேராவை ஆரம்பத்திலேயே இழந்த இலங்கை அணி 2ஆவது இலக்குக்காக 163 ஓட்டங்கள் பகிர்ந்தது.

அதன் பின்னர் டில்ஷான், சங்கக்கார இருவரும் அதிரடியாக ஆடியதோடு, சங்ககார இறுதிவரை ஆட்டமிழக்காது சிறப்பான அதிரடியை வெளிப்படுத்தினார்.

துடுப்பாட்டத்தில் இலங்கை அணி சார்பாக திலகரட்ண டில்ஷான் 110 பந்துகளில் 99 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்து தனது 18ஆவது சதத்திற்கான வாய்ப்பை மயிரிழையில் தவறவிட்டார். குமார் சங்கக்கார 45 பந்துகளில் அதிரடியாக 75 ஓட்டங்களையும், லஹிரு திரிமன்ன 93 பந்துகளில் 68 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் தென்னாபிரிக்க அணி சார்பாக மோர்னி மோர்க்கல், றயன் மக்லரன், லொன்வபோ சொற்சொபி, ஆரொன் பங்கிசோ ஆகியோர் தலா ஓர் இலக்கை கைப்பற்றினர்.

308 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்க அணி 43.5 பந்துப் பரிமாற்றங்களில் சகல இலக்குகளையும் இழந்து 179 ஓட்டங்களை மாத்திரம் பெற்று 128 ஓட்டங்களால் படுதோல்வியடைந்தது.

முதலாவது இலக்குக்காக 5.4 பந்துப்பரிமாற்றங்களில் 35 ஓட்டங்களைப் பகிர்ந்த தென்னாபிரிக்க அணி, ஒரு கட்டத்தில் ஒரு இலக்கை இழந்து 60 ஓட்டங்களுடன் பலமான நிலையில் காணப்பட்ட போதிலும், ஹசிம் அம்லா ஆட்டமிழந்ததைத் தொடர்ந்து இலக்குகளை தொடர்ச்சியாக இழந்து தடுமாறித் தோல்வியடைந்தது.


துடுப்பாட்டத்தில் தென்னாபிரிக்க அணி சார்பாக ஏபி.டி.வில்லியர்ஸ் 51 பந்துகளில் 51 ஓட்டங்களையும், றயன் மக்லரன் 73 பந்துகளில் 29 ஓட்டங்களையும், குயின்டன் டீ கொக் 21 பந்துகளில் 27 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் இலங்கை அணி சார்பாக அஜந்த மெண்டிஸ், சுரங்க லக்மால் இருவரும் தலா 3 இலக்குகளையும், சச்சித்திர சேனநாயக்க 2 இலக்குகளையும், திலகரட்ண டில்ஷான், திஸர பெரேரா ஆகியோர் தலா ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.

5 ஆட்டங்கள் கொண்ட இத்தொடரை இலங்கை அணி இதன் மூலம் 4-1 என்ற கணக்கில் கைப்பற்றியுள்ளது.

இப்போட்டியின் நாயகனாக திலகரட்ண டில்ஷான் தெரிவானதோடு, இத்தொடரின் நாயகனாக குமார் சங்க கார தெரிவானார்.

(ற)



## '20/20' தகுதிகாண் தொடர்

# பாக். இலங்கை அணிகள் கிண்ணத்தை பகிர்ந்தன



அயர்லாந்தில் இடம்பெற்று வந்த மகளிர் '20/20' உலக் கிண்ண தகுதிகாண் தொடரின் இறுதியாட்டம் முடிவற்ற ஆட்டமாக மாற்றப்பட்டது. அதன் காரணமாக இலங்கை, பாகிஸ்தான் அணிகள் கிண்ணத்தைப் பகிர்ந்து கொண்டுள்ளன.

டப்ளினில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற இந்த ஆட்டத்தில் நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற இலங்கை அணி முதலில் களத்தடுப்பில் ஈடுபடத் தீர்மானித்தது.

அதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் அணி 20 பந்துப்பரிமாற்றங்களில் 5 இலக்குகளை இழந்து 112 ஓட்டங்களைப் பெற்றது.

இணைப்பாட்டங்களைத் தொடர்ச்சியாக வழங்கிய போதிலும், அவ்வணி மெதுவான ஆட்டத்தை வெளிப்படுத்தியதால் அவ்வணியால் 112 ஓட்டங்களை மாத்திரம் பெற்றுக் கொள்ளக் கூடியதாகக் காணப்பட்டது.

துடுப்பாட்டத்தில் பாகிஸ்தான் அணி சார்பாக நயன் அபிரி 50 பந்துகளில் 45 ஓட்டங்களையும், பிஸ்பா மரூப் 35 பந்துகளில் ஆட்டமிழக்காமல் 35 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் இலங்கை அணி சார்பாக சண்டிமா குணரத்ன 4 பந்துப்பரிமாற்றங்களில் 7 ஓட்டங்களுக்கு 2 இலக்குகளையும், சாமனி செனவிரத்ன 4 பந்துப்பரிமாற்றங்களில் 25 ஓட்டங்களுக்கு 2 இலக்குகளையும் கைப்பற்றினர்.

பாகிஸ்தான் அணியின் இனிங்ஸின் பின்னர் மழை ஆரம்பித்ததன் காரணமாக ஆட்டம் நேற்றைய தினத்திற்கு ஒத்திவைக்கப்பட்டது.

எனினும் இன்றைய தினத்திலும் போட்டி ஆரம்பிக்க முடியாது போனதால் இலங்கை, பாகிஸ்தான் அணிகள் கிண்ணத்தைப் பகிர்ந்து கொள்ளும் என அறிவிக்கப்பட்டது.

(ற)

# இந்தியாவிடம் வீழ்ந்தது சிம்பாப்வே




சிம்பாப்வேக்கு கிரிக்கெட் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள இந்திய அணிக்கும், சிம்பாப்வே அணிக்குமிடையிலான 5ஆட்டங்கள்கொண்ட ஒருநாள் சர்வதேசத் தொடரின் 4ஆவது போட்டியில் இந்திய அணி 9 இலக்குகளால் வெற்றிபெற்றது.

புலவாயோவில் இடம்பெற்ற இப்போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற இந்திய அணி முதலில் களத்தடுப்பில் ஈடுபடத் தீர்மானித்தது.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய சிம்பாப்வே அணி 42.4 பந்துப்பரிமாற்றங்களில் சகல இலக்குகளையும் இழந்து 144 ஓட்டங்களை மாத்திரம் பெற்றது.

ஆரம்பத்திலிருந்து இலக்குகளை விரைவாக இழந்த அவ்வணி, 5 இலக்குகளை இழந்து 47 ஓட்டங்களுடன் தடுமாறியது. 6ஆவது இலக்குக்காக 80 ஓட்டங்கள் பகிரப்பட்ட போதிலும், 6ஆவது இலக்காக மல்கொம் வோலர் வீழ்த்தப்பட, சிம்பாப்வே தடுமாறி வீழ்ந்தது.

துடுப்பாட்டத்தில் சிம்பாப்வே அணி சார்பாக எல்ற்றன் சிக்கும்புரா 66 பந்துகளில் 50 ஓட்டங்களையும், மல்கொம் வோலர் 77 பந்துகளில் 35 ஓட்டங்களையும், வியூசி சிபண்டா45பந்துகளில் 24 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் இந்திய அணி சார்பாக அமித் மிஷ்ரா 25 ஓட்டங்களுக்கு 3 இலக்குகளையும், அறிமுக வீரர் மோகித் சர்மா 26 ஓட்டங்களுக்கு 2 இலக்குகளையும், ரவீந்திர ஜடேஜா 28 ஓட்டங்களுக்கு 2 இலக்குகளையும், ஜெய்தேவ் உனத்கட், மொஹமட் ஷமி இருவரும் தலா ஓர் இலக்கையும் கைப்பற்றி னர்.

145 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய இந்திய அணி 30.5 பந்துப்பரிமாற்றங்களில் ஓர் இலக்கை மாத்திரம் இழந்து வெற்றி இலக்கை அடைந்தது.

முதலாவது இலக்கை 23 ஓட்டங்களுக்கே இழந்த அவ்வணி, அதன் பின்னர் 2ஆவது இலக்குக்காக பிரிக்கப்படாத 122 ஓட்டங்களைப் பகிர்ந்து வெற்றிபெற்றனர்.

துடுப்பாட்டத்தில் இந்திய அணி சார்பாக சுரேஷ் ரெய்னா 71 பந்துகளில் ஆட்டமிழக்காமல் 65 ஓட்டங்களையும், ரோகித் சர்மா 90 பந்துகளில் 64 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் சிம்பாப்வே அணி சார்பாக ரென்டாய் சத்தர ஓர் இலக்கைக் கைப்பற்றினார்.

ஆட்ட நாயகனாக ரோகித் சர்மா தெரிவானார்.

(ற)



# வடமாகாண சபைத் தேர்தல் 2013

## தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் யாழ் மாவட்ட வேட்பாளர்

துணிச்சல் மிக்க இளம் சட்டத்தரணி

# கேசவன் சஜந்தன்





**கணக்கீடு**
திரு.பாலகஜன்
B.com (Jaf). H.N.Dip.in.Acc
*சனி, ஞாயிறு வகுப்புக்குரிய புதிய பிரிவுகள் ஆரம்பம் 03.08.2013 சனி (நாளை)*

| Centre | A/L 2014 | A/L 2015 |
|---|---|---|
| NEC ஆனைப்பந்தி | 6-7 கம்பனி<br>7-8 பங்குடமை<br>12-1 Paper class | 8-9 வங்கிஇணைக்கற்கூற்று<br>1-2 Paper Class |
| NEC யாழ்ப்பாணம் | 9-10 கம்பனி<br>11-12 பங்குடமை<br>12-1 Paper Class | 10-11 வங்கி இணைக்கற்கூற்று<br>1-2 Paper Class |



**மெய்யியல்**
மீட்டல் விரிவுரை கள்
யாழ் போதனை வினா
விடைக் குறிப்புக்கள்
GA.Q, B.A.I, B.A II
கலாநிதி
**வே.யுகபால சிங்கம்**
யாழ்ப்பாணக் கல்லூரி
வர்த்தக வங்கிக்கு அருகில்
ஆஸ்பத்திரி வீதி,
(30118) யாழ்ப்பாணம்.



## உலகின் எந்த மூலைக்கும் படிக்க, உழைக்க எம்மிடம் மட்டுமே....

**டென்மார்க்கில் படிக்க இரண்டு இலட்சம் வரை உழைக்க**

**சட்ட ஆலோசனைக்கு**

(30097)(10,6)

**திசைகாட்டி (பிறைவேற்) லிமிட்**
175, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 221 9016, 021 568 9090





**அதி சொகுசு வாகனங்கள் வாடகைக்கு**



**NPC Rent A Car**
அரச, தனியார் அலுவலகங்கள், வீட்டில் இடம்பெறும் நற்காரியங்களுக்கு அதி நவீன சொகுசு கார்கள், வான்கள், பிக்கப்புகள், 4X4 வாராந்த, மாதாந்த, வருட அடிப்படையில் எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம். **NPC ENTERPRISES**
**0 718 486 160**



**SLEAS கருத்தரங்கு**
பாடசாலை விடுமுறை நாள்களில் புதிய பிரிவு ஆரம்பமாகின்றது.
ஆரம்பம்: திங்கள் (12.08) காலை 9.30 மணி
★ 12ஆம்,13ஆம்,14ஆம் திகதிகளில் காலை 9.30 மணி தொடக்கம் பி.ப 3.30 மணிவரை துறை சார் விரிவுரையாளர்களால் மட்டும் நடத்தப்படும்.
T.P: 0754164564
யாழ்ப்பாணக் கல்லூரி பட்டப்படிப்புகள் பிரிவு
(யாழ். ஆஸ்பத்திரி வீதி, கொமர்ஷல் வங்கிக்கு அருகில்)
(சி/10739)(10,6)



**BIT @ MIS** BIT
கொழும்புப் பல்கலைக்கழகத்தின் தகவல் தொழினுட்பமாணி
கடந்த 12 வருடங்களாக யாழில்.
**R.Kumaran - B.Sc.**
74, Sabapathy Lane, Jaffna. .0776577359



*மீண்டும் யூனிவேர்சலில்*
வரலாறு
**S.பிரபா**
A/L 2014, 2015
ஆரம்பம்
சனி 8 a.m
**யூனிவேர்சல்**
கந்தர்மடம்



வணிகக்கல்வி
**S.பிரதீபன்**
A/L 2015 புதிய பிரிவு ஆரம்பம்
சனி 8 a.m
ஆரம்ப அலகிலிருந்து......
A/L 2014 சனி
வணிக முகாமைத்துவ 9am
**யூனிவேர்சல்**
கந்தர்மடம்



**விக்னா கல்வி நிறுவனம்**
52, ஸ்ரான்லி வீதி, யாழ்.
A/L 2014, 2015
கலை, வர்த்தக வகுப்புகள்
ஆரம்பம்: 03.08.2013
காலை 8 மணி
வழமையான ஆசிரியர் குழாம்
(சி/10726)(10,6) அனுமதிகள் வழங்கப்படுகின்றன.



**விக்னா கல்வி நிறுவனம்**
52, ஸ்ரான்லி வீதி, யாழ்.
3ஆம் தவணைக்கான புதிய பிரிவுகள்
தரம்: 6,7,8,9,10,O/L
ஆரம்பம்: 03.08.2013
காலை 9.30 மணி
வழமையான நேர அட்டவணைப்படி
புதிய பிரிவிற்கான அனுமதிகள் வழங்கப்படுகின்றன.
(சி/10727)(10,6)


# சடலம் மீட்பு

யாழ்ப்பாணம், ஓக.2

குடும்பத்தினரைப் பிரிந்து தனிமையில் வசித்து வந்த ஒருவர் உருக்குலைந்த நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இளவாலை பெரியவிளானைச் சேர்ந்த அன்ரனி- டேவிட் அற்புதன் (வயது-45) என்ற இரண்டு பிள்ளைகளின் தந்தையே அழுகிய நிலையில் நேற்றுமுன்தினம் அவரது வீட்டிலிருந்து சடலமாக மீட்கப்பட்டுள்ளார். சடலம் யாழ்.போதனா வைத்தியசாலையில் பொலிஸாரால் ஒப்படைக்கப்பட்டு விசாரண்ணயின் பின் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. (ஐ-4-400)


**THE SCIENCE CORNER**
CLOCK TOWER LANE - JAFFNA.
PHYSICAL CHEMISTRY
ஆரம்பம்: 02.08.2013 வெள்ளிக்கிழமை
வெள்ளி 4 ½ - 5½ P.M
By : G-BENO (சி/9766)(10,6,3)



**O/L Science** *Paper Class* @ **Edissan Academy**
English Medium
by
**RAGUMAR**
ஆரம்பம் :- நாளை 03.08.2013 2.30 pm & 5 pm
0750414979



உதயன்
விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111



**After O/L** பரீட்சைப் பெறுபேறுகள் வெற்றியோ தோல்வியோ

யாழ்ப்பாணத்தில் மட்டும் ஆயிரத்திற்கும் மேற்பட்ட வெற்றிடங்களுடைய தனியார் வைத்தியத்துறையில் ஆய்வுகூடம் முதல் மற்றைய அனைத்து வைத்திய பணிகளிலும் வைத்திய அதிகாரிகளிற்கு உதவியாளராகச் செயற்படும் பதவிக்கான பயிற்சியினை இலங்கை மருத்துவ கவுன்சிலில் பதிவு செய்த அரச வைத்தியர்கள் மூலமாக நடாத்தி அவர்கள் கையொப்பமிட்ட சான்றிதழையும் வழங்கிப்பயிற்சி முடிவில் தொழில் வாய்ப்பையும் வழங்குகிறது கே.யு எடியுகேசன் நிறுவனம்.

உங்கள் O/L மற்றும் A/L கல்வித்தரம் வாழ்வின் முன்னேற்றத்திற்கு தடை அல்ல....
**KU EDUCATION**
Creating Employable Graduates

Medi Lab
Medi Clinics
Pharmacies



**CMA- மருத்துவ உதவியாளர் பயிற்சி**
செயல்முறைப்பயிற்சியுடன் கூடிய 6 மாதகாலப்பயிற்சி நெறி.
பயிற்சிக்கட்டணம் 12,500/=
KU Education
விபரங்களுக்கு - 0777302882/021-3208342
http://edu.kugroup.info
இல 75,கோவில் வீதி(லாவா வைத்தியசாலை மேல்மாடி),யாழ்ப்பாணம்.



# வெற்றிமேல் வெற்றி

## 6 மாத கால VISIT VISA வென்றனர்

28, மத்தியூஸ் வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரியைச் சேர்ந்த காங்கேசன்துறை சிமெந்துத் தொழிற்சாலை இளைப்பாறிய உத்தியோகத்தரான A.S.M.L தேவராஜாவும் அவரது மனைவியான திருமதி பிறமரஞ்சனி தேவராஜாவும் திசைகாட்டியின் சிறப்பான வழிகாட்டலில் இங்கிலாந்துக்கான 6 மாத விசிற் விசாவை வென்றுள்ளனர்.

**எனவே விசிற் விசா நீண்ட காலம் வென்றிட திசைகாட்டியிடம் நம்பி வாருங்கள்.**

(30098)(10,3)

**திசைகாட்டி (பிறைவேற்) லிமிட்**
175, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 221 9016, 021 568 9090





**BRITISH COLLEGE OF HIGHER STUDIES**
BCHS
சர்வதேச பாடத்திட்டத்தின் தராதரத்திற்கு அமைய நவீன தொழில் நுட்பத்துடன் வழங்கும்

**Spoken English with Grammar** 1 1/2 Months
(ஆங்கிலத்தில் பேசுவதற்கு 100% உத்தரவாதம்) (Quick Learning course)

**Diploma in English** 2 1/2 Months

* எமது கற்கை நெறிகள் Writing, Speaking, Reading, Listening என வகைப்படுத்தப்பட்டு ஒவ்வொரு பிரிவும் மிகச்சிறந்த ஆசிரியர்களினால் கற்பிக்கப்படுகின்றது.
* O/L, A/L பரீட்சை எழுதிய மாணவர்கள், தொழில் தேடுவோர், தொழில் புரிவோர் மற்றும் ஆங்கிலம் கற்க விரும்பும் அனைவருக்கும் ஏற்றது.
* Excellent Teachers' Panel & Individual Attention

Jaffna Branch:
No. 15, Siramblyady Lane,
off Stanley Road, Jaffna. Tel: 021 222 4550

Vavuniya Branch:
No. 3, 6th Lane, Vairavarkovil Veethy,
Vairavarpulliyamkulam,
Vavuniya. Tel: 024 324 5287

Hot Lines: 0777 222 422 / 0777585913 / 071 4299935 / 0777730074

Evening & Weekend Classes for Employees also available..

Batch1 : 03.08.2013
Batch2 : 05.08.2013
Batch3 : 10.08.2013
Batch4 : 12.08.2013



**I.C.T**
A/L-2015
விரிவுரையாளர் » நா.அம்பி B.Sc. M.Ed.
புதிய பிரிவு
பொருளியற் கல்லூரி
யாழ் நகரில்:
சனி, ஞாயிறு 8 A.M
இணுவிலில்:
செவ்வாய், வியாழன் 4 P.M
BARATHY
சித்தன்கேணியில்
சனி, ஞாயிறு 5 P.M
உங்கள் அனுமதிகளை விரும்பிய இடங்களில் பெற்றுக்கொள்ளலாம்.



**கொழும்பு பல்கலைக்கழக தகவல் தொழில்நுட்ப டிகிரி வெளிவாரிப்பட்டப்படிப்பு-MCS மாணவர்கள் சிறந்த பெறுபேறு**

A+,A,2B+



S.Mathudramy

**BIT-Degree** பெறுபேறுகளில் **MCS** நிறுவன மாணவர்கள் தொடர்ந்தும் உயர்ந்த பெறுபேறுகளை பெற்று வருகின்றனர். உயர்தரப்பரீட்சையில் 3 பாடங்களில் சித்தியடைந்தவர்கள் நேரடியாகவும், சித்தியடையத்தவறியோர் **FIT** கற்கை நெறி மூலமும் **MCS** நிறுவனத்தில் **BIT + Computer Engineering-USA** இல் இணைந்து கொழும்பு பல்கலைக்கழகத்தின் பட்டதாரியாகலாம். **A/L** 2013 மாணவர்களும் விண்ணப்பிக்கலாம். பல்கலைக்கழக மாணவர்களும் இக் கற்கை நெறியை மேலதிகமாக தொழில் வாய்ப்புக்கருதி பயில்வதற்கு பல்கலைக்கழக மாணியங்கள் ஆணைக்குழு அனுமதி வழங்கி உள்ளது. மேலதிக விபரங்கள் யாழ் பல்கலைக்கழகத்திற்கு அண்மையில் உள்ள **MCS** வளாகத்தில். புலமைப்பரிசிலிற்கு **BIT<your name> type & send sms to 0772395895**

2A,B-,C+



M.Senthuran


## மரண அறிவித்தல்

### ரவிந்தன் பரமசிவம்

(St. John's College- 91 Batch)



புத்தூர் மேற்கைச் சேர்ந்த ரவிந்தன் பரமசிவம், இறைவன் பணியில் தன் வாழ்க்கையை அர்ப்பணித்து (30.07.2013) செவ்வாய்க்கிழமை இறைவனடி எய்தினார்.

அன்னார் புத்தூர் மேற்கைச் சேர்ந்த முன்னாள் விதானையார் சங்கரப்பிள்ளையின் பேரனும், தெல்லிப்பழை, கொல்லங்கலட்டியைச் சேர்ந்த காலஞ்சென்ற பரமசிவம், புத்தூரைச் சேர்ந்த திருமதி ராசாத்தி பரமசிவம் தம்பதியரின் கனிஸ்ட புதல்வனும், ராகுலன் (88 Batch- ஆஸ்திரேலியா), ராகவன் (90 Batch- ஆஸ்திரேலியா), ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதி அடக்க ஆராதனை இன்று (02.08.2013) வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு இல. 111, கண்டி வீதி, சுண்டிக்குளியில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
**குடும்பத்தினர்.**
(0775103104)

(30122)(10,6)

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 02.08.2013 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.